உதயன்

27

www.onlineuthayan.com

32: பக்கங்கள் சுடர் 27 கதிர் 278 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 14 வியாழக்கிழமை (30/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

# அவசரமாக இந்தியா விரைகிறார் மஹிந்த

## மன்மோகன், சோனியாவுடன் செப்.20 இல் முக்கிய பேச்சு

கொழும்பு, ஓக.30

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான விஜயமொன்றை மேற்கொண்டு செப்ரெம்பர் 20ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி உட்பட்ட முக்கியஸ்தர்களை ஜனாதிபதி மஹிந்த சந்தித்து பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் வலுத்துவருகிறது என இந்தியா

**அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை மரியாதை நிமித்தம் மாத்திரமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்திப்பார்.**



இராஜதந்திர மட்டத்தில் எதிர்ப்புகள் வலுவடைந்துவரும் ஒரு சூழ்நிலையில் ஜனாதிபதியின் இந்த விஜயம் இடம்பெறுகிறது.

அதேசமயம், இலங்கையில் சீனாவின் பங்களிப்பு இந்திய - இலங்கை உறவுகளில் தாக்கங்

பார்க்க பக்கம் 4

### சந்நிதி முருகனுக்கு இன்று தேர்



யாழ்ப்பாணம், ஓக.30

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கும், தீர்த்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 8 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து வேல் சுவாமி, விநாயகப் பெருமான் சகிதம் ஆறுமுக சுவாமியான முருகப் பெருமான் தனித்தேரில் எழுந்தருளுவார். தொடர்ந்து தேரில் முருகப் பெருமானுக்கு விசேட பூசைகள், அர்ச்சனைகள் நடைபெற்று பிற்பகல் இருப்பிடம் திரும்புவார்.

தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு விசேட பூசைகளைத் தொடர்ந்து தீர்த்தத் திருவிழா நடைபெறும். அன்றைய தினம் காலை 6 மணிக்கு இடம்பெறும் மௌனத் திருவிழாவுடன் வருடாந்தப் பெருந்திருவிழா நிறைவுறும். பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ மேலதிகமாக 5 பஸ் வண்டிகளைச் சேவையில் ஈடுபடுத்தவுள்ளது. (ந-8)

### 5
செயற்திட்ட அறிக்கைகளை வெளியிடுவதை விடுத்து செயலில் இறங்குங்கள். அரசுக்கு இடித்துரைத்தார் கனேடிய உயர் ஸ்தானிகர்

### 8
மும்பைத் தாக்குதலாளி அஜ்மல் கசாப்புக்கு தூக்குத் தண்டனையை உறுதி செய்தது இந்திய உயர் நீதிமன்றம்.

### 9
நிலவில் கால் பதித்த நீல் ஆம்ஸ்ரோங்குக்காக அரைக்கம்பத்தில் பறந்தது அமெரிக்கக் கொடி.

### 10
கரீபியன் கடலில் ஏற்பட்ட இசாக் புயலால் அமெரிக்காவின் 4 மாகாணங்களில் அவசர நிலைமை பிரகடனம்.

## தீர்வை முன்வைக்கும்வரை போர்க்குற்றச்சாட்டு நீடிக்கும்

### திருமலையில் சம்பந்தன்

திருகோணமலை, ஓக.30

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும் நியாயமானதும் நிலைத்து நிற்கக்கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணும்வரை இலங்கை அரசு மீதான போர்க்குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வலியுறுத்திக் கொண்டே இருக்கும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருமலை மாவட்ட

பார்க்க பக்கம் 4

## கடலை வாங்கிய சிறுவனை காவு கொண்டது 'ஹைஏஸ்'

### பிரான்பற்றில் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஓக.30

கோயில் திருவிழாவில் கடலை வாங்கச் சென்ற சிறுவன், ஹைஏஸ் வாகனம் மோதித் தள்ளியதில் துடிதுடித்து உயிரிழந்தான்.

பிரான்பற்று முருகன் ஆலய வளாகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தக் கோரச் சம்பவத்தில் சங்கானையைச் சேர்ந்த சிவனேசன்- கவிதரன் (வயது-4) என்ற சிறுவனே பரிதாபமாக உயிரிழந்தான்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

பிரான்பற்று முருகன் ஆலயத் திருவிழாவுக்கு சென்ற சிறுவன், கடலை வாங்கி விட்டு வீதியைக் கடக்க முற்பட்டபோது வேகமாக வந்த ஹைஏஸ் வாகனம் ஒன்று மோதித் தள்ளியது. இதன்போது படுகாயமடைந்த சிறுவனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது இடைவழியில் அவன் உயிரிழந்தான்.

இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட

பார்க்க பக்கம் 4

### சாவகச்சேரியில் வீதிவிபத்துகள்; ஐவர் படுகாயம்

தென்மராட்சி, ஓக.30

சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் படுகாயமடைந்த ஐவர் சாவகச்சேரி, யாழ்.போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் பஸ் ஒன்று புத்தூர் வேம்பிராய் பகுதியில்

பார்க்க பக்கம் 4

## காலியில் தாக்குதலுக்குள்ளான தமிழ்க் கைதியின் நிலை மோசம்

### நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்

கொழும்பு, ஓக.30

மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியான சுந்தரம் சதீஸ் நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு திடீரென மாற்றப்பட்டார்.

வழக்கு விசாரணை ஒன்றுக்காக காலி நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட சதீஸ் வழக்குத் தவணையின் பின்னர் சுயநினைவற்ற நிலையில் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவர் நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 50 ஆவது விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பார்க்க பக்கம் 4

## வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம்; தமிழ்க் கட்சிகள் கலந்துகொள்ளா

வவுனியா, ஓக.30

'காணாமல் போனோரின் விவரங்களை அரசு உடன் வெளியிட வேண்டும்' என்று கோரி இன்று காலை வவுனியாவில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் தமிழ்க் கட்சிகள் எவையும் கலந்து கொள்வதில்லை என்று முடிவெடுத்துள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் முக்கியஸ்தர்களுக்கிடையிலான கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

காணாமல் போனோரைத் தேடியறியும் குழு இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. ஆயினும், போரின்போது படைவீரர்களும் காணாமல் போயினர் என்பதை நிலைநிறுத்தவே அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட

பார்க்க பக்கம் 4

## ஆஸி. செல்ல முயன்ற 123 பேர் நேற்றும் கைது

வடமராட்சி, ஓக. 30

ஆஸ்திரேலியா நோக்கிப் பயணிக்க முயன்ற 123 பேர் நேற்றும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சுண்டிக்குளம் மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுண்டிக்குளம் கடல் பகுதியில் வைத்து 'லங்கா' மாதா என்ற கப்பல் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டபோது அதில் 61

பார்க்க பக்கம் 4

## மீளக்குடியமர முடியாமல் முகாமில் 3 ஆயிரம் பேர்

வவுனியா, ஓக.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து போரினால் இடம்பெயர்ந்த சுமார் 852 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் இன்னும் மீளக்குடியமர்த்தப்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் மெனிக்பாம் நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்றில் அம்பலவன் பொக்கணையில் 127 குடும்பங்களைச்

பார்க்க பக்கம் 4

### ஆனந்தபுரம், மந்துவிலில்

## மிதிவெடி அகற்றாமையால் மீளக்குடியமர்வு தாமதம்

வவுனியா, ஓக.30

மிதிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியடையாத காரணத்தால் மந்துவில், ஆனந்தபுரம் ஆகிய இடங்களில் மீளக்குடியமர்வு நடவடிக்கை தாமதமடைவதாக முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெயர்ந்து மெனிக்பாம் நலன்புரி நிலை

பார்க்க பக்கம் 4

## சீனப் பாதுகாப்பு அமைச்சர் கொழும்பில் மையமிட்டார்

### 5 நாள்கள் தங்கியிருப்பார்

கொழும்பு, ஓக.30

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லி தலைமையிலான உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழு நேற்று கொழும்பை வந்தடைந்தது.

கொழும்பில் இந்திய - இலங்கை இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுகள் நடைபெற்று வருகின்ற நிலையில், லியாங் குவாங்லி தலைமையிலான குழுவின் விஜயம் அமைந்துள்ளது.

இராணுவத்தினருக்கான பயிற்சி மற்றும் போர்ப் பயிற்சி, ஏனைய இராணுவ உதவிகள் ஆகியன தொடர்பான இருதரப்புப் பேச்சுகளில்

பார்க்க பக்கம் 4

## இணை அமைச்சர் கருத்தால் தமிழ்நாட்டில் போர்க்கொடி

சென்னை, ஓக.30

இலங்கை நட்புநாடாக இருப்பதால் அதன் படைகளுக்கு இந்தியா தொடர்ந்து பயிற்சி அளிக்கும் என்று இந்தியப் பாதுகாப்பு இணை அமைச்சர் பல்லம் ராஜு வெளியிட்ட கருத்து, தமிழகத்தில் அரசியல் கட்சிகளிடையே கடும் கொந்த

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



இலங்கை வந்த சீனப் பாதுகாப்பு அமைச்சர் லியாங்-கு குவாங்கியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## மீசாலையில் டெங்கு நோயாளி கட்டுப்பாட்டுப் பணிகள் தீவிரம்

### சுற்றுச் சூழலைப் பேணாதோர் மீது நடவடிக்கை

தென்மராட்சி, ஓக.30

மீசாலை மேற்குப் பகுதியில் டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாக சாவகச்சேரி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் இருந்து வந்த 22 வயதான இளைஞர் ஒருவரே டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மீசாலை மேற்கு மாத கோயிலடிப் பகுதியில் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது டெங்கு நுளம்பு பரவும் வகையில் வீட்டுச் சூழலை வைத்திருந்த மூன்று பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. நுளம்பு பெருகும் வகையில் வீட்டுச் சுற்றாடலை வைத்திருந்த மூவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இருவரும் காரைநகரைச் சேர்ந்த ஒருவருமே இந்த அபராதச் தொகையைச் செலுத்தினர். இதேவேளை நயினாதீவில் கடைக்கு முன்பாக குப்பைகளை வைத்திருந்த தென் பகுதியைச் சேர்ந்த உரிமையாளர்கள் மூவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

## விபத்தில் படுகாயமடைந்தவர் உயிரிழந்தார்

சண்டிலிப்பாய் பகுதியில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் 12 நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கல்வளை வீதி சண்டிலிப்பாயைச் சேர்ந்த வைரமுத்து தேவராசா (வயது 50) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கார் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து சங்கானை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

## இந்திய மீனவர் போராட்டம் காலம் கடந்த ஞானம்

### எனினும் கடல் வளத்தை காக்க உதவும் என்கிறது கடற்றொழிலாளர் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

இழுவைப் படகுக்கு எதிராக போராட்டம் நடத்திய தமிழக மீனவர்களின் காலம் கடந்த ஞானத்தை வரவேற்கிறேன். இவர்களின் இந்த நடவடிக்கை மூலம் எதிர்காலத்தில் வட பகுதி மீனவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்று கூற முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் தமிழகத்தின் ராமநாதபுரம் மீனவர்கள் அந்தப் பகுதி மீனவர் சங்கத் தலைவர் போஸ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர். இழுவை, மடி வலைகளைப் பயன்படுத்தியும் ஏனைய தடைசெய்யப்பட்ட மீன்பிடிகளைக் கையாண்டும் தமிழக கடற்கரைப் பிரதேசங்களில் மீன்பிடி தொழிலில் சிலர் ஈடுபட்டு வருவதாகவும் அதனைத் தடைசெய்யக் கோரி இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2004ஆம் ஆண்டு கொழும்பில் கியூடெக் அலுவலகத்தில் அருட் தந்தை ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்திய இலங்கை மீனவரிடையேயான பேச்சின் போது இழுவைப் படகு மற்றும் சட்டவிரோத மீன்பிடிகளால் ஏற்படும் கடல் வள அழிவு தொடர்பில் இந்திய மீனவ பிரதிநிதிகளுக்கு எடுத்து விளக்கப்பட்டிருந்தது.

அவர்கள் அந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆனால் அதற்கு இணங்க இன்றுவரை அவர்கள் செயற்படவில்லை. இதனால் எமது வடபகுதி மீனவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தற்போது குறித்த மீன் பிடி முறைக்கெதிராக அவர்களே போராட்டம் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

இது காலம் கடந்த ஞானம் தான் எனினும் வரவேற்கத் தக்க விடயம். இதன் மூலம் சட்ட விரோத மீன் பிடி முறைகளைத் தவிர்த்து கடல் வளத்தை பாதுகாக்க அவர்கள் ஒத்துழைத்தால் வட பகுதி மீனவர்களுக்கு நல்ல தொரு வாய்ப்பு கிடைக்கும்.

இலங்கை இந்திய மீனவர் சமூகத்திற்கு இடையில் இப்போது பேச்சுக்களை முன்னெடுப்பதன் மூலம் தடை செய்யப்பட்ட மீன் பிடி முறைகளை முற்றாக ஒழித்துவிட முடியும். - என்றார். (10-5)

# தமிழ்க் கூட்டமைப்பும் மு.காவும் கிழக்கில் இன, மதவாதப் பிரசாரம்

## இப்படிக் கூறுகிறது அரசு

கொழும்பு, ஓக.30

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக இனவாத, மதவாத பிரசாரங்களை கிழக்கில் மேற்கொண்டுவருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அவற்றை உடனடியாக நிறுத்தவேண்டும் எனத் தெரிவித்த அரசு, மண்ணிலே நெல்லை விதைத்தால் நெல்லை அறுவடை செய்யலாம். ஆனால், மக்கள் மனதில் இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்தால் அவற்றால் ஏற்படும் ஆபத்துகளையே நாம் அறுவடை செய்யவேண்டியேற்படும் எனவும் தெரிவித்தது.

எமது கட்சியும் ஒரு காலத்தில் இனவாத, மத வாத ரீதியான பிரசாரங்களை மேற்கொண்டது. அதற்காக நாம் மிகவும் வருந்துகின்றோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாட்டிலுள்ள அனைத்து இன மக்களிடையேயும் கட்டியெழுப்பப்பட்டுள்ள ஒற்றுமையையும், சமாதானத்தையும் சீர்குலைக்கும் வகையில் எவரும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடக்கூடாது என அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளருமாகிய டலஸ் அழகப்பெரும நேற்றுத் தெரிவித்தார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக இனவாத, மதவாத பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன என்பது நன்றாகத் தெரிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் இவ்வாறான கருத்துகளையே தெரிவிக்கின்றனர்.

ஈழப் போராட்டத்தின் அடுத்த கட்டம் இது எனவும் ஈழத்தை வென்றெடுப்பதற்கான இறுதிவாய்ப்பு இது எனவும் தெரிவிக்கின்றனர். அத்துடன், சர்வதேச உதவியுடன் ஈழத்தை நாம் வென்றெடுக்கும் தருணம் இது எனவும் தேர்தல் பிரசாரம் செய்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலுள்ள சில வேட்பாளர்களும் இனவாதப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கில் தமிழர் ஒருவர்தான் முதலமைச்சராக வரவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், முஸ்லிம் ஒருவர்தான் முதலமைச்சராக வரவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினரும் தேர்தல் பிரசாரங்கள் செய்கின்றனர்.

இவ்விரு கட்சிகளாலும் மேற்கொள்ளப்படுகின்ற இந்தப் பிரசார நடவடிக்கைகள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாட்டில் கட்டியெழுப்பப்பட்டுள்ள சமாதானத்தையும், ஒற்றுமையையும் சீர்குலைக்கும் வகையில் அமைகின்றன.

கிழக்கிற்கு ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என்பதுதான் எமது நோக்கம். அதனடிப்படையிலேயே நாம் எமது தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கின்றோம். தமிழரோ, சிங்களவரோ அல்லது முஸ்லிமோ கிழக்கில் முதலமைச்சராக வரவேண்டும் என இனவாத ரீதியில் நாம் பிரசாரம் செய்யவில்லை.

இனவாதத்தையும், மதவாதத்தையும் மக்கள் மனதில் விதைத்தால் அவற்றால் விளையும் ஆபத்துகளையே நாம் அறுவடை செய்யவேண்டியேற்படும் - என்றார்.

## வயது குறைந்தோருக்கு போதைப்பொருள் விற்ற வர்த்தகர்களுக்கு அபராதம்

தென்மராட்சி,ஓக.30

தென்மராட்சி பிரதேசத்தில் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகையிலை உற்பத்தி பொருள்கள் விற்பனை செய்த பத்து வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 28 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சிகரெட் விற்னை செய்த நான்கு வர்த்தகர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதமும், பீடா விற்பனை செய்த ஆறு வர்த்தகர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை பலசரக்கு விற்பனை நிலையத்தில் போதைப்பொருளான பியர் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் நடத்திய திடீர் பரிசோதனையின் போது அகப்பட்ட 11 வர்த்தகர்களுக்கு எதிராக செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேற்கண்டவாறு அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை -

மேற்படி குற்றத்துக்காக ஊர்காவற்றுறை நாரந்தனை மற்றும் சங்கானை பகுதிகளைச் சேர்ந்த 8 வர்த்தகர்களுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கில் 8 பேரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது. (10-9-4)

## 5 ஆம் திகதியுடன் பிரசாரத்துக்குத் தடை

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.30

செப்ரெம்பர் 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் தேர்தலுடன் தொடர்புடைய எதுவித பிரசார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படக் கூடாதென தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் காலக்கெடுவிற்குள் தேர்தல் பிரதேசங்களில் அரசியல் கட்சியொன்றை - குழுவொன்றை - வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்கு இன்றேல் பாதிப்புறச் செய்வதற்குக் காரணமான விதத்திலான அனுமதியற்ற எதிர்ப்புகள், ஆர்ப்பாட்டங்கள், நடைபயணங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்துதல், இசைக் கச்சேரிகளின் பெயரில் அனுமதியற்ற பிரசாரக்கூட்டங்களை நடத்துதல் ஆகியன தேர்தல் [illegible]

மாகாணசபைத் தேர்தல் நடைபெறுகின்ற பிரதேசங்களில் செப்ரெம்பர் 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் எதிர்ப்புகள், ஆர்ப்பாட்டங்கள், வீதிக் கண்காட்சிகள், வாகன மற்றும் பொதுமக்கள் ஊர்வலங்கள், இசைக்கச்சேரிகள் மற்றும் பிரசாரக் கூட்டங்களை நடத்துதலும் அவ்வாறு நடத்தப்படவுள்ள தென சுவரொட்டிகள் மற்றும் அறிவித்தல்கள் பிரசாரம் செய்வதும் முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று இக் காலக்கெடுவிற்குள் ஒலி பெருக்கி இயந்திரங்களைப் பயன்படுத்திப் பிரசார நடவடிக்கைகளையோ, பொதுமக்கள் கூட்டங்களையோ மேற்கொள்வது முற்றிலும் தடையாகும்.

இவ்வாறான விடயங்களுக்கமைய தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக அறிவிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் சட்டம் கடுமையாக நடை முறைப்படுத்தப்படும். தேர்தல்கள் நடத்தப்படுகின்ற காலக் கெடுவிற்கான தேர்தல் சட்டங்களை மீறக் கூடிய வாறான எவ்வித செயற்பாட்டையும் மேற்கொள்ளாதிருக்க அனைத்துக் கட்சிகள், [illegible] வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். - இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமுர்த்தி அதிகார சபை அரச திணைக்களமாகிறது

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் (திவிநெகும) சமுர்த்தி அதிகார சபை அரசாங்கத் திணைக்களமாக மாற்றப்படுவதோடு அரச ஓய்வூதியர் திட்டத்தின் கீழ் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் உள்ளடக்கப்படுவர் என யாழ். மாவட்ட சமுர்த்தி அதிகார சபை இணைப்பாளர் எஸ்.ரகுநாதன் தெரிவித்தார்.

இதன்படி சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் (திவிநெகும) அரச அபிவிருத்தித் திணைக்களமாக மாற்றம் செய்யும் கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை சமுர்த்தி அதிகார சபை உட்பட ஐந்து அமைப்புக்களை இணைத்து திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் உருவாக்கப்படுவதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திணைக்கள உருவாக்கம் தொடர்பில் கடந்த 10ஆம் திகதி நாடாளுமன்றில் சட்ட நகல் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

இதேவேளை - சமுர்த்தி திணைக்களம் மாற்றமுறுவதில் சிக்கல்கள் உருவாகுமென தெரிவிக்கப்பட்டு உயர் நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வந்ததும் இறுதி முடிவு தெரியும் - என்றார். (10-13)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரணியில் கலாசார மண்டபம்

தென்மராட்சி,ஓக.30

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு அருகில் கலாசார மண்டபம் சுமார் 5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் புதிய கலாசார மண்டபத்துக்கென அடிக்கலை நட்டு வைத்தார். (ம-9)

## பாலம் அமைப்பு

வரணி இயற்றாலை பிரதேச சபை வரணி உப அலுவலகத்துக்கும் இயற்றாலை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இடைப்பட்ட வரணி வேம்பிராய் பிரதான வீதியில் வெள்ளம் பாயும் முகமாக புதிய பாலம் ஒன்று தற்சமயம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக வீதிப் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-122)

### கைதிகள் தினத்தை முன்னிட்டு

# உறவுகளுடன் கைதிகள் உணவருந்த ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஓக.30

*சர்வதேச கைதிகள் தினத்தை முன்னிட்டு உறவுகளுடன் ஒன்றிணைந்து கைதிகளும் உணவருந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட சிறைச்சாலை அத்தியட்சகர் செனத் பண்டார தெரிவித்தார்.*

எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச கைதிகள் தினம் எதிர்வரும் 12 ஆம் திகதியாகும்.

அந்த தினத்தினை முன்னிட்டு முதல் நிகழ்வாக எதிர்வரும் 9 ஆம் திகதி கைதிகளுடன் உறவினர்கள் நேரடியாக கலந்துகொண்டு உரையாடி உணவருந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைதிகளின் உறவினர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள் ஆகியோருக்கு உணவு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கும் நலன்புரி சங்கம் ஏற்பாட்டை மேற்கொண்டு வருகின்றது.

கைதிகளின் மனநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)



மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற 5 ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்ட ஆரம்ப நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் பாடசாலை வளாகத்தில் தென்னங்கன்று நட்டு வைக்கிறார். (ம-9)

## முதியோர் வார நிகழ்வு இம்முறை புதிய கோணத்தில்

யாழ்ப்பாணம், ஓக.30

சர்வதேச முதியோர் வாரம் இம்முறை புதிய கோணத்தில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது என்று இல்ல அத்தியட்சகர் ரி.கிருபாகரன் தெரிவித்தார்.

பெற்றோர்களைப் பிள்ளைகளே பராமரிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன் இந்த முதியோர் வார நிகழ்வுகள் இடம் பெறும்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சகல முதியோர்களையும் உள்ளடக்கி இந்த முதியோர் வார நிகழ்வு ஒழுங்கமைக்கப்படும்.

சகல பிரதேச செயலகங்கள், முதியோர் சங்கங்கள், முதியோர் பராமரிப்பு நிலையங்கள் போன்றவற்றை உள்ளடக்கி இந்த முதியோர் வாரம் கொண்டாடப்படவுள்ளது.

முதியோர்களின் மனவளர்ச்சி அவர்களின் ஆக்கத்திறன் போன்றவற்றை வெளிப்படுத்தும் முகமாக இல்ல வளாகத்தில் முதியோர்களின் கைவண்ண பொருள் கண்காட்சியும் நடத்தப்படும். (ம-17)

# புற்றுநோய் வைத்தியசாலை பணிகள்செப்ரெம்பர் 15இல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

தெல்லிப்பழையில் புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கும் பணிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

புற்றுநோய் வைத்தியசாலை அமைப்புப் பணிகளில் தாமதம் தொடர்பாக தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தெல்லிப்பழை புற்றுநோய்வைத்தியசாலை அமைப்பதற்கென நடைபயணம் மேற்கொண்டு பெருமளவு நிதி திரட்டப்பட்டது. இந்த நிதி திரட்டும் நடவடிக்கை முடிவுற்று ஒரு வருடம் கடந்த நிலையிலும் கட்டடம் அமைக்கும் வேலைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் பதில் தரவேண்டும் என வலி.வடக்குப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தநிலையில் கடந்த 23ஆம் திகதி கொழும்பில் சுகாதார அமைச்சுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கும் பணிகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் புற்றுநோய் சிகிச்சை வசதிகளைமேம்படுத்தும்பொருட்டு 20 மில்லியன் ரூபா மதிப்பிலான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களம், கொழும்பு சுகாதார அமைச்சு ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதற்கான அங்கீகாரம் கிடைத்ததுடன் ஜனாதிபதி செயலணியின் அனுமதியும் கிடைக்கப்பெற்றிருந்தது. இதன்படி சுகாதார அமைச்சின் செயலாளர் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கலர்ஸ் ஒப் ஹரேஜ் நிறுவனப் பணிப்பளார் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் செயலாளர் ஆகிய நால்வருக்கும் இடையில் ஒப்பந்தம் கடந்த மே மாதம் 16ஆம் திகதி கைச்சாத்தாகியது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கலர்ஸ் ஒப் ஹரேஜ் நிறுவனத்துக்கு கொடையாக வழங்கப்பட்ட நிதி அணைத்தும் தனியார் வங்கிக் கணக்கில் பேணப்படுவதுடன், கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக பணம் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கலர்ஸ் ஒப் ஹரேஜ் நிறுவனம் கேள்வி கோரல் மூலம் நான்கு ஒப்பந்த காரரைத் தெரிவு செய்து கடந்த 23ஆம் திகதி எம்மிடம் சமர்ப்பித்திருந்தது. இதன்படி பொருத்தமான ஒப்பந்த தாரர்கள் தெரிவு செய்யப்பட்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி கட்டடப் பணிகள் ஆரம்பிக்கும் - என்றார். (10-5)

# பாவனைக்கு உதவாத பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் சங்கங்களிலிருந்து பாவனைக்கு உதவாத காலம் கடந்த பொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

காரைநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.ஜெயபிரதீப், ஊர்காவற்றுறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் இருவரும் இணைந்து நேற்றும் நேற்று முன்தினமும் நடத்திய திடீர் தேடுதலின் போதே பெருமளவு பொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது பலசரக்கு கடைகள் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மொத்த விற்பனை நிலையம் என்பவற்றிலிருந்து காலம் கடந்த பழுதடைந்த பெருமளவான பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

பிஸ்கட், மைலோ ரின், அரிசிமா, பருப்பு, வெள்ளை அரிசி, கடலைப் பருப்பு, வெள்ளைப் பச்சை அரிசி போன்றனவும் பைக்கெட்டுக்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்களுமே கண்டு அழிக்கப்பட்டன. இவற்றில் காலாவதி திகதி முடிந்து வருடக்கணக்கில்விற் பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருள்களும் மீட்கப்பட்டன. (ம-5)

# கடற்றொழில் உபகரணங்கள் கசூரினா கடற்கரையில் நாசம்

### போதை தலைக்கேறியதும் அட்டகாசம்

காரைநகர், ஓக.30

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு வருபவர்களில் சிலர் மதுபோதையில் கசூரினா கடற்கரையில் உள்ள கடற்றொழிலாளரின் மீன்பிடி உபகரணங்களை சேதப்படுத்தி வருகின்றனர் என்று கூறப்பட்டது.

கசூரினா கடற்கரையில் உல்லாசப் பயணிகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தை விடுத்துக் கடற்றொழிலாளர் பகுதிக்கு செல்லும் சிலர் அங்கிருந்து மது அருந்தி விட்டு போதை தலைக்கேறிய நிலையில் கடற்றொழிலாளரின் வள்ளங்களை உடைத்து சேதப்படுத்துவதுடன் வலைகளையும் அறுத்து நாசம் செய்கின்றனர்.

கடந்த வாரமும் தொழிலாளி ஒருவருடைய சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

> கடந்த வாரமும் தொழிலாளி ஒருவருடைய சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் அறுத்து நாசம் செய்யப் பட்டதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தொழிலாளி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் காரைநகர் கடற்றொழிலாளர் சமாசத்திடமும் முறையிட்டுள்ளார்.

வார இறுதி நாள்களிலேயே இவ்வாறான சம்பவங்கள் அதிகமாக நடைபெறுகின்றன எனவும் இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)

# நல்லூர் பிரதேச சபையின் திட்டமுன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

நல்லூர் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கான திட்ட முன்மொழிவுகள் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற சபை உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் தலைவர் ப.வசந்தகுமாரால் சமர்ப்பிக்கப்பட்டன.

சிறுவர் பூங்கா அமைப்பு, விளையாட்டுக் கழகங்களுக்கான நன்கொடை, போத்தலில் தண்ணீர் அடைத்தல், ஆயுள்வேத வைத்திய நிலையம், மூலிகைத் தோட்டம் அமைத்தல் போன்ற இருபத்திமூன்று திட்டங்கள் முன்மொழியப்பட்டன. நான்கு கோடி 11 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அவற்றை நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

திட்ட முன்மொழிவுகள் அடுத்து வரும் கூட்டத்தில் ஆராயப்பட்டு தேவையான மாற்றங்களுடன் 'பட்ஜெட்' கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று கூறப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் எஸ்.சுரேஸ்குமார் தலைமையில் சுகாதாரக் குழுவும் நா.சிவலோகநாதன் தலைமையில் தொழில்நுட்பக் குழுவும் சி.தர்மரத்தினம் தலைமையில் அபிவிருத்திக் குழுவும் தெரிவானது.

பிரதேச சபைத்தலைவரின் தலைமையில் நிதிக் குழு இயங்கும் எனவும் தலைவர் வசந்தகுமார் தெரிவித்தார். (ம-7)

## நிகழ்வுகள் இன்று

**நூல் வெளியீடு**

யாழ். இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் "தில்லை நடராஜ ஸ்நபனம்' எனும் நூல் வெளியீடும் கருத்தரங்கும் இன்று இல.141, பலாலி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவையில் நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு ஆராதனை நிகழ்வுகள் ஆரம்பமாகித் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு நூல் வெளியீடும், கருத்தரங்கும் இடம்பெறும். நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள், வாழ்த்து [illegible] சிவஸ்ரீ ச.வாசுதேவக் குருக்கள், நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள், தலைமையுரையை இந்து சமயப் பேரவை செயலாளர் சிவத்திரு சி. சக்திக்கிரீவன் ஆகியோர் நிகழ்த்துவர். (ம-14)

**நூல்கள் கையளிப்பு**

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் நூலகங்களுக்கு நூலகங்கள் கையளிக்கும் நிகழ்வும், நூலகர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் காலை 9 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.(ம-14)

**பொதுக்கூட்டம்**

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பரிபாலனசபை வருடாந்தப் பொதுக்கூட்டம் காலை 9.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரமாக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களை ஏற்படுத்தாது என்பது பற்றிய விளக்கங்களையும் இந்தியத் தரப்பினருக்கு ஜனாதிபதி வழங்குவாரென உயர்மட்ட அரச வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

இதேவேளை, நேற்று ஈரான் நோக்கிப் புறப்பட்ட ஜனாதிபதி ராஜபக்ஷ அங்கு நடைபெறும் அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை மரியாதை நிமித்தம் மாத்திரமே சந்திப்பாரென்றும், அங்கு இருவருக்குமிடையில் உத்தியோகபூர்வ பேச்சுகள் நடைபெறாதென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

## தீர்வை முன்வைக்கும்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

போர்க்குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்றால் இலங்கை அரசு விரைந்து அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டேயாக வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மூதூர் பிரதேசத்திலுள்ள சீனன்வெளி, உப்பூறல் மற்றும் பள்ளிக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் நடைபெற்ற கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

போர் முடிவுற்ற பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசு மேற்கொண்டு வந்துள்ள அடாவடித்தனச் செயல்களை மாற்றியமைக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தின் ஊடாக வலியுறுத்தும்.

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் இலங்கை அரசு அகங்காரமாகவே பேசிக்கொண்டு இருக்கின்றது. ஆனால் உண்மையில் அரசு திணறுகின்றது. சர்வதேச அழுத்தங்களைத் தவிர்ப்பதற்காக கடைசி ஆயுதமாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அதில் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்று எண்ணியுள்ளது.

கிழக்கு மாகாண தமிழ் மக்கள் அரசின் இத்தந்திரோபாயத்தை முறியடிக்க வேண்டும். ஆளுங்கட்சியிலிருந்து ஒரு தமிழ் வேட்பாளராவது தெரிவுசெய்யப்பட முடியாத நிலையை ஏற்படுத்த வேண்டும்.

வெற்றி பெறும் தமிழ் வேட்பாளர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுபவர்களாக இருப்பதை எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் உறுதிப்படுத்த வேண்டும். அதன் மூலம் தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டுக்கு வலுவூட்ட வேண்டும் - என்றார் சம்பந்தன்.

## சாவகச்சேரியில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நேற்று மாலை 6 மணியளவில் எதிரே சைக்கிளில் வந்த ஒருவரை மோதியது. இதில் மீசாலை மேற்கைச் சேர்ந்த தம்பிஐயா நாராயணப்பிள்ளை (வயது 60) என்பவர் படுகாயமடைந்தார்.

சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதி மக்களுக்கும் பஸ் பயணிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு அது பின்னர் பொலிஸார் தலையிட்டதைத் தொடர்ந்து தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - மாலை 6 மணியளவில்

உசன் சந்தியில்இடம்பெற்ற ஓட்டோ - டிப்பர் விபத்தில் ஓட்டோ சாரதி படுகாயமடைந்தார். மிருசுவிலைச் சேர்ந்த சு.ஜனார்த்தனன் (வயது 21) என்பவரே படுகாயமடைந்தார்.

இந்த விபத்தின் போது டிப்பர் சாரதி சம்பவ இடத்தில் நின்றவர்களால் தாக்கப்பட்டு அவரும் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பெண் வீதியைக் கடக்க முற்பட்ட போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியது. இதன் போது மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணும் வீதியைக் கடக்க முற்பட்ட பெண்ணும் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவரான உசன் மிருசுவிலைச் சேர்ந்த ஈசன் கம்ஷிகா (வயது 26) என்பவரும் வீதியால் சென்ற கட்டைக் காடு முள்ளியானைச் சேர்ந்த க.லூர்த்தம்மா (வயது 66) என்பவருமே படுகாயமடைந்தனர். இவர்களில் லூர்த்தம்மா யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (10-9)

## இணை அமைச்சர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெலிங்டன் இராணுவப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று வரும் இலங்கைப் படை அதிகாரிகள் இருவரையும் இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இதையடுத்து பல்வேறு அரசியல் கட்சிகளும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாகப் போராட்டங்களை நடத்தின.

இந்தநிலையிலேயே, கடந்த திங்களன்று இந்தியப் பாதுகாப்பு இணை அமைச்சர் பல்லம் ராஜு இலங்கைப் படையினருக்கு தொடர்ந்து பயிற்சி அளிப்போம் என்று கூறியிருந்தார்.

அவரது கருத்து தமிழக அரசியல் கட்சிகளுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பல்லம் ராஜுவின் கருத்து அதிர்ச்சி அளிப்பதாகவும், உடனடியாக இலங்கைப் படையினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு, தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் மீண்டும் கடிதம் எழுதியுள்ளார்.

அத்துடன், தி.மு.க. தலைவர் கருணாநிதி, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ, நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், பா.ஜ.க. தலைவர் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் தா.பாண்டியன் உள்ளிட்டோர் பல்லம் ராஜுவின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டினதும் தமிழ் மக்களினதும் உணர்வுகளை மத்திய அரசு மதிக்காமல் கேவலப்படுத்துவதாக அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தநிலையில் தமிழகக் காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகனும், இலங்கைப் படையினருக்கு தமிழ் நாட்டில் பயிற்சி அளிக்கக் கூடாது என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே, பல்லம் ராஜுவின் கருத்துதைக் கண்டித்து வரும் சனிக்கிழமை சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவுள்ளதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

## காலியில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அரசியல் கைதியான சதீஸின் மனைவி தனது கணவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவுடன் மனோ கணேசன் நடத்திய பேச்சின் அடிப்படையில் சதீஸ் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்புக்கு மாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதியை மனோ கணேசன் குழுவினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயலத் ஜெயவர்த்தன ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். இதன்போது அரசியல் கைதியான சதீஸின் தலையில் கட்டுப் போடப்பட்டுள்ளதுடன் கண்



விழித்திருந்தாலும் வருபவர்களை அடையாளம் காணக்கூடிய நிலையில் அவர் இல்லை எனவும் அவரது கால்களில் சங்கலிப் பூட்டுப் போடப்பட்டுள்ளதையும் அவதானிக்கமுடிந்தது.

இதன்போது கடமையில் இருந்த வைத்தியர் ஒருவரிடம் சதீஸின் நிலைமை குறித்துக் கேட்டபோது தலையில் கடுமையாக அடி பட்டுள்ளது. மூளையில் இருந்து இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால் மூளை தொழிற்பாடு குன்றியுள்ளது எனத் தெரிவித்தார் என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் உதயனுக்குத் தெரிவித்தார். (10)

## வவுனியா...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் இறுதிப் போரில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களையும், காணாமல் போனோர் தொடர்பான விடயங்களையும் மறைக்க முயற்சி எடுக்கப்படுவதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜனநாயக மக்கள் முன்னணியும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதில்லை என்று முடிவெடுத்துள்ளன" என்று உதயனுக்கு மனோ கணேசன் தெரிவித்தார்.

இதேவேளை, மக்கள் கண்காணிப்புக் குழுவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள மாட்டோம் என்று அறிவித்துள்ளது. "குறித்த ஆர்ப்பாட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் அரசுக்கெதிரான கட்சிகளின் தலைவர்களை இந்தப் போராட்டத்தில் முழுமையாக இணைத்துக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளனர். இத்தகைய அரசியல் இலக்கற்ற நிகழ்வுகளில் நாம் கலந்துகொள்ள முடியாது." என்று மக்கள் கண்காணிப்புக் குழுவின் இணைத் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா ஆர்ப்பாட்டத்தில் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் தென்னிலங்கைக் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ங-400)

## ஆஸி.செல்ல...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பேர் இருந்துள்ளனர். அவர்களில் சிறுவன் மற்றும் கல்பிட்டியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் உட்பட ஏனையோர் அனைவரும் வட பகுதியைச் சேர்ந்த தமிழர்கள். கைது செய்யப்பட்ட அனைவரும் ஆண்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

யாழ். கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் விஜயகுணவர்த்தனவின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் கொடிகாமம், மிருசுவில், மருதங்கேணி, வல்வெட்டித்துறை, கிளிநொச்சி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இவர்களை ஏற்றிச் சென்ற 'லங்கா மாதா' மீன்பிடிப் படகு அண்மையில் சிலாபத்தில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் ஓட்டி வடமராட்சியைச் சேர்ந்தவர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் இவர்கள் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப் படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்பில் கைப்பற்றப் பட்ட படகின் பெயர் 'யூடியா'. மடக்கப்பட்டபோது இதில் 62 பேர் பயணம் செய்துள்ளனர். இவர்களில் 57 பேர் தமிழர்கள், 4 பேர் சிங்களவர்கள், ஒருவர் முஸ்லிம்.

கைதானவர்களில் ஐவர் பெண்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர். இவர்கள் கிளிநொச்சி, சிலாபம், குருநாகல ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.

கடந்த சில நாள்களாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முனையும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்னதினமும் இரு படகுகளில் இருந்து 147 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். (உ-8)

## மிதிவெடி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

யங்களில் தங்கியிருந்த புதுக்குடியிருப்பு கரைத்துறைப் பற்றுப் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பெரும்பாலான பகுதிகளில் மக்கள் தற்போது மீளக்குடியமர்த்தப்பட்டுவிட்டனர்.

எனினும் சில பகுதிகளில் மக்கள் இதுவரை மீளக்குடியமர அனுமதிக்கப்படாததால் குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இன்னமும் நலன்புரி நிலையங்களிலேயே தங்கியுள்ளனர்.

இவர்களில் மந்துவில், ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதற்கு கிராமசேவகர்களால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கான மீள்குடியமர்வு நடவடிக்கை கடந்த வாரம் [illegible] இதனால் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் மீள்குடியமர்வுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தனர். ஆனால் இன்றுவரை அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியர்த்தப்படவேயில்லை.

இது தொடர்பாக முல்லைத்தீவு செயலக வட்டாரங்களைத் தொடர்புகொண்டு கேட்டபோது,

மந்துவில், ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளில் இதுவரை மிதிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியாக்கப்படவில்லை. அதனால்தான் மீள்குடியமர்வுப் பணிகள் தாமதமடைகின்றன. மிதிவெடி அகற்றும் பணிகள் நிறைவடைந்ததும் உடனடியாக மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மல்லிகைத்தீவுப் பகுதியில் முழுமையாக மிதிவெடி அகற்றப்படாத நிலையில் அங்கு மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங-400)

## பஸ் சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி,ஓக.30

வழி அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப் பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் நடத்திய திடீர் சோதனையின் போது வழி அனுமதிப் பத்திரம் இன்றி சேவையில் ஈடுபட்ட பஸ் சாரதி மாட்டிக் கொண்டார். இவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்ட வேளை இவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (10-9)

## கடலை..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இளவாலைப் பொலிஸார் வாகனத்தின் சாரதியைக் கைது செய்ததுடன், சிறுவனின் சடலத்தையும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ங-16)

## மீளக்குடியமர...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சேர்ந்த 459 பேரும், முள்ளிவாய்க்கால் மேற்கில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 125 பேரும், கேப்பாப்புலவில் 164 குடும்பங்களைச் சேர்ந்த 568 பேரும் -

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மந்துவில் பகுதியில் 241 குடும்பங்களைச் சேர்ந்த 796 பேரும், ஆனந்தபுரம் பகுதியில் 107 குடும்பங்களைச் சேர்ந்த 394 பேரும் வேணாவில் பகுதியில் 181 குடும்பங்ளைச் சேர்ந்த 665 பேரும் இதுவரை மீளக்குடியமர்த்தப்படாது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர் என்று முல்லைத்தீவு செயலகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ங-400)

## சீனப்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஈடுபடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து நாள்கள் பயணமாக இங்கு வந்துள்ள சீனக் குழுவினர் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, கூட்டுப்படைகளின் தளபதி எயர்சீவ் மார்சல் ஹர்ச குணதிலக, முப்படைகளினதும் தளபதிகள் மற்றும் பாதுகாப்புத்துறை சார் அதிகாரிகள் பலரையும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன், சபுகஸ்கந்தையில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள் கல்லூரி, பனாகொட இராணுவ முகாம் ஆகியவற்றுக்கு சீன பாதுகாப்பு அமைச்சர் இன்று செல்லவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மன்மோகன்-மஹிந்த பேச்சு எந்தத் திசை நோக்கிச் சாயும்?

அணிசேரா நாடுகளின் பதினாறாவது உச்சி மாநாடு, இன்றும் நாளையும், ஈரான் நாட்டின் தலைநகர் தெஹ்ரானில் நடைபெறவுள்ளது. அணிசேரா இயக்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களில் இலங்கையும் ஒன்றாகும். அதன் முதலாவது மாநாடு, யூகோஸ் சிலேவியாவின் தலைநகர் பெல்கிரேட்டில் நடைபெற்ற வேளையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபத்தேழாக இருந்தது; இப்போது மொத்தம் நூற்றியிருபது நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

இன்றைய உச்சிமாநாட்டுக்கு எங்கள் நாட்டில் இருந்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் , வெளியுறவு அமைச்சர் மற்றும் பெற்றோலியம், எரிசக்தித் துறை அமைச்சர் ஆகியோரும் அதிகாரிகள் பலரும் கூடச்செல்வர் என்பது செய்தி. பூர்வாங்க மாநாடு கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகியது.

உச்சிமாநாட்டில் மனிதஉரிமைகள், அணுஆயுதப் பாவனைப் பரிகரணம் , மற்றும் பிராந்திய விவகாரங்கள் என்பன முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளித்து ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டின் புறத்தே, இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் குறித்தும் பரந்த அளவில் கலந்துரையாடப்படும்.

மனித உரிமைகளைப் பேணுதல் குறித்த விடயம் ஆராயப்படும் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல் செய்வது குறித்த ஜெனிவாத் தீர்மானத்தை முன்னெடுக்கும் செயற்பாடுகளை விவரிக்கக்கூடும் என்று ராஜதந்திர வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

ஈரான் எப்போதும் மேற்குலக நாடுகளுடன் முரண்பட்டு நிற்கும் போக்குடையது.அதிலும் , அந்த நாட்டின் புதிய ஜனாதிபதி மஹ்மூத் அஹமதி நெஜாத் இதுவிடயத்தில் அதீத போக்குடையவர். அதனால், அணிசேரா மண்டல நாடுகளைத் தீவிர மேற்குலக எதிர்ப்பு மையங்களாக்குவதற்கு இன்று ஆரம்பமாகும் மாநாட்டைப் பயன்படுத்த முனையலாம் என்ற கருத்தொன்றும் நிலவுகிறது.

உலகின் பலவானாகக் கருதப்படும் அமெரிக்காவும், இஸ்லாமிய வட்டகையின் வழிகாட்டியும், உலகின் பிரதான எண்ணெய் ஏற்றுமதி நாடுமான ஈரானும் எப்போதும் எதிராளிகளாகவே உள்ளன, செயற்படுகின்றன. மேலும் இஸ்ரேலுக்கும் ஈரானுக்குமிடையில் மோதல்கள் வெடிக்கும் சூழ்நிலையும் உருவாகிவருகிறது.

அதனால் அணிசேரா நாடுகளின் மாநாடு சர்வதேசங்களின் கவனத்துக்குரியதாகிறது. அணிசேரா நாடுகளின் மாநாட்டில் முன்னணி நாடுகளின் தலைவர்களை கலந்து கொள்ளாதிருக்கச் செய்வதற்கான முயற்சிகள் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளால் மேற்கொள்ளப்பட்டதும் தெரிந்தவையே.

அதுமட்டுமன்றி, தெஹ்ரான் அணிசேரா நாடுகளின் மாநாட்டின் ஊடாக ஈரான் தனது அணுத் திட்டத்தை உறுதிப்படுத்தும் அளவுக்கு ஆதரவைப் பெற்றுவிடக் கூடும் என்ற அச்சமும் மேற்குலகுக்கு உண்டு எனக் கருதப்படுகிறது.

மேலும் இந்த மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் கலந்து கொள்வதும் அதனை முக்கியத்துவப் படுத்துகிறது. அவரை இந்த மாநாட்டில் பங்குபற்றாது தடுக்கும் அமெரிக்காவின் முயற்சி கைகூடவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மேற்கூறிய எல்லாவற்றுக்கும் புறம்பாக, தெஹ்ரானில் இந்தியப் பிரதமர் மன்மோகனைச் சந்தித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த நடத்தவுள்ள இருதரப்புப் பேச்சுக்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே இப் பத்தியில் முன்னர் குறிப்பிட்டிருந்தது போன்று, இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையை இந்தியா ஆதரித்த பின்னர், கொழும்பு அரசு சீனாவின் பக்கம் சாய்ந்துள்ளது. இப்போது மிகப்பெரிய அளவில் அது துலங்குகிறது.

வடக்கு, கிழக்கில் மேலும் இராணுவத் தளங்களை அமைக்க முன்னோடியாக படையினருக்கு இப்பகுதியில் வீடுகளை அமைத்துக் கொடுக்க இலங்கை அரசு உத்தேசித்துள்ளது. அதற்கு சீனாவின் நிதி உதவியைப் பெறுவதற்கான திட்டங்களும் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இலங்கை அரசுக்கு நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு சீனா முன்வந்துள்ளமை அதற்கான முன்னோட்டமே என்று கருதுவதும் தப்பன்று.

எதுவோ, இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியதாக, சீனாவின் உதவியுடனும், பக்கபலத்துடனும் வடக்கு, கிழக்கில் இராணுவத் தளங்களை அமைக்கும் போக்கு, தன்னைக் குறிவைக்கும் வெல்வெருட்டு என்று இந்தியா கருதுவது தப்பன்று. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அடுத்து வரும் கூட்டத் தொடருக்கு முன்னதாக இந்தியா, அமெரிக்காவைக் கைவிட்டு தன்பக்கத்துக்கு சாயவேண்டும் என்பதே இலங்கை அரசின் அவசரத் தேவையாக உள்ளது.

அதனால், தெஹ்ரான் மாநாட்டின் புறத்தே வைத்து இந்தியப் பிரதமருடன் பேசுவதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசு செய்துள்ளது. அதனைப் புறந்தள்ளக்கூடிய நிலையில் இந்தியாவும் இல்லை. வெவ்வேறு வர்ணங்களைப் பூசிக்கொண்டு சீனாவை இலங்கையில் காலூன்ற அனுமதிக்கக்கூடாது என்பதில் புதுடில்லி அரசு வெகு அக்கறையுடன் காய்களை நகர்த்த வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

சீன-இலங்கை இராணுவக் கூட்டு நிகழ்ச்சி நிரல்கள் தமது நாட்டுக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள், குந்தகங்கள் குறித்து சரியாக எடைபோடக் கூடிய வல்லமை இந்தியாவிடம் இல்லை என்று இல்லை. இலங்கையின் மிக நெருக்கமான, அன்னியோன்யமான சீன நட்புக் குறித்து எச்சரிக்கை சார்ந்த கருத்துக்கள் ஏற்கனவே தமிழகத்தில் முளைவிடத் தொடங்கிவிட்டன. புதுடில்லி அரசு, தமிழகத்தை விடவும் அது விடயத்தில் மிகச் சிவந்த கூரிய கண்களால் பார்க்கும் என்பதும், அது நிரந்தரமான வாய்ப்பாடு என்பதும் இலகுவில் புரியக்கூடியதே.

எனவே,தெஹ்ரான் மகாநாட்டில் வைத்து இது தொடர்பாக இந்தியப் பிரதமருடன் பேச வேண்டும் என்ற இலங்கை அரச பிரதானிகளின் விருப்பம் அல்லது திட்டத்தைப் பிரதமர் மன்மோகன் தக்கவாறு பயன்படுத்திக் கொள்வார் என எதிர்பார்க்கலாம். அதுமட்டுமன்றி மஹிந்த- மன்மோகன் தெஹ்ரான் சந்திப்பு- பேச்சு, ஒரு வகையில் அனைத்துலக மட்டத்தில் கனதிபெறும் என்று கொள்ளலாம்.

இப் பத்தியில் நாம் பல தடவைகள் குறிப்பிட்டு வந்த இலங்கை-இந்தியா-அமெரிக்கா கூட்டுணர்வு வாய்ப்பாட்டில், பெரும் மாற்றம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஜெனிவாத் தீர்மானம் அதற்கு உடந்தையாக மாறினாலும் புதினமல்ல.

அதனைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய மன்மோகன்- மஹிந்த வாய்ப்பாடு என்னவாக இருக்கும் என்பதே பலதரப்புகளாலும் எழுப்பப்படும் அல்லது எதிர்பார்க்கப்படும் கேள்வியாக உருவாகும்

அமெரிக்காவுடன் பகைமையை "கொங்கிறீட்" போன்று இறுக்கி வைத்திருக்கும் ஈரானில் நடைபெறும் கொழும்பு-புதுடில்லிப் பேச்சின் பெறுபேறு எந்தப் பக்கம் சார்கிறது , சாய்கிறது என்று பொறுத்திருந்துதான் பார்ப்போமே...!

# செயற்றிட்ட அறிக்கைகள் அல்ல உறுதியான செயற்பாடுகள் தேவை

### கனேடிய உயர் ஸ்தானிகர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.30

இலங்கை அரசின் செயற்றிட்டத்தை நாங்கள் வரவேற்கின்றோம். இருந்தாலும் அவ்வாறான அறிக்கைகள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துபவையாக இருக்காது. உறுதியான செயற்பாடுதான் அதனை எடுத்துக்காட்டும். எனவே அரசு மேற்கொள்ளும் செயற்பாடுகளின் மீது தான் இலங்கை மக்களும் சரி சர்வதேச சமூகத்தினரும் சரி அரசின் நடவடிக்கைகளை எடை போடுவார்கள்.

இவ்வாறு இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் புரூஸ் லெவி தெரிவித்துள்ளார். விரைவில் இலங்கையிலிருந்து விடைபெறவிருக்கும் அவர் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ள மேலும் சில கருத்துக்கள் வருமாறு:

போரின் இறுதிக் கட்டத்தில் குறிப்பிடக்கூடியதாகவும், வேறு சமயங்களிலும் மனித உரிமைப் பிரச்சினைகள் எழுந்துள்ளன. பொதுவில் முன்னர் பெருமையாகக் கருதப்பட்ட பலவற்றில் இப்பொழுது சீரழிவுகள் காணப்படுகின்றன. ஏராளமான குற்றங்கள் நடைபெறுகின்றன. ஆனால் அவை தண்டிக்கப்படாமல் விடப்படுகின்றன. மக்கள் தமது ஸ்தாபனங்களின் மீது வைத்திருக்கும் நம்பிக்கைகள் சிதறடிக்கப்படுகின்றன. குற்றங்களில் இருந்து விலக்களிக்கும் கலாசாரம் நிலைத்துவிடுமானால், பத்திரிகையாளர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போவார்களானால் ஒரு வழுக்கல் நிலைதான் ஏற்படும்.

போர் குற்றங்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட அனைவரும் பொறுப்புக் கூறும் நிலைக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதை கனடா ஆதரிக்கின்றது.

உண்மையில் இலங்கையும் இந்த கோட்பாட்டை ஆதரிக்கத்தான் வேண்டும். இல்லையென்றால் சர்வதேச மனித உரிமை நியமங்களில் அது கையெழுத்திட்டிருக்காது. கொமன்வெல்த் போன்ற நிறுவனங்களில் அது சேர்ந்திருக்கவும் முடியாது. பொறுப்புக் கூறலை கனடா வற்புறுத்துகிறது. தொடர்ந்தும் வற்புறுத்தவே செய்யும். எல்லா குற்றவாளிகளையும் நீதியின் முன் நிறுத்த இலங்கையர்கள் தாமே உள்ளூர் பொறிமுறையொன்றை சர்வதேசத்தரத்தில் நம்பக்கூடியதாக உருவாக்கிக் கொள்வது வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

அடிக்கடி கவலையளிக்கும் குழப்பகரமான செய்திகள் எமக்கு கிடைக்கின்றன. மேற்கு நாடுகளுக்கு எதிரான சொற்பிரயோகங்கள் புதியவையல்ல. ஆனால் அடிப்படையான சமூக இழிவுகளை எதிர் கொண்டு தீர்ப்பதற்குப் பதிலாக அதற்குச் சாட்டு கூறுவதற்காக மேற்கு நாடுகளை குறிப்பிடுவது தான் கவலையளிக்கிறது. இதில் மேற்கு நாடுகளுக்கு எந்த வித பங்களிப்பும் இல்லை. இவ்வாறு அந்தப் பேட்டியில் கனேடிய உயர் ஸ்தானிகர் கூறியுள்ளார். (ப)

# ஆசிரிய இடமாற்ற விண்ணப்பம் ஏற்கும் கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான விண்ணப்பங்கள் அனைத்தையும் அதிபர்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அந்தத் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படாது என்று வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் இரண்டு ஆசிரியர் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான அனைத்து விண்ணப்பங்களும் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்று சில வாரங்களுக்கு முன்னர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

எனினும் தற்போது நடைபெற்று வரும் உயர்தரப் பரீட்சை இன்று நிறைவடையும் நிலையில் சில தினங்களில் விண்ணப்பங்கள் அனுப்பவோ, அதிபர்கள் அதனைப் பெற்றுக் கொள்வதோ சற்றுச் சிரமமாக இருக்கும் என்று கூறப்பட்டது.

தவிர அநேகமான ஆசிரியர்கள் விடுமுறையில் இருப்பதால் முதலாம் திகதி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் கடினமானதெனவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் இதற்கான விண்ணப்பத் திகதி எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. 7 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான விண்ணப்பங்கள் அதிபர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் எத்தகைய விண்ணப்பங்களும் அதிபர்களால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அதிபர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் யாவும் சுயவிவரக் கோவையுடன் பரிசீலிக்கப்பட்டு வலய இடமாற்ற சபைத் தீர்மானத்தின் பின்னர் மாகாண கல்வித் திணைக்களத்துக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

15 ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எத்தகைய விண்ணப்பங்களும் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது - என்று கூறினார். (ம-4)

## உள்ளூராட்சி மன்றங்கள் சுதந்திரமாக இயங்காமைக்கு ஆளுநரே காரணம்

### காலிமாநகர சபை முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

வடமாகாண உள்ளூராட்சிக் குட்பட்ட பிரதேசசபைகள் சுதந்திரமாக இயங்காமைக்கு வடமாகாண ஆளுநரே காரணம் என்று உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத் தலைவரும் காலி மாநகரசபை முதல்வருமான நெத்சிறி சில்வா தெரிவித்தார்.

இலங்கை முழுவதும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நெத்சிறி சில்வா இவ்வாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் உள்ள பிரதேச சபைகள் சுதந்திரமாக இயங்க முடியவில்லை. உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் பக்கச் சார்பாக நடந்து கொள்வதற்கு வடமாகாண ஆளுநரே காரணமாக உள்ளார்.

உள்ளூராட்சி அதிகாரிகள் உள்ளூராட்சி மன்றங்களின் சட்டத்துக்கு முரணாக நடந்து கொள்வதால் சில பிரதேசசபைத் தலைவர்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகிறது.

தென்பகுதிகளில் இவ்வாறான பிரச்சினைகள் குளறுபடிகள் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை. உள்ளூராட்சி மன்றங்கள், மாநகரசபைகள் என்பன சுதந்திரமாக மக்களின் தேவைகளை விரைவாக பூர்த்தி செய்வதிலும் முன் நின்று உழைக்கின்றன.

வடபகுதியில் உள்ள பிரதேச சபைகளில் இவ்வாறான பிரச்சினைகளை அரச அதிகாரிகள் எதிர் கொண்டு வருகின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆளுநரின் தலையீடுகளைக் கண்டறிந்து தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக அடுத்தமாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளேன் - என்றார். (எ-13)

## அங்கத்தவரிடையே 4 ஆயிரம் லீற்றர் பாலை கொள்வனவு செய்கிறது யாழ்.கோ

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி சங்கம் (யாழ்.கோ) தினமும் நான்காயிரம் லீற்றர் வரையான பசுப்பாலை அங்கத்தவர்களிடம் இருந்து கொள்வனவு செய்து நுகர்வோருக்கு விநியோகித்து வருகிறது என்று மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 27 கொள்வனவு நிலையங்கள் ஊடாக இந்தப் பசுப் பாலை கொள்வனவு செய்து வருகின்றோம்.

தற்போது பசுப்பாலின் தேவையும் குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தினமும் கொள்வனவு செய்யப்படும் பால் உடனடியாகவே விற்றுத் தீர்க்கப்படுகின்றது.

சில சமயங்களில் விற்கப்படாது தேங்கும் பசுப்பால் பால் உற்பத்திப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது என்று மேலும் கூறப்பட்டது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார மயானம் திறந்து வைப்பு

வவுனியா, ஓக.30

பூந்தோட்டம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மின்சாரத்தில் எரியூட்டும் மயானம் கடந்த 27 ஆம் திகதி வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது பூந்தோட்டச் சந்தியில் இருந்து அணிவகுப்பு மரியாதையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிஸ் சந்திர, வவுனியா நகர சபைத் தலைவர் மு.கனகையா ஆகியோர் இணைந்து மின்சாரத்தில் எரியூட்டும் மயானத்தைத் திறந்து வைத்தனர். பெயர்ப் பலகையை அரச அதிபர் பந்துல ஹரிஸ்சந்திர திரை நீக்கம் செய்தார்.

மங்கல விளக்கினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், செல்வம் அடைக்கலநாதன் உட்படப் பலர் ஏற்றிவைத்தனர்.

நகரசபைத் தலைவர் மு.கனகையா தலைமையில் திறப்புவிழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

நீண்டநாள்களாகத் திறக்கப்படாது இழுபறிநிலையில் இருந்த இந்த மயானம் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

(க-402, 400)

# அதிகாரங்கள் முடக்கப்பட்டமையே மக்களின் வெறுப்புக்குக் காரணம்

## இப்படிக் கூறுகிறார் மன்னார் நகரசபை உறுப்பினர்

மன்னார், ஓக.30

நகரசபைக்குரிய அதிகாரங்கள் முடக்கப்பட்டமையே சபை மீதும் உறுப்பினர்கள் மீதும் மக்கள்வெறுப்புக்கொள்ள காரணமாக அமைந்துள்ளது. இதன்காரணமாகவே மன்னார் நகர சபையின் சேவைகளை வினைத்திறனுடையதாக வெளிப்படுத்த முடியாதுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் மன்னார் நகரசபையின் ஆளும் கட்சி உறுப்பினரான இரட்ணசிங்கம் குமரேஸ்.

மன்னார் நகரசபையின் மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்றது. இதன் போது கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது. -

எமது நகர சபைக்கு உள்ள அதிகாரங்கள் திட்டமிடப்பட்ட வகையில் முடக்கப்பட்டுள்ளதை நாம் யாவரும் அறிவோம்.

குறிப்பாக சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், அவற்றைச் செயற்படுத்த முடியாத அவல நிலையே காணப்படுகிறது. இதுவே மக்கள் எம் மீது வெறுப்புக் கொள்ளக் காரணமாக அமைந்துள்ளது.

நகர சபைக்கு உட்பட்ட நிலங்கள் பறிபோவது தொடர்பான தீர்மானத்தை நான் இந்தச்சபையில் முன்வைக்கின்றேன்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போதும், சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்க, பறவைகள், வன ஜீவராசிகள் சரணாலயங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும் அவற்றுக்கான எல்லைகளை நிர்ணயிப்பதற்குமான ஒரு சுற்று அறிக்கையை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினார். அதன் அடிப்படையில் வடக்கின் பல பகுதிகளிலும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. அதில் மன்னார் நகரமும் உள்ளடங்கும்.

மன்னாரில் மக்களின் குடியிருப்புப் பகுதிகளான வங்காலை, சிறுநாவற்குளம், தள்ளாடி, திருக்கேதீஸ்வரம், பள்ளிமுனை, சவுத்பார் (ஸ்ரேசன்) மன்னார் நகரின் பிரதான நுழைவாயில் போன்ற இடங்கள் சரணாலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு பெயர்ப்பலகைகளும் போடப்பட்டன.

இதே வேளை தற்போது மட்டக்களப்பு காத்தான்குடி பெரியளவில் அபிவிருத்தி அடைந்து காணப்படுகின்றது.

ஆனால் இங்குள்ள வர்த்தகர்கள் பலர் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான வாராந்தச் சந்தைக்கட்டடத்தை ஆக்கிரமித்து அதில் தினச் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மன்னார் மக்களும், மன்னார் வர்த்தகர்களும் நகர சபை மீது வெறுப்புடன் செயற்படுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல தமிழ்,முஸ்லிம் வர்த்தகர்கள் வியாபார நிலையங்களை அமைக்க இடமின்றி நடைபாதை வியாபாரிகளாக அல்லல்படுகின்றனர். எனவே மன்னார் நகரசபையின் தலைவர், செயலாளர், உபதலைவர், உறுப்பினர்கள் இந்த விடயத்தில் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)



இந்து சமய கலாசார அமைச்சினால் கலாபூசணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஐ.வீராசாமிக்கு கோயில்குளம் அகிலாண்டேஸ்வரி தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெற்ற பாராட்டு விழாவின் போது இந்துநாகரிகப்பாட ஆசிரியர் சிவகயன் வாழ்த்துப்பா வழங்குவதையும், வவுனியா பிரதேச செயலவர் அ.சிவபாதசுந்தரன் பாராட்டுப்பத்திரம் வழங்குவதையும் காணமுடிகின்றது. (க-400)

## வவுனியாவில் "தலைமயில்"

வவுனியாவில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் தமிழ்க் கொலைகள் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகர சபை மைதானத்தில் ஸ்ரெல் விளையாட்டுக்கழக நிதி திரட்டலுக்காகத் தென் பகுதியில் உள்ள அருணலு என்ற அமைப்பினரால் வர்த்தகக் கண்காட்சியும் கேளிக்கை நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக வவுனியா நகரப் பகுதியில் தமிழ் மொழியில் அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் ஏராளமான தமிழ்க் கொலைகள் நிகழ்ந்துள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

'ஏ.கனகையா அவர்களது தலைமையில்' என்ற வாசகத்துக்குப் பதிலாக ''ஏ.கணகய்யா அவர்களது தலைமயில்'' என்ற பதமும் ''கார்னிவெல்'' (கேளிக்கை நிகழ்வுகள்) என்பதற்குப் பதிலாக "காணிவேல்" என்ற பதமும் "அபாயக் கிணறு" என்பதற்குப் பதிலாக ''ஆபாயக் கிணறு'' என்றும் தவறாக அச்சிடப்பட்ட சுவரொட்டிகளே வவுனியாவில் ஒட்டப்பட்டுள்ளன.

பெயர்ப்பலகைகளில்இடம் பெற்றுவந்த தமிழ்க் கொலைகள் தற்போது சுவரொட்டிகளிலும் நிகழத் தொடங்கி விட்டனவே என்று தமிழ் மக்கள் வேதனைப்படுகின்றனர்.

(ங-400)

## விரிவாக்கம்

வவுனியா முருகனூர்ப் பகுதியில் அமைந்துள்ள அரச விவசாயப் பண்ணை விரிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. இந்தவிவசாயப் பண்ணை பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. இங்கு பல்வேறு வகையான பயிர்களும் செய்கை பண்ணைப்படுகின்றன. இத்துடன் விதைகளும், கன்றுகளும், மரக்கறி வகைகளும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் இந்தப் பண்ணை ஒரு பயிற்சி நிலையமாகவும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-42)

## இந்திய வீடுகளுக்கு பயனாளிகள் தெரிவு

அக்கராயன், ஓக.30

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இரு பிரதேச செயலக பிரிவுகளில் இந்திய வீடுகளை அமைப்பதற்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளது.

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஐயன்கன் குளத்தில் 50 வீடுகளும், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாலிநகரில் 50 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன. இந்த வீடுகளுக்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்று பட்டியல்கள் முல்லைத்தீவு அரச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்தியன் வீடுகளை அமைக்கும் பணிகள் யாவும் பயனாளிகளிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

ஏனென்றால் ஏற்கனவே அமைக்கப்பட்ட இத்தகைய வீடுகள் தரமற்றவையாக காணப்படுவதும், அமைக்கப்பட்ட சிறிது காலத்தினுள்ளேயே பழுதடைந்து வருவதும் இந்தக் கோரிக்கைக்கான முக்கிய காரணங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

## பாம்பினால் கடியுண்ட சிறுமி சிகிச்சை பயனின்றி சாவு

துணுக்காய், ஓக.30

பாம்பினால் கடியுண்ட சிறுமி சிகிச்சை பயனின்றி உயிரிழந்த சம்பவம் வவுனிக்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

வவுனிக்குளத்தைச் சேர்ந்த ஏழு வயதான திருச்செல்வம் லக்ஷிகா என்ற சிறுமி கடந்த 22 ஆம் திகதி முற்பகல் வேளையில் அயல் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது அருகில் காணப்பட்ட கூழா மரப் பொந்துக்குள் கையை வைத்துள்ளார். அப்போது பொந்தினுள் இருந்த விஷப் பாம்பு சிறுமியின் கையில் தீண்டியுள்ளது.

மரப்பொந்துக்குள் இருந்த பாம்பு உடனடியாகப் பிடிக்கப்பட்டதுடன் சிறுமியும் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

**தற்போது இங்கு நிலவும் கடும் வறட்சி மற்றும் வெப்பத்தினால் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையால் மக்கள் நடமாடுவதற்கு அஞ்சும் நிலை. காணப்படுகின்றது.**

தற்போது இங்கு நிலவும் கடும் வறட்சி மற்றும் வெப்பத்தினால் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள [illegible] அஞ்சும் நிலை காணப்படுகின்றது.

(க-415)

### மன்னார் நீதிமன்ற தாக்குதல் சம்பவம்

## சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் விளக்கமறியலில்

மன்னார், ஓக.30

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்பிருப்பதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த திங்கட்கிழமை காலை மன்னார் நீதிமன்றத்தின் முன்னால் [illegible] செய்யப்பட்டு மேலதிக நீதிவான் ஆர்.எஸ்.ஏ. திஸாநாயக்க முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்ட போது குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளை அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் 18 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட சுமார் 23 பேரை மன்னார்ப் பொலிஸாரும் குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸாரும் தேடி வந்தனர்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை அமைச்சர் ரிஷத் பதியுதீன் தொடர்பான வழக்கு விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன் போது அங்கு வந்த பொலிஸ் கான்ஸ்டபிளான சிறிகாந்தன் என்பவரை மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி விஜயசேன, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துசார தலுவத்த ஆகியோர் கைது செய்து மேலதிக நீதிவான் ஆர்.எஸ்.ஏ. திஸாநாயக்க முன்பாக முன்னிலைப்படுத்தினர். இவரை அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மன்னார் ஊடகவியலாளர்களுக்குக் கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராக ஊடகவியலாளர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவுசர்– டிப்பர் நடுவே அகப்பட்டது 'படி'

தென்மராட்சி, ஒக.30

எரிபொருள் ஏற்றி வந்த பவுசர் வாகனமும் டிப்பர் வாகனமும் படி வாகனத்தை போட்டுத் தாக்கியதில் படி வாகனம் பலத்த சேதமடைந்ததுடன் அதன் சாரதியும் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் வீதி அகலிப்பு பணிகள் இடம்பெறுவதால் ஒவ்வொரு பக்கமாக வாகனங்கள் அனுப்பப்படுகின்றன. வாழைக்குலைகள் ஏற்றிக் கொண்டு சென்ற படி வாகனம் நின்ற பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் இடத்தை விட்டு நகர்கையில் திடீரென எதிர் பக்கத்தில் நின்ற பவுஸர் உள்நுழைந்தது. இதனால் படி பிரேக் பிடித்தபோது அடுத்து வந்த டிப்பர் வாகனம் படியுடன் மோதியதில் இரண்டு வாகனங்களுக்கிடையில் படி வாகனம் அகப்பட்டுச் சேதமடைந்தது.

இதன் சாரதியான எலியாப்பிட்டியைச் சேர்ந்த ஆர்.பி.பிரபாநீல்காந்த பத்திரன (வயது-33) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விபத்தால் ஏ-9 வீதியில் போக்குவரத்து சிறிது தூரம் தடைப்பட்டு பின்னர் வழமைக்குத் திரும்பியது. (ம-9)

## புலோலியில் ஆலய உண்டியல் உடைப்பு

வடமராட்சி, ஒக.30

புலோலி கிழக்கு, சந்தா தோட்டம் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய உண்டியல் இரவு வேளையில் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

மின்சாரம் தடைப்பட்ட நேரம் பார்த்து சிமெந்தால் கட்டப்பட்டிருந்த உண்டியல் கதவு உடைக்கப்பட்டு திருட்டு நடந்துள்ளது என்று ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ம-8)

## 'பிறந்த இடமான' நீர்கொழும்பு செல்கிறது உதயதாரகை

### 2 வருடங்களின் பின் இயந்திரம் பொருத்த

யாழ்ப்பாணம், ஒக.30

நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கப் படகு உதயதாரகை இரண்டு வருடங்களின் பின் இப்போது இயந்திரம் பொருத்துவதற்காக நீர்கொழும்புக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது.

சங்கத் தலைவர் அ.ஜெ. அரியநாயகம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

முன்னாள் அரச அதிபர் கே.கணேஸ் பதவி வகித்த சமயம் இந்தப் படகு அவரால் நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்துக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்தப் படகு 300 பைக்கற் சிமெந்துடன் நெடுந்தீவுக்கு வந்து துறைமுகத்தில் நிறுத்தப்படவிருந்த சமயம் பெய்த பெரு மழை காரணமாக சீமெந்தை இறக்க முடியாத நிலையில் நீரில் மூழ்கியதில் இயந்திரம் முற்றாகச் சேதமடைந்தது.

இது தொடர்பாக இந்தப் படகைக் கட்டிய நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த படகு கட்டும் தொழிலக அதிகாரிகள் இதனைப் பார்வையிட்டு உடன் திருத்தித் தருவதாகக் கூறியிருந்தனர்.

எனினும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் தற்போது படகை நீர்கொழும்புக்கு எடுத்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து குறிப்பிட்ட படகை நீர்கொழும்புக்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தலைவர் தெரிவித்தார். (ஒ-ம-7)

## சட்டவிரோத மின் பெற்ற 10 பேருக்கு அபராதம்

நெல்லியடிப் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 10 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் குறிப்பிட்ட தொகையை மின்சார சபைக்குச் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்களும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 10 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து 10 பேருக்கு நீதிமன்ற அபராதமாகத் தலா 10 ஆயிரம் ரூபாவும், இலங்கை மின்சார சபைக்கு தண்டப் பணமாக 4 ஆயிரம் ரூபா தொடக்கம் 21 ஆயிரம் ரூபா வரை ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்டது. (ம-8)

## யாழ்.நகரில் சுகாதார நடவடிக்கை புதிய திட்டங்களால் சீரமைப்பு

### மாநகர சுகாதாரக் குழுத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக.30

யாழ்.நகரின் சுகாதார நடவடிக்கைகள் முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்திச் சீரமைக்கப்படவுள்ளது என்று யாழ்.மாநகர சபை சுகாதாரக் குழுவின் தலைவர் எஸ்.விஜயகாந்த் நேற்றுப் புதன்கிழமை யாழ். மாநகர சபையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் ஒரு கட்டமாக எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை முதல் குப்பைகளை அகற்றும் பணி தினமும் காலையிலும் பிற்பகல் 2 மணியில் இருந்தும் இரு தடவைகள் இடம்பெறும்.

நகரின் மையப் பகுதியில் மூன்று கட்டமாக இடம்பெறும்.

குப்பை எடுப்பதற்கென முன்னர் எட்டு டிராக்டர்கள் இருந்தன. இப்போது இருபத்தி ஐந்துவரை உள்ளன.

குப்பை எடுக்கவரும் வாகனங்கள் சமிக்ஞை ஒலிகள் எழுப்பிவரும். பொது மக்கள் வீதிகளில் குப்பைகளை வைக்காமல் வாகனங்கள் வரும்போது கொடுக்க முடியும். காலையும் மாலையும் என இரண்டு தடவைகள் ஒடு வீதிக்கு குப்பை அகற்றும் வாகனங்கள் வரும்.

பொதுமக்கள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கி வீதிச் சுத்தத்துக்கு உதவ வேண்டும்.

இந்த ஆண்டு ஆடி மாதத்தில் மட்டும் ஆயிரத்து 386 மெற்றிக் தொன் திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.

தைமாதம் தொடக்கம் ஆறுமாதம் வரை 8,604 மெற்றிக் தொன் திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது எனவும் ஆடி மாதம் வரை மலக்கழிவு ஏழு லட்சத்து 33 ஆயிரத்து 200 லீற்றர் வரை அகற்றப்பட்டுள்ளது.

குப்பைகளை அகற்ற பெக்கோ இயந்திரம் தேவைப்படுகிறது. ஒரு இயந்திரம் ஒரு கோடி 50 லட்சம் ரூபாவரையானது.

அப்படி ஒரு இயந்திரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி மாநகர சபையிடம் தற்சமயம் இல்லை. அதுதொடர்பாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கிடைக்கும் எனநம்புகின்றோம் என்று அவர் மேலும் கூறினார். (ம-7)

## புங்குடுதீவில் நெருப்புக் காய்ச்சல் முழுமையான கட்டுப்பாட்டுக்குள்

### வைத்திய அதிகாரியும் சுகாதாரப் பரிசோதகரும் தகவல்

யாழ்ப்பாணம், ஒக.30

சில தினங்களுக்கு முன் புங்குடுதீவு மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்த நெருப்புக் காய்ச்சல் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று புங்குடுதீவு வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எஸ்.பேரின்பநாயகம் புங்குடுதீவு சுகாதாரப் பரிசோதகர் அபராஜ் ஆகியோர் தெரிவித்தனர்.

புங்குடுதீவுப் பகுதியில் புதுவகையான காய்ச்சல் ஒன்றுக்கு மக்கள் ஆளாகி வருவது குறித்து வெளியான தகவல் பற்றிக் கேட்ட போது இவ்வாறு கூறப்பட்டது.

குறிப்பிட்ட காய்ச்சல் நெருப்புக் காய்ச்சல் எனவும் அதற்கென வழங்கப்பட்ட மருந்துகளை நோயாளர்கள் உரிய முறையில் பயன்படுத்தாமல் விட்டதால் காய்ச்சல் அதிகரித்தது. இதனால் ஒருபுதுவித காய்ச்சல் பரவுவதாக தவறான கருத்துக்கள் வெளியாகின.

தண்ணீர் தட்டுப்பாடு உள்ள நிலையில் மக்கள் மிகவும் அடியில் உள்ள நீரைக் கொதிக்க வைக்காது பயன்படுத்துகின்றனர். இதுவும் இதற்குக் காரணமாகும்.

மக்களுக்கு இது குறித்து தெளிவான விளக்கங்கள் வழங்கியதன் மூலம் இப்போது அதனைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது- என்று மேலும் கூறினார். (ம-7)

## சங்கிலி அபகரிப்பு

மகனின் சைக்கிளில் பின்னுக்கு அமர்ந்த சென்று கொண்டிருந்த வயோதிபத்தாயின் இரண்டு பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் அபகரித்துச் சென்ற சம்பவம் வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மந்திகைச் சந்தையில் மரக்கறி வகைகளை வாங்கிக் கொண்டு மகனுடன் சைக்கிளில் பின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு சென்றுகொண்டிருக்கும்போது திடீரென மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சைக்கிளில் அமர்ந்திருந்த வயோதிபத்தாயின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு . சென்று விட்டனர். (ம-8)

## பயணிகளுக்கு 'ரிக்கெற்' வழங்காவிடில் நடவடிக்கை

### தனியார் பஸ் சங்கம் தகவல்

யாழ்ப்பாணம், ஒக.30

வெளிமாவட்ட தனியார் பஸ்களில் 'ரிக்கெற்' வழங்கும் நடைமுறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதால் பயணிகளுக்கு 'ரிக்கெற்' வழங்காத நடத்துநர்களுக்கு எதிராகத் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிமாவட்ட தனியார் பஸ் சங்கங்களின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**தனியார் பஸ்ஸில் பயணிக்கும் அனைத்துப் பயனாளிகளுக்கும் பயணச் சிட்டையை வழங்குவது கட்டாயம்**

வெளிமாவட்டத்துக்கு யாழ்.பஸ்தரிப்பிடத்திலிருந்து செல்லும் தனியார் பஸ்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதால் பயணச் சீட்டை வழங்குவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பயணிகளுக்கு மீதிப்பணம் கொடுக்காமை போன்ற காரணத்தால் நடத்துநர்கள் தனியார் பஸ்ஸில் பயணிக்கும் அனைத்துப் பயனாளிகளுக்கும் பயணச் சிட்டையை வழங்குவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் தனியார் பஸ் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பஸ்களில் 'ரிக்கெற்'வழங்கப்படவில்லை என பயணிகள் தெரிவித்தால் குறித்த பஸ் சாரதி நடத்துநருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-15)

## மின்சாரம் அற்ற பயனாளிகளுக்கு சூரியமின்கலங்கள் கிடைத்தன

யாழ்ப்பாணம், ஒக.30

நெடுந்தீவில் மின்சாரம் அற்ற பகுதிகளைச் சேர்ந்த ஐந்து பயனாளிகளுக்குத் தென்கொரிய அரசால் வழங்கப்பட்ட ஐந்து சூரிய மின்கலங்கள் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவால் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மின்சாரம் கிடைக்காத ஏனைய பயனாளிகளுக்கும் இவை வழங்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சருடன் தென்கொரிய தூதுவர், வடபிராந்திய கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ண, வடபகுதிக்கான மின்சார சபை பிரதி முகாமையாளர் கே.பி.குணதிலக ஆகியோரும் வருகை தந்தனர்.

நெடுந்தீவு துறைமுகத்தில் நெடுந்தீவுப் பிரதேச செயலர் ஆ.ஸ்ரீ, பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்சியன், கடற்படை அதிகாரி ஏக்கநாயக்க, பொலிஸ் அதிகாரி ஏக்கநாயக்க ஆகியோர் அமைச்சரை வரவேற்றனர். (ம-7)

## பஸ் தரிப்பிடங்களை அமைக்கக் கோரிக்கை

வடமராட்சி, ஒக.30

வடமராட்சிப் பிரதேசத்தில் பஸ் தரிப்பிடங்கள் அடையாளப்படுத்தப்படாமையால் கண்ட கண்ட இடங்களிலும் இ.போ.ச., தனியார் பஸ்கள் தரித்துப் பயணிகளை ஏற்றி இறக்கி வருகின்றன.

கண்ட கண்ட இடங்களில் பயணிகளை ஏற்றி இறக்குவதால் சேவையில் ஈடுபடும் பஸ் சாரதிகள் சிரமங்களை எதிர்கொள்வதுடன் விபத்துக்களும் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பிரதான இடங்களில் பிரதான சந்திகளில் பஸ் தரிப்பிடங்கள் அடையாளமிடப்பட்டு பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் ஏனைய பல இடங்களில் பஸ் தரிப்பிடங்கள் அடையாளப்படுத்தப்படாமலும் பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்படாமலும் உள்ளன.

பயணிகள் அதிகமாகக் கூடும் இடங்களை இனங்கண்டு பஸ் தரிப்பிடங்கள் புதிதாக அமைய வேண்டிய இடங்களைத் தெரிவு செய்து அவற்றை அடையாளப்படுத்தினால் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சாரதிகளுக்கு அது இலகுவாக இருக்கும் என்றும் கருத்துக் கூறப்பட்டது. (ம-8)

## புதிய மின் பரிவர்த்தனை நிலையம் டிசெம்பரில் யாழில் இயங்கும்

### மின்சக்தி அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக.30

டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் புதிய மின் பரிவர்த்தனை நிலையம் யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பிக்கும் என்று மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

புங்குடுதீவில் மின் விநியோகப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட தகவலையும் தெரிவித்தார்.

மின்சாரத்தை சிறுவர்களின் கல்விக்கும் இளைஞர், யுவதிகளின் தொழில் வாய்ப்புக்கும் பயன்படுத்துங்கள். இன்று மின் வழங்கப்படும் போது உங்கள் முகம் பிரகாசமாக இருக்கிறது. இந்தப் பிரகாசம் என்றைக்கும் இருக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தி வளமுடன் வாழுங்கள்- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜ்மல் கசாப்புக்கு தூக்கு

## உறுதி செய்தது உச்ச நீதிமன்றம்

மும்பைத் தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடைய தீவிரவாதி அஜ்மல் கசாப்பின் மேன்முறையீட்டு மனுவை, இந்திய உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இதன் மூலம் கசாப்புக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி பாகிஸ்தானிலிருந்து மும்பைக்குள் கடல் மார்க்கமாக இரவில் புகுந்த தீவிரவாதிகள் பத்து பேர் கோரமான தாக்குதலை நடத்தினர். 3 நாள்கள் நடந்த இந்த பயங்கரமான தீவிரவாதத் தாக்குதலால் இந்தியாவே அதிர்ந்து நின்றது. உலக நாடுகள் இந்தச் சம்பவத்தை தொலைக் காட்சிகளில் நேரடியாகப் பார்த்து அதிர்ச்சி அடைந்தன.

3 நாள்கள் நடந்த மேற்படி தாக்குதலில் 9 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கசாப் மட்டும்



உயிருடன் பிடிபட்டான். அவனைப் பிடித்தவர் பிரதிப் பொலிஸ் அதிகாரி துக்காராம். மிகவும் தீரத்துடன் செயற்பட்டு கசாப்பைப் பிடித்த அவர் தீவிரவாதிகளின் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தார்.

வரலாறு காணாத இந்த தீவிரவாதத் தாக்குதலில் வெளிநாட்டவர்கள் உள்பட 166 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

கசாப் மீது வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்து வந்தது. இதில் 2010ஆம் ஆண்டு மே 6ஆம் திகதி மும்பை தனி நீதிமன்றம் கசாப்புக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதை பின்னர் பாம்பாய் உயர்நீதிமன்றம் 2011, ஒக்ரோபர் 10 ஆம் திகதி உறுதி செய்து உத்தரவிட்டது.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார் கசாப். அதில் தனக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையைக் குறைத்து ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு கோரியிருந்தான். இந்த வழக்கில் நேற்றுத் தீர்ப்பை அளித்தது உச்ச நீதிமன்றம்.

இதையடுத்து அவனைத் தூக்கிலிட நாள் குறிக்கப்படும். இருப்பினும் கசாப் சார்பில் ஜனாதிபதியிடம் கருணை கோரி மனு செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

## தேர்தலைச் சந்திக்க தயாராம் மம்தா



லோக்சபாவுக்கு முன்கூட்டியே தேர்தல் வருமெனில் அதைச் சந்திக்கத் நாங்கள் தயாராக உள்ளோம், அதேநேரத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கவிழ்வதையும் நாம் விரும்பவில்லை என்று திரிணமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு உட்பட பல பிரச்சினைகள் காரணமாக, லோக்சபாவுக்கு முன்கூட்டியே தேர்தல் வருவதற்கான வாய்ப்பு இருப்பதாக அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர். இந்தச் சூழலில், ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் முக்கியக் கட்சியான திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜியிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டன.

அதற்கு பதில் அளித்த மம்தா பானர்ஜி தெரிவித்ததாவது:-

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அதன் ஐந்தாண்டு பதவிக் காலத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பது தான் எங்களது விருப்பம். லோக்சபாவுக்கு முன்கூட்டியே தேர்தல் வருவதை நாம் விரும்பவில்லை.

ஒரு வேளை லோக்சபாவுக்கு இடைத்தேர்தல் நடப்பதற்கான சூழல் உருவானால், அது சற்று சிரமமாகத்தான் இருக்கும். எப்படி இருந்தாலும் அரசியல் சூழலுக்கு ஏற்ப தேர்தலைச் சந்திக்க நாம் தயாராகவே இருக்கிறோம்- என்றார். (வ)

## ஈரான் சென்ற பிரதமருக்கு வரவேற்பு



உலகின் பல்வேறு நாட்டு தலைவர்கள் கலந்து கொள்ளும் அணி சேரா நாடுகள் மாநாடு ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இன்று ஆரம்பமாக உள்ளது.

இதில் பங்கேற்பதற்காக தெஹ்ரான் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அரசு முறையில் இராணுவ வரவேற்பு அளிக்கப்பட்டது.

தெஹ்ரான் விமான நிலையத்தில் பிரதமர் மன் மோகன் சிங்கை, அந்நாட்டின் நிதியமைச்சர் சையது ஷன்செதின் வரவேற்றார்.

இந்த மாநாட்டில் பங்கேற்கும் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியுடன், பிரதமர் மன்மோகன் சிங் முக்கிய விடயங்கள் தொடர்பில் பேச்சு நடத்துவார் எனத் தெரிகிறது. (வ)

## விளையாட்டின்போது நடந்த துக்கம் மாணவன் சாவு

தமிழ்நாட்டில் உள்ள பள்ளி ஒன்றில் நேற்றுக் காலை கால்பந்து விளையாட்டின் போது மாணவன் ஒருவனின் முகத்தில் பந்து விழுந்ததையடுத்து அந்த மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கடலூரில் செயின்ட் ஜோசப் பள்ளி மற்றும் கல்லூரி இயங்கி வருகிறது. இங்கு பரதன் என்ற மாணவன் பாடசாலை விடுதியில் தங்கி 9 ஆம் வகுப்பு படித்து வந்தான்.

இந்நிலையில் நேற்றுக் காலை பாடசாலையில் மாணவர்கள் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது பரதனின் முகத்தில் பந்து விழுந்ததில் நிலை தடுமாறி கீழே விழுந்தான். ஏனைய மாணவர்கள் அவனை தூக்கும் போது சம்பவ இடத்திலேயே உயிரிழந்த விடயம் தெரிய வந்தது.

தற்போது மாணவன் உடல் கடலூர் பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

## கேரளாவில் களை கட்டிய ஓணம் பண்டிகை



கேரளாவில் நேற்று ஓணம் பண்டிகை மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

கேரள மக்களால் சாதி, மத வேறுபாடின்றி கொண்டாடப்படும் ஓணம் பண்டிகையை, கேரளாவின் அறுவடை திருநாள் என அழைக்கின்றனர். கொல்லவர்ஷம் எனும் மலையாள ஆண்டின் சிங்கம் மாதத்தில் ஹஸ்த்தம் நட்சத்திரத்தில் தொடங்கி திருவோணம் நட்சத்திரம் வரை இருக்கும் 10 நாள்களாக இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் மிகப் பழம்பெரும் பண்டிகைகளில் ஒன்றாக இணங்காணப்பட்டுள்ள ஓணம் பண்டிகைக்கு சுமார் ஓராயிரம் ஆண்டு கால வரலாறு உள்ளது.

அத்தம், சித்திரா, சுவாதி என ஆரம்பிக்கும் 10 நாள் விழா, பத்தாம் நாள் திருவோணம் எனும் கொண்டாட்டத்துடன் முடிவடைகிறது. ஒவ்வொரு தினத்துக்கும் ஒவ்வொரு விசேஷம் இருக்கிறது. நான்காம் நாள், ஒன்பது சுவைகளில், ஓண சாத்யா எனும் உணவு தயார் செய்யப்படுகிறது.

அன்று புலிக்களி அல்லது கடுவக் களி என அழைக்கப்படும் புலி வேடமிட்ட நடனம் நடை பெறுகிறது. சிவப்பு, கறுப்பு மற்றும் மஞ்சள் வண்ணத்தால் புலி வேடமிட்டு நடனம் ஆடி மகிழ்கின்றனர். (வ)

## 32 குற்றவாளிகள் குஜராக் கலவரத்தில் நீதிமன்றம் தீர்ப்பு

குஜராத் மாநிலத்தில் நடந்த இனக்கலவரத்தில் 32 பேரை குற்றவாளிகளாக அகமதாபாத் சிறப்பு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக இனக்கலவரம் ஏற்பட்டது. இந்தக்கலவரம் நடந்த நரோடா பாட்டியா பகுதியில் 95 பேர் கத்தியால் குத்தப் பட்டும் தீ வைத்தும் கொளுத்தப்பட்டனர்.

இந்தக்கலவரம் தொடர்பான வழக்கு விசாரணை குஜராத் அகமதாபாத் சிறப்பு நீதிமன்றத்தில் சுமார் 10 ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. விசாரணை முடிவடைந்து, குற்றம் சாட்டப்பட்டவர்களில் 32 பேர் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளனர். (வ)

## மன்மோகனைப் பதவி விலகக்கோரி நாடு முழுவதும் பா.ஜ.க. போராட்டம்

நிலக்கரிச் சுரங்க முறைகேட்டுக்கு பொறுப்பேற்று பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலகக் கோரி நாடு முழுவதும் போராட்டம் நடத்த பாரதீய ஜனதாக்கட்சி முடிவு செய்துள்ளது.

டில்லியில் நேற்று முன்தினம் பா.ஜ. நாடாளு மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு கட்சியின் நாடாளு மன்ற குழு தலைவர் அத்வானி தலைமை வகித்தார்.

அதில், நிலக்கரி சுரங்க முறைகேட்டுக்கு எதிரான போராட்டத்தை நாடாளு மன்றத்தோடு நிறுத்தி விடக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த முறைகேடு பற்றி நாட்டு மக்களிடையே



பிரசாரம் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. சுரங்க முறைகேட்டுக்கு பொறுப்பேற்று பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலக்கோரி நாடு முழுவதும் போராட்டம் நடத்தவும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

போராட்டத்துக்கான அட்டவணையை கட்சியின் பொதுச் செயலாளர்கள் தயாரிப்பார்கள் என்று அத்வானி குறிப்பிட்டார். இந்த கூட்டத்தில் சுஷ்மா சுவராஜ், அருண் ஜெட்லி ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ)

## எய்ட்ஸ் நோயாளர் எண்ணிக்கையில் முதலிடத்தில் ஆந்திரா மாநிலம்

ஆந்திரா மாநிலத்தில் எய்ட்ஸ் நோயால் 5 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வெளியாகியுள்ள தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா முழுவதும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 20 சதவிகிதம் பேர் ஆந்திராவில் உள்ளனர் என்றும் அந்த புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

எய்ட்ஸ் நோயாளிகளைக் கொண்ட இரண்டாவது மாநிலமாக கர்நாடகம் விளங்குகிறது. இங்கு 2.5 லட்சம் நோயாளிகள் உள்ளனர்.

3 ஆவது இடத்தில் மேற்கு வங்க மாநிலம் 1.6% லட்சம் எய்ட்ஸ் நேயாளிகளுடன் உள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு 1.54 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகளுடன் 3ஆவது இடத்தில் இருந்த தமிழகத்தில் புதிதாக இந்த நோயால் தாக்கப்படுவோர் எண்ணிக்கை குறைய ஆரம்பித்துள்ளது. இதனால் தேசிய அளவில் 5 ஆவது இடத்துக்கு தமிழகம் முன்னேறியுள்ளது.


ஆந்திராவில் படிப்பறிவின்மை, வேலையின்மை, போன்ற பிரச்சினைகளும் எச்.ஐ.வி. நோய் பரவுவதற்கு காரணமாக அமைந்துள்ளன. எய்ட்ஸைக் கட்டுப்படுத்த சரியான பிரசார உத்திகளை பயன்படுத்த முடியாமல் ஆந்திரா அரசு தோல்வியடைந்துவிட்டதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளைச் சரணடையக் கோரி சிரியாவில் துண்டுப் பிரசுரங்கள்

டாமாகஸ்,ஒக.30

சிரியாவில் அரச படையினருக்கு எதிராக மோதல்களில் ஈடுபடுகின்ற போராளிகளைச் சரணடையுமாறு வலியுறுத்தும், துண்டுப்பிரசுரங்களை சிரிய பாதுகாப்பு தரப்பினர் விநியோகித்து வருகின்றனர்.



ஹெலிகொப்டர் மூலம் டமாகஸ் பகுதியில் இவ்வாறான துண்டுபிரசுரங்கள் வீசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**பசார்ட் அசாட்டின் இந்த நடவடிக்கை, சிரியாவின் போராளிகளை உளரீதியாக பின்னடையச் செய்வதற்கான திட்டமாக இருக்கலாம்**

போராளிகள் தமது ஆயுதங்களை முழுமையாக கையளிக்க வேண்டும் என்றும், அல்லது எதிர்வரும் நாள்களில் பெரியளவிலான தாக்குதல்களைச் சந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் அதில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பசார்ட் அசாட்டின் இந்த நடவடிக்கை, சிரியாவின் போராளிகளை உளரீதியாக பின்னடையச் செய்வதற்கான திட்டமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் போராளிகள் தரப்பிலிருந்து இதற்கு எதிர்பார்த்த அளவு பயன் கிடைக்கவில்லை என்று சிரிய பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 67 ஆண்டுகளுக்கு முன்னர் தொலைந்த மகளை சந்திக்கும் தாய்



கனடாவில் 91 வயது பெண் ஒருவர், 67 ஆண்டுகளுக்கு முன் தொலைந்து போன தன்னுடைய மகளைச் சந்திக்க உள்ளார்.

கனடாவில் கேல்கரி நகரில் வசித்து வரும் பெஸ்ஸி செடோர் (வயது 91) என்ற பெண், 1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி தன்னுடைய மகளை விட்டு பிரிந்தார்.

அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி ஒரு விழாவை தன்னுடைய வீட்டில் கொண்டாடுவார். இந்த விழா ஏன் என்று நண்பர்கள் கேட்டால், சரியான பதில் கூறமாட்டார்.

இந்த நிலையில் கடந்த மாதம் இவருடைய மகன் தன்னுடைய சகோதரி காணாமல் போனது குறித்து பேஸ் புக்கில் பதிவு செய்து இருந்தார்.

இதனையடுத்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அதில் நான் தான் தொலைந்து போன அந்த பெண் என்று நபர் ஒருவர் தகவல் கொடுத்தார்.

இந்தப் பெண்ணின் பிறந்த திகதி மற்றும் சில அடையாளங்களைச் சரி பார்த்த சகோதரர், இவர் தான் தொலைந்து போன தன்னுடைய சகோதரி என்பதை உறுதி செய்தார்.

இதனையடுத்து தன்னுடைய தாயை 67 ஆண்டுகளுக்கு பின்னர் வருகிற செப்ரெம்பர் மாதம் சந்திக்க உள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## சீன பாதுகாப்புக்குழு இந்தியா பயணம்

சீனாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் 8 ஆண்டுகளுக்கு பின்பு இந்தியாவுக்குப் பயணம் செய்யவுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங் லீ தலைமையிலான குழுவினர் ஐந்து நாள் சுற்றுப்பயணமாக அடுத்த வாரம் இந்தியாவுக்கு செல்கின்றனர்.

இவர்கள் இந்திய இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோனியைச் சந்தித்து பேச உள்ளனர்.

கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு பாதுகாப்புத்துறை தொடர்பான அமைச்சரவைக் கூட்டம் இந்தியா- சீனாவுக்கு இடையே நடந்தமை குறிப்பிடத்தக்கது.



மியன்மார் சென்ற ஐ.நா. மக்கள் தொகை மற்றும் நிதி தொடர்பான நிர்வாக இயக்குநர், பாப்படியூன்டே ஒஸ்டிமெஹின், அந்தநாட்டு எதிர்க்கட்சித்தலைவர் ஆங்சாங்சூகியை நைப்பியாட் நகரில் சந்தித்தார்.

## பங்களாதேஷ் சிப்பாய்கள் 665 பேருக்கு சிறைத் தண்டனை

2009 ஆம் ஆண்டு கிளர்ச்சியில் ஈடுபட்ட பங்களாதேஷ் எல்லைக்காவல் படையினர் 665 பேருக்கு பங்களாதேஷ் இராணுவ நீதிமன்றமொன்று நேற்றுமுன்தினம் சிறைத் தண்டனை விதித்துள்ளது. இதன் மூலம் இந்தக்கிளர்ச்சி தொடர்பாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 5000 ஐ கடந்துள்ளது.

**கிளர்ச்சி தொடர்பாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 5000ஐ கடந்துள்ளது.**

2009 ஆம் ஆண்டு டாக்காவிலுள்ள பங்களாதேஷ் ரைபிள்ஸ் படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பங்களாதேஷ் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் 57 பேர் உயிரிழந்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக44 ஆவது படையணியைச் சேர்ந்த665 பேர் குற்றவாளிகள் என பங்களாதேஷ் இராணுவ நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

குற்றஞ்சுமத்தப்பட்ட 673 பேரில் 7 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோருக்கு 4 மாதங்கள் முதல் 7 வருடகாலம் வரையான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 113 பேருக்கு 7 வருடசிறைத்தண்டனைவிதிக்கப்பட்டது என அரச வழக்குத் தொடுனரான லெப். கேணல் ஸாகிர் ஹொஸைன் தெரிவித்தார். (வ)

## திபெத் விடுதலைக்காக மேலும் இரு இளம் துறவிகள் தீக்குளிப்பு

சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து திபெத்தின் சிசுவான் மாநிலத்தில் இரண்டு திபெத்திய இளம் பருவத் துறவிகள் தீக்குளித்து தமது உயிரை மாய்த்துள்ளனர்.

கல்சாங் எனும் 18 வயது பெளத்த துறவி ஒருவரும், டம்சோவெக் எனும் 17 வயது முன்னாள் பெளத்த துறவி ஒருவருமே நேற்று முன்தினம் இவ்வாறு தீக்குளித்து உயிரிழந்தனர்.


தீக்குளிப்புச் சம்பவங்கள் அதிகமாக நடைபெறும் அபாவில் உள்ள கிர்தி அரசமாளிகையின் முன்னால் இவர்களும் தீக்குளித்துள்ளனர். இவர்களது இறப்பை அடுத்து, 2009 இலிருந்து திபெத்தின் விடுதலைக்காக தீக்குளித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 51 ஆக அதிகரித்துள்ளது.

எனினும் சர்வதேச ஊடகங்கள் திபெத்திய வலயங்களுக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டிருப்பதால் இவ்வாறான தீக்குளிப்புச் சம்பவங்களை உறுதி செய்து கொள்ளவோ அல்லது முன்னரே தடுக்கவோ முடியாது உள்ளதாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

1950 ஆம் ஆண்டு திபெத் மீது இராணுவ படையெடுப்பு ஒன்றை மேற்கொண்ட சீனா, அன்று முதல் திபெத் சீனாவின் ஒரு பகுதி என கூறிவருகிறது.

திபெத்தின் பெளத்த மத தலைவர் தலாய்லாமா தொடர்ந்து இந்தியாவிலிருந்து கொண்டு திபெத்தின் விடுதலை தொடர்பான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். (வ)

## 14 ஆயிரம் கி.மீ. செல்லும் நவீன ஏவுகணையை சோதித்தது சீனா



பீஜிங், ஒக.30

கண்டம் விட்டு கண்டம் செல்வதும், அணு குண்டுகளுடன் 14 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் கொண்டதுமான அதிநவீன, புதிய தலைமுறை ஏவுகணையை வெற்றிகரமாக சீனா சோதனை செய்து பார்த்துள்ளது.

இதுகுறித்து சீன அரசின் தொலைக்காட்சி ஒன்றில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சுமார் 14 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து செல்லக்கூடிய டோங் பெங்க், 41 ரக ஏவுகணை கடந்த மாதம் வெற்றிகரமாக சோதனை செய்யப் பட்டுள்ளது.

இது அணுகுண்டுடன் கண்டம் விட்டு கண்டம் செல்லக்கூடிய புதிய தலைமுறை ஏவுகணையாகும். இந்த ஏவுகணையில் 10 அணுகுண்டுகளைப் பொருத்தி அனுப்பி வைக்க முடியும் -என்றுள்ளது.

இந்த செய்தியின்போது, சீனாவின் பெண் விஞ்ஞானிகள் குழுவினர் வாகனங்களில் சென்று ஏவுகணையை ஏவுவதற்கான பணிகளைச் செய்யும் அரிய வீடியோ காட்சியும் ஒளி பரப்பப்பட்டது. (வ)

## ஆம்ஸ்ரோங்குக்கு மரியாதை அரைக்கம்பத்தில் அமெ. கொடி

### ஒபாமா உத்தரவு

நிலவில் கால் பதித்து சாதனை படைத்து மறைந்த நீல் ஆம்ஸ்ரோங்குக்கு மரியாதை செலுத்தும் வகையில் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உத்தர விட்டுள்ளார்.



அமெரிக்காவின் அப்பலோ விண்கலம் மூலம் 1969 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி நிலவில் கால் பதித்து நீல் ஆம்ஸ்ரோங் சாதனை படைத்தார். இதய நோயால் அவதிப்பட்டு வந்த அவர், (வயது 82) கடந்த சனிக்கிழமை இரவு காலமானார். இறுதிச் சடங்கு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில், நீல் ஆம்ஸ்ரோங்குக்கு மரியாதை செலுத்தும் வகையில், அமெரிக்க அரசுக்குச் சொந்த மான கட்டடங்கள், படைத்தளங்களில் உள்ள தேசியக் கொடிகளை நாளை வெள்ளிக்கிழமை அரைக் கம்பத்தில் பறக்கவிட வேண்டும் என்று ஒபாமா உத்தர விட்டுள்ளார். (வ)

## குர் ஆனை எரித்த அமெரிக்க வீரர்களுக்குத் தண்டனை

ஆப்கானிஸ்தானில் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனை எரித்த 6 பேரை அமெரிக்க பாதுகாப்புத்துறை தண்டிக்க அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் தங்கியுள்ள பக்ரம் விமானப்படைத் தளத்தின் குப்பைத் தொட்டியில் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆன் எரிந்த நிலையில் கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தச் செயலைக் கண்டித்து ஆப்கானிஸ்தான் மக்கள் போராட்டம் நடத்தினர். இது மிகப்பெரிய பிரச்சினையாக வெடித்தது.

இதையடுத்து அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா மன்னிப்புக் கேட்டார். இதற்கிடையே இந்தச் சம்பவம் குறித்து பிரிகேடியர் ஜெனரல் பிரையன் ஜி. வாட்சன் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

[illegible] சுமார் 100 குர்ஆன் மற்றும் இஸ்லாமிய நூல்களை அமெரிக்க படையினர் எரித்துள்ளனர்.

அங்குள்ள அமெரிக்க வீரர்கள் ஆப்கானிஸ்தான் படையினரின் அறிவுரையைக் கேட்கவில்லை. சிறை நூலகத்தில் உள்ள நூல்களை வைத்து கைதிகள் தங்களுக்கு கருத்துகளை பரிமாறிக்கொள்கின்றனர் என்று பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மாலுமிகள் கடத்தல்

டோகோ,ஒக.30

டோகோ கடற்பிராந்தியத்தில் பயணித்து கொண்டிருந்த எண்ணெய்த் தாங்கியையும் அதில் பணியாற்றிய 24 மாலுமிகளையும் கடற்கொள்ளையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் கடத்தலின் போது டோகோ கரையோர கடற்படையினருடன் துப்பாக்கிச் சமர் இடம்பெற்ற போதிலும், எண்ணெய்த் தாங்கியை கொள்ளையர்கள் கைப்பற்ற முடியாமல் போயுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டு முதல் ஏழு மாத காலப்பகுதியினுள் மேற்கு ஆபிரிக்க கடற்பிராந்தியத்தில் வைத்து ஆறு சரக்கு கப்பல்களை கடற்கொள்ளையர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தநிலையில், சோமாலிய கடற்கொள்ளையர்கள் புதிய யுக்தி ஒன்றைத் தற்போது கையாள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கப்பலுக்கான கப்பத்தொகையைப் பெறுவதில் அவர்கள் அவசரம் காட்டுவதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

சில வேளைகளில் பல மாதங்களின் பின்னரே கப்பம் பெறுவதற்கான கோரிக்கைகள் கப்பல் நிறுவனங்களைச் சென்றடைவதாகவும் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(வ)

# அமெரிக்காவில் அவசரநிலை

## 4 மாகாணங்களில் புயல் எச்சரிக்கை



கரீபியன் கடலில் ஏற்பட்ட 'இசாக்' புயல் அமெரிக்காவில் கடும் புயலாக மாறி லூசியானா மாகாணத்தில் மையம் கொண்டுள்ளது. எனவே 4 மாகாணங்களில் ஜனாதிபதி ஒபாமா அவசர நிலையைப் பிறப்பித்துள்ளார்.

புயலால் நியூ ஒன்லியன்ஸ் நகரம் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

அங்கு கடும் சூறைக் காற்றுடன் பலத்த மழை பெய்தது. மக்கள் அன்றாட வாழ்க்கையை இழந்து வீடுகளில் முடங்கியுள்ளனர். எனவே அமெரிக்காவின் லூசியானா, மிஸ்சிசிப்பா, அலபாமா, புளோரிடா ஆகிய 4 மாகாணங்களில் ஜனாதிபதி ஒபாமா அவசர நிலையை பிறப்பித்துள்ளார்.

இதுகுறித்து ஒபாமா தெரிவித்ததாவது:-

புயல் தாக்கினால் சேதமும், வெள்ளப்பெருக்கும் பெரு மளவில் ஏற்படும் அபாயம் உள்ளது. வளைகுடாப் பகுதி யில் இருப்பவர்கள் உள்ளூர் அதிகாரிகளின் கோரிக்கை களை ஏற்று அங்கிருந்து வெளியேற வேண்டும்.

எச்சரிக்கைகளைக் கடுமையாகப் பரிசீலித்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுங்கள். அரசு உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன- என்றார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு லூசியானாவைத் தாக்கிய 'கத்ரீனா' புயலுக்கு ஆயிரத்து 800 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(வ)

# படகு கவிழ்ந்தது 30 பேர் இறப்பு

## லிபியாவில் பரிதாபம்



எகிப்திலிருந்து சட்டவிரோதமாக ஐரோப்பா நோக்கி பயணித்த படகு ஒன்று லிபியா அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்தனர்.

ஒவ்வொரு வருடமும் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமாக ஐரோப்பாவில் குடியேறுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்காக இவர்கள் லிபியா கடல் பகுதிக்கு வந்து அங்கிருந்து இத்தாலி நோக்கி பயணம் மேற்கொள்கின்றனர்.

இந்தநிலையில் எகிப்து நாட்டிலிருந்து 40 பேர் சட்டவிரோதமாக ஐரோப்பா நோக்கி படகில் பயணம் மேற் கொண்டனர். 15 பேர் செல்லக் கூடிய மீன்பிடி படகில் 40 பேர் பயணம் செய்திருக்கின்றனர். நள்ளிரவில் லிபியா கடலுக்கு அருகே அவர்கள் சென்றபோது, அதிக எடை காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் படகில் பயணம் மேற்கொண்ட அனைவரும் கடலுக்குள் மூழ்கினர். அப்போது உயிர் தப்பிய சிலர் தங்களைக் காப்பாற்றும்படி அலறல் சப்தம் எழுப்பியுள்ளனர். இதையடுத்து 5 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இதுவரை மூன்று உடல்கள் மட்டுமே கரை ஒதுங்கியுள்ளன. இதனால் படகில் பயணம் செய்த ஏனைய அனைவரும் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# 55ஆவது சுதந்திர தினத்தில் ஒரு மில்லியன் டுவிட்டுக்களை குறிவைத்திருக்கும் மலேசியா

மலேசியாவின் 55 ஆவது சுதந்திரதினமான நாளை வெள்ளிக்கிழமை மலேசிய 'டுவிட்டர்' பயனாளர்களால் ஒருமில்லியன் டுவிட்டுக்களை இட்டு சாதனை படைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

ஒற்றுமை உணர்வுடன் ஒரே மலேசியா எனும் கொள்கையுடன் திகழ்ந்து வரும் மலேசியா தனது 55 ஆவது சுதந்திரதினத்தை வருகிற 31ஆம் திகதி கொண்டாடவுள்ளது. இதன் போது பல சிறப்பம்சங்களை நிகழ்த்த மலேசிய அரசு திட்டமிட்டுள்ளது. அதன் ஓர் அங்கமாக சுதந்திர தினத்தன்று மலேசிய டுவிட்டர் பயனாளர்கள் 'மெர்டேகா' எனும் சொல்லை ஒரு மணித்தியாலத்துக்குள் டுவிட்டர் வழியாக பதிவிடுமாறு தகவல் மற்றும் பண் பாட்டுத்துறை அமைச்சர் டத்துக் ரீ ரைஸ் யாடிம் மக்களிடம் தெரிவித்துள்ளார்.

சுதந்திர அணிவகுப்பு ஒத்திகை நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. இதில் கலந்து கொண்டு பார்வையிட்ட டத்துக் ரீ ரைஸ் யாடிம் இவ்வாறு தெரிவித்தார்.

அதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புகிட் ஜலில் எனும் இடத்தில்உள்ள தேசிய அரங்கத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவுள்ளன. இதன் போது இரவு 8.15- 9.15 இற்குள் மலேசிய டுவிட்டர் பயனாளர்கள் தங்களின் டுவிட்டர் வழி 'மெர்டேகா' எனும் சொல்லை பிரபலமடையச் செய்து அதை ஒரு மில்லியன் டுவிட்டுக்களாக எட்டச் செய்து உலக சாதனையை நிலைநாட்ட குறி வைத்துள்ளோம் -என்றார்.

# மது அருந்துவோருக்கு இனித் தனிவரி இத்தாலியில் புதிய நடைமுறை

மது அருந்துவோருக்கு தனி வரி விதிக்க இத்தாலி தீர்மானித்துள்ளது. மது அருந்துவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சில நாட்டு அரசுகள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில் பிரான்ஸ் நாட்டை போலவே மதுபானம் அருந்துவோருக்கு என தனி வரி விதிக்க இத்தாலியும் தீர்மானித்துள்ளது. இந்த வரி விதிப்புத் திட்டத்தை சுகாதாரத் துறை அமைச்சர் ரீனாதோ பால்துசி தீவிரமாக பரிசீலித்து வருகிறார்.

அடுத்தவாரம் நடை பெறும் அமைச்சர்கள் கூட்டத்தில் முக்கியமான விவாதமாக இது இருக்கும் என தெரிகிறது. இந்தச் சட்டம் நடை முறைக்கு வந்தால் மதுபானம் அருந்துவோர் ஒரு போத்தலுக்கு 3 யூரோ கூடுதல் வரி செலுத்த வேண்டும்.


**கோழிக்குஞ்சு விநியோகம்**

**BAHIRAHA No - 01**

புறொயிலர் குஞ்சுகள், சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் 30.08.2012 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளளவும்.

★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.

**T.P : 077 6090926**

(22300)(6.8)

**காணி தேவை**

பளை,இயக்கச்சி உட்பட்ட ஏ9 வீதிக்கு அண்மித்த பகுதியில் விவசாயம், மரவளர்ப்புக்கு உகந்ததும் 30 ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணம் உள்ள காணி உடன் தேவை. அறுதி உறுதி வரைபடம் கைவசம் இருப்பின் உடன் தொடர்பு கொள்ளவும்.

(22298)(5-6) தொடர்பு: 077 362 6230

**வீடு வாடகைக்கு**

நல்லூரில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகஸ்தர்கள்/வியாபார நிறுவன உத்தியோகஸ்தர்கள் விரும்பத்தக்கது. பகுதியாகவும் கொடுக்கப்படும்.

(22192)(5-6) தொடர்பு: 077 629 6570

**முதலாவது பிறந்த நாள் வாழ்த்து**

வி. டிஷானுஜன் / வி. டிஷானுஜா

HAPPY BIRTH DAY



பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திரு. திருமதி விவேகானந்தன் - சுகிர்தா தம்பதியரின் இரட்டைச்செல்வங்களான செல்வன் டிஷானுஜன், செல்வி டிஷானுஜா தமது முதலாவது பிறந்தநாளை இன்று (30.08.2012) வியாழக்கிழமை தங்கள் இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றனர்.இவர்கள் எல்லாம் வல்ல இறைவன் அருளால் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர்

(22096)(6.8)



**சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் இரதோற்சவம்**

**30.08.2012**

அன்பருக்கு அருள்பவனே ஐங்கரனே
அடியார்க்கு அருள்பவனே ஆனைமுகனே
ஆறுதலைத் தருபவனே விநாயகனே
ஆசைகளை அறுப்பவனே கஜமுகனே
இகபர சுகம் அருள்பவனே
இனியவனே ஈசன் மைந்தனே
சங்கத்தமிழ் கணபதியே
சங்குவேலிக்கு அதிபதியே
வேண்டுபவை ஈபவனே
வேழமுகம் கொண்டவனே
மாதுமையாள் மைந்தனே
மாங்கனி பெற்றவனே
விக்கினங்கள் தீர்க்கும் விக்கினேஸ்வரனே
வினைகளை களைந்திடுவாய் கஜானனே
சித்தியெல்லாம் தருபவனே
சிவஞானப் பிள்ளையாரே
கஜமுகாசுரனை சங்கரித்த கஜானனே
கல்வி கேள்விகளை அருள்பவனே
சீர் பூத்திடும் சங்குவேலியில் உறைபவனே
சீரும் சிறப்பும் அருள்பவனே
எழில் பொங்கும் ரதமேறி
எம்மையெல்லாம் காத்திடுவாய்

திருமதி கௌரி இரத்தினவேல்,
சங்குவேலி.

(சி/2970)(6.8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(25)

நடந்ததை எண்ணி கலங்குவதைவிட நடக்கப்போவதை சிந்திப்பதே புத்திசாலித்தனம் என்ற முடிவுக்கு அவர் வந்து விட்டார்.

உண்மையில் அதற்குப் பிறகு என்ன நடந்தது தெரியுமா? இருபத்தொரு தினங்களிலேயே மீண்டும் தன்னுடைய தொழிற்சாலையைத் தொடங்கி ஆறுதல் கொடுத்தவர்களுக்கு பொருள்களை விநியோகம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

சோதனைகளை சாதனைகளாக மாற்றிக் கொள்ளுகின்ற மனவலிமை தாமஸ் அல்வா எடிசனுக்கு இருந்தது.

தொழிற்சாலை எரிந்து சாம்பலானவுடன் அவர் சொன்ன வாசகங்கள் இவை. "பெரிய அழிவிலும் ஒரு நன்மை இருக்கிறது. நமது தவறுகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகி விட்டன. தவறுகளை நீக்கி புதிதாக தொழிலைத் தொடங்க வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றி"

இப்படி எத்தனை பேரால் சொல்ல முடியும்? இப்படிச் சொல்கின்ற மனவலிமை படைத்தவர்கள் மட்டுமே சாதனையாளர்களாக இருக்கிறார்கள்.

எடிசனுக்கு ஏற்பட்டது மிகப்பெரிய நஷ்டம்தான். அதற்காக தலையில் கையை வைத்துக்கொண்டு அவர் உட்கார்ந்து விடவில்லை. பெரிய விபத்தையும் சிறியதாக பாவிக்கும் மனநிலை அவருக்கு இருந்தது.

இதனால் அவருக்கு ஏற்பட்ட சோதனை தூர விலகிப் போய்விட்டது. மீண்டும் முயற்சியில் ஈடுபட்டு சாதனைகளை நெருக்கமாக்கிக் கொண்டுவிட்டார்.

நமது மனவலிமை அதிகமாக இருந்தால் துன்பத்தின் வலிமை குறைந்துபோகிறது. நமது மனவலிமை குறைவாக இருந்தால் துன்பத்தின் வலிமை பலம் பெற்றுவிடுகிறது.

ஆகவே சோதனைகளைச் சாதனைகளாக மாற்ற நீங்கள் விரும்பினால் கீழே சொல்லியுள்ள விடயங்களை உறுதியாக மனதில் பதிய வைத்துக்கொள்ளுங்கள்.

1. சோதனைகள் உங்களுக்கு நேரும்போது அவை உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த கடவுள் அளித்த வரப்பிரசாதம் என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

2. பிரச்சினைகள் தோன்றினால் அதைவிட்டு விலகி நின்று அதன் தன்மைகளைப் பரிசோதனை செய்யுங்கள்.

3. உங்கள் கஷ்டங்களைப் புரிந்துகொள்ள மனதின் முழுவலிமையையும் பயன்படுத்துங்கள்.

4. கஷ்டத்தை வென்றுவிடலாம் என்கிற நம்பிக்கையுடன் முயற்சியைத் தொடங்குங்கள்.

5. தியானத்தில் அமர்ந்து பிரச்சினைகள் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். அது நல்ல மனத் தெளிவை உங்களிடம் ஏற்படுத்தும்.

6. கஷ்டங்களைக் கஷ்டங்களாக மதிக்காமல் வருகின்றபடி ஏற்கப் பழகிக் கொள்ளுங்கள். அதேசமயம் உணர்ச்சிவசப்படாமல் அவற்றைச் சமாளிக்கும் வழிவகைகளைப் பற்றிச் சிந்தியுங்கள்.


7. நம்மால் முடியாது என்று சோர்வடையாமல் இறைவன் துணை இருக்கும்போது தோல்விக்கு வாய்ப்பில்லை என்கிற திடமான நம்பிக்கையுடன் போராடத் தயாராகிவிடுங்கள்.

8. மேலே சொல்லியுள்ள வழிகளை நீங்கள் உறுதியாக கடைப்பிடித்தால் சோதனைகள் உங்களை விட்டு விலகி சாதனைகள் உங்களை நெருங்கி வருவதை உணர்வீர்கள்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மகத்தான ஆற்றல் மறைந்திருக்கிறது. அந்த ஆற்றலை பயிற்சியின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டுவிட முடியாது.

நம்மைப்பற்றி நாமே தாழ்வாக நினைத்துக் கொள்வதிலிருந்து நாம் விடுபட வேண்டும். எதைச் செய்தாலும் தன்னம்பிக்கையுடன் செய்ய வேண்டும். கஷ்டம் என்பது நாம் செய்கின்ற வேலையின் தவிர்க்க முடியாத ஒரு பகுதி என்று எடுத்துக் கொள்ள வேண்டும். எந்தச் சமயத்திலும் உற்சாகத்தை இழக்காமல் வேலையில் ஈடுபட்டால் வெற்றி நம்மை நாடி வரும். நம்மீது நாம் வைக்கும் நம்பிக்கையே மெய்யான கடவுள் நம்பிக்கை. இறைவனின் படைப்பு நாம் என்பதால் நம்மீது நாம் நம்பிக்கை வைக்கின்றபோது இறைவன் மீதும் நம்பிக்கை வைக்கின்றோம் என்று பொருள்.

உழைப்பால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. உழைக்கும் ஆற்றலை இறைவன் நமக்கு அருளியிருக்கிறான். உழைப்போ, உயர்வோ நம்பினால் நடக்கும். வெற்றியில் நம்பிக்கை வையுங்கள். சாதனைகள் மலைபோல் குவியும்.



-பி.சி.கணேசன்-

(முற்றும்)

# அறவழியில் காரியங்கள் நிறைவேறுகையில் பிறவியின் பயனை அடைந்ததாக அமையும்

## பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

இறைவனின் அற்புதப் படைப்பில் உருவான மனிதப் பிறவிகள் அனைவரும் அறத்தின் வழி தமது ஒவ்வொரு காரியங்களையும் நிறைவேற்றும்போது வாழ்க்கை இன்பமானதாகவும் பிறவியின் இந்தப் பயனை அடைந்ததாகவும் அமையும்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக ஆலய வழிபாடுகள் அமைவதால் மனம் அமைதி அடைவதுடன் தூய சிந்தனைகளும் மனதில் உருவாகி செயல்வடிவமாக நடைபெறும் என்று யாழ்.சின்மயாமிஷன் பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்து மதத்தில் 18 புராணங்கள் உள்ளன. இவற்றில் 10 புராணங்களில் 4 வைஸ்ணவ புராணங்கள் இருக்கின்றன. இவற்றில் தலையானது கந்தபுராணம் ஆகும். 18 புராணங்களையும் சமஸ்கிருத மொழியில் பாடியவர் வேதவியாசர் ஆவார்.

கந்தபுராணத்தில் 6 சம்கிதைகள் இருக்கின்றன. இதில் சங்கர சங்கிதையில் 12 காண்டங்கள் உள்ளன. இவற்றில் சிவரகசிய காண்டத்தில் 7 உபகாண்டங்கள் இருக்கின்றன.

இந்த உபகாண்டங்களை தமிழில் மொழிபெயர்த்தவர் கச்சியப்ப சுவாமிகள் ஆவர். கந்தபுராணத்தில் முருகப்பெருமானுடைய சிறப்பு வருகின்றது.தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படுகின்ற முருகப் பெருமான் கார்த்திகைப் பெண்களால் வளர்த்தெடுக்கப்பட்டிருந்ததால் கார்த்திகேயன் எனப் பெயர் பெற்றார்.

உலகிலேயே பிறந்திருக்கின்ற அனைவரும் பெண்களால் பிறப்பெடுத்தவர்கள். ஆனால் முருகப் பெருமான் ஆணுக்குப் பிறந்தவர். அதாவது சிவனால் பிறப்பெடுத்தவர். முருகன் பிறந்த வரலாறு அசுரர்களை அழிக்க ஆறு முகங்களில் இருந்து அக்கினிப் பொறிகளை ஏற்படுத்தி ஆறுகுழந்தைகளாக உருவாக்கி ஆகாயத்தில் தோன்றிய பொறிகள் காற்றினாலும், அக்கினியாலும் மாறி மாறி பரவப்பட்டு கங்கையில் கொண்டுவரப்பட்டு பின்னர் சரவணப் பொய்கையில் சென்றடைந்தன. அங்கே 6 கார்த்திகைப் பெண்கள் ஆறு குழந்தைகளையும் வளர்த்தெடுத்தபடியால் முருகன் கார்த்திகேயன் ஆனார்.

அப்படிப்பட்ட கலியுகத்தில் வரங்களைத் தரக்கூடியவர் இறைவன் மட்டும்தான். கருணையை புரிந்திடமுடியும். இறைவனுடைய கருணைகள் 2 வகைப்படும். ஒன்று அறம் மற்றது மறம். நல்லவர்கள் மீது காட்டப்படுகின்ற கருணை அறக் கருணையாகவும் தீயவர்கள் மீது காட்டப்படுகின்ற கருணை மறக் கருணையாகவும் கொள்ளப்படுகின்றன.

எனவே இறைவனுடைய கருணையால் மட்டுமே இந்த உலகில் நாம் உயர்வு பெறமுடியும்

ஆலயங்களில் இடம்பெறும் மகோற்சவங்களில் ஆசார முறைப்படி பக்திபூர்வமாக வருகைதந்து இறைவனை வேண்டும் போது இறைவனது அருளாசி தானாகவே கிடைக்கும்-என்றார். (எ-14)

## திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றிபெற்றோர்

கிளிநொச்சி, ஓக.30

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்ட திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

பிரிவு "அ"


1ஆம் இடம்-மகேந்திரன் கிருத்திகா-உருத்திரபுரம் உ.நி.ப, 2ஆம் இடம்-மோகனதாசு பிருந்தா- உருத்திரபுரம் உ.நி.ப, 3ஆம் இடம்-ராயா பானுமதி-கிளி/மத்திய கல்லூரி.

ஊக்கப் பரிசு பெறுவோர்

கருணாகரன் குகேந்தினி-கிளி/மத்திய கல்லூரி.

பிரிவு "ஆ"

1ஆம் இடம்-நகுலகுமார் சாமந்தி-திருவையாறு உ.நி.ப, 2ஆம் இடம்-கணேசன் அரிமர்த்தனா-புனித திரேசா பெண்கள் கல்லூரி, 3ஆம் இடம்-ரமணன் வினுசா- உருத்திரபுரம் உ.நி.ப. (தொடரும்) (எ)



கவிஞர் புத்தூர் வே.இளையகுட்டியின் பவளவிழாவும் பவளக் கலசம் மலர் வெளியீடும் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துறை கற்கைகள் பீடத் தலைவர் இ.இரட்ணம், முகாமைத்துவ வணிக கற்கைகளின் பீடாதிபதி கலாநிதி தி.வேல்நம்பியிடமிருந்து மலரின் முதல் பிரதியை பெற்றுக் கொள்கிறார். (எ-11)

# அடிப்படைத் தேவையாக மாறியுள்ளது ஆங்கிலக் கல்வியும் கணினி அறிவும்

## வடமாகாண காணி ஆணையாளர் தெரிவிப்பு

காரைநகர், ஓக. 30

இன்றைய குழந்தைகள் நாளைய சமுதாயத்தின் தலைவர்கள். இந்தக் குழந்தைகளுக்கு மிகவும் சிறந்த முறையில் ஆங்கிலம் மற்றும் கணினியுடன் கூடிய கல்வியை வழங்கவேண்டும். இதன் மூலம் அவர்களை எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடியவர்களாக உருவாக்க முடியும்.

இன்று ஆங்கிலமும், கணினி அறிவும் அடிப்படைத் தேவைகளாக மாறியுள்ளன. இதனால் ஆங்கிலத்துடன் கணினி அறிவையும் முன்பள்ளியில் இருந்தே சிறுவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும். -இவ்வாறு வடமாகாண காணி ஆணையாளர் பொ. தயானந்தன் தெரிவித்தார்.

காரைநகர் ஆரம்பப் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா ஆசிரியர் எஸ்.சத்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அமைப்பானது பல்வேறு தடைகளுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டு அந்தத் தடைகளையே படிகற்களாகக் கொண்டு இன்று நான்கு ஆண்டுகள் நிறைவில் நூறுக்கும் மேற்பட்ட பிள்ளைகளை சிறந்த முறையில் பயிற்றுவித்திருப்பது பாராட்டுக்குரியது.

இங்குள்ள குழந்தைகளை சிறந்த முறையில் பயிற்றுவித்திருப்பது மகிழ்வைத் தருகின்றது. இதே போன்று காரைநகரில் உள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை வழங்க முன்வரவேண்டும்.

முன்பள்ளிப் பருவம் என்பது ஒவ்வொருவரது வாழ்விலும் முக்கியமான ஒன்றாகும். இந்த முன்பள்ளிப் பருவத்தை மிகவும் பயனுடையதாக பாடசாலை கல்விக்கு அடித்தளம் இடும் முயற்சியாக மாற்ற வேண்டும். இன்று குழந்தைகள் குழுக்களாக இணைந்து விளையாடும் சந்தர்ப்பங்கள் மிக அருகிவருகின்றது. இந்த நிலையில் இங்கு குழு நிகழ்வுகள் மூலம் பிள்ளைகள் ஒன்றிணைத்து விளையாடும் செயற்பாடு ஊக்கப்படுத்தப்படுகின்றது.

காரைநகரின் இரு கண்களாக வியாபாரமும், கல்வியும் காணப்படுகின்றன. இன்று கல்வியில் எமது மண்ணைச் சேர்ந்தவர்கள் உள்நாட்டிலும் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் சிறந்து விளங்குகின்றனர். இன்று அனேகமான உயர்பதவிகளை வகிப்பவர்களும் எமது ஊரைச் சேர்ந்தவர்களே. அதேபோன்று இன்றைய குழந்தைகளும் சிறந்த முறையில் கற்று உயர்பதவிகளை வகிக்கவேண்டும்.

குழந்தைகளின் கல்விச் செயற்பாட்டில் பெற்றோர்கள் காட்டுகின்ற அக்கறை தொடர்ந்து அவர்களின் உயர் கல்வி வரை தொடர வேண்டும். இதன் மூலம் பிள்ளைகளை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லலாம்-என்றார்.

(எ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## சர்வாதிகாரம்

இராணுவ மற்றும் படை அதிகாரிகளை ஆளுநர்களாகவும் அரச அதிபர்களாகவும் நியமிக்கும் மஹிந்த அரசின் புதிய பாரம்பரியத்தை அவரது அமைச்சரவையிலேயே நீதிக்குப் பொறுப்பாக இருக்கக்கூடிய அமைச்சர் ஹக்கீம் கண்டித்திருக்கிறார். ''இது சர்வாதிகார ஆட்சியின் அறிகுறி'' என்றும் அவர் விமர்சித்திருக்கிறார்.

அமைச்சர் ஹக்கீமின் இந்தப் பேச்சு கிழக்கில் தேர்தலையொட்டி நிகழ்த்தப்பட்ட ஒன்று. இருந்தாலும் அதனை தேர்தல்காலப் பேச்சாக மட்டும் நினைத்து ஒதுக்கிவிட முடியாது.

போர் முடிந்த பின்னர் அதில் முக்கிய பங்காற்றிய அனைத்துத் தளபதிகளுக்கும் அரசு முக்கிய பதவிகளை வழங்கியது. மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் போர்க் குற்றங்கள் புரியப்பட்டதாகவும் சர்வதேச சமூகத்தால் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு போரில் பங்கேற்ற படைத் தளபதிகள் ராஜதந்திரிகளின் மதிப்புக்கு உயர்த்தப்பட்டார்கள். வெளிநாடுகளின் தூதுவர்களாகவும் ஆளுநர்களாகவும் அரச அதிபர்களாகவும் அவர்களுக்குப் பதவிகள் வழங்கப்பட்டன.

உள்ளூரில் வழங்கப்பட்ட ஆளுநர் மற்றும் அரச அதிபர் பதவிகள் அனைத்தும் தமிழ் மக்களின் பிரதேசங்களிலேயே வழங்கப்பட்டன.

இது, மன்னர் ஆட்சிக் காலத்தில் போரில் தாம் கைப்பற்றிய இடங்களை தமது தளபதிகளுக்கு மன்னர்கள் வழங்கியதற்கு ஒப்பானது. வெற்றிகொண்ட பகுதிகளின் ஆளும் உரிமையைத் தமது ஆளுகைக்குக் கட்டுப்பட்ட தளபதிகளிடம் விட்டு வைப்பது மன்னர்களுக்கு இலகுவானதாகவும் அதிகாரத்தை தக்கவைப்பதற்கு ஆதரவானதாகவும் இருந்தது.

அதே பாணியிலேயே போரில் வெற்றி கொள்ளப்பட்ட தமிழர் பகுதிகளில் சிங்களப் போர்த் தளபதிகள் ஆளுநர்களாகவும் அரச அதிபர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

மன்னர் ஆட்சியில் ஜனநாயகம் இருந்தது என்று எவரும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதால் மஹிந்த ஆட்சியை சர்வாதிகாரத்துக்கு ஹக்கீம் ஒப்பிட்டதில் தவறேதும் இருக்க முடியாது.

அதுவும் தவிர, வடக்கிலும் கிழக்கிலும் ஆளுநர்களாக நியமிக்கப்பட்ட முன்னாள் தளபதிகளும் சர்வாதிகளாகவே நடந்துகொள்கிறார்கள் என்பது அரச அலுவலர்களினதும் பொதுமக்களினதும் குற்றச்சாட்டு. அவர்கள் மக்களின் ஜனநாயகப் பிரதிநிதிகளை ஒருபோதும் மதிப்பதில்லை. தமது கட்டளை எஜமானர்களுக்கு காட்டும் விசுவாசத்தை அவர்கள் தமிழ் மக்களின் மீது காட்டுவதில்லை.

தமக்குக் கீழ் பணியாற்றும் செயலாளர்கள், பணிப்பாளர்கள், இயக்குநர்கள் என எவரையும் அவர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற விடுவதில்லை. அனைத்து விடயங்களையும் தாமே கையாள வேண்டும் என்றும் தமக்குத் தெரியாமல் எதுவும் நடக்கக்கூடாது என்றும் அடம்பிடிக்கும் இந்த ஆளுநர்களின் அடாவடியைப் போல் இலங்கை நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் நடைபெறுவதில்லை.

அப்படி இருக்கும்போது அமைச்சர் ஹக்கீம் சொன்ன கூற்றில் நீதியிருக்கத்தான் செய்கிறது. தேர்தல்காலப் பேச்சு என்பதையும்தாண்டி அது உண்மைக்கான உரைகல்.

# இறுதியில் வெற்றி சீனாவுக்கே!

சண்முகவடிவேல்

**1970**களின் பிற்பகுதியில் சீனாவிற்குள் அமெரிக்கா பிரவேசித்ததிலிருந்தும், 1980களின் ஆரம்பத்தில் இருந்து உலகளாவிய ஏகாதிபத்திய பாதையில் சீனா பிரவேசித்ததிலிருந்தும் உலக மயமாக்கல் ஒரு பெரும் பரிமாணத்தைப் பெற்றது.

சீனாவிற்குள் அமெரிக்காவின் பிரவேசமும், உலக சந்தைக்குள் சீனாவின் பிரவேசமும் இணைந்து சீனாவை ஏகாதிபத்தியத்தினதும், உலகமயமாக்கலினதும் பிரதான பங்காளி ஆக்கியது. சீனா உலகமயமாக்கலுக்கு முதலில் உட்படத் தொடங்கிய மிகக் குறுங்காலத்திற்குள்ளேயே தன்னை உலகமயமாக்கலின் பங்காளியுமாக்கிக் கொண்டது.

டெங்-ஷியாவோ-பங் தலைமையிலான சீனாவின் நால்வகை நவீனமயமாக்கல்கள் சீனாவை உலகம் முழுவதும் விரிவாக்கம் செய்ய உதவியது. இந்த நவீனமயமாக்கலால் ஏற்பட்ட ஏகாதிபத்திய பாதையிலான சீனாவின் உலகளாவிய வர்த்தகப் படர்ச்சியும், தொழில் நுட்பம் மற்றும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும் இந்தியாவை அதிர்ச்சிக்கும், தாக்கத்திற்கும் உள்ளாக்கியது. இதனால் இந்தியா கூட்டு (Collaboration) உற்பத்திக்கான பாதையில் கால்வைத்து, யப்பானுடன் கூட்டுச் சேர்ந்தது. அதன் மூலம் தன்னையும் உலகமயமாக்கலில் ஒரு நேரடிப் பங்காளி ஆக்கிக் கொண்டது. இத்தகைய கூட்டு உற்பத்தி முறைமூலம் இந்தியா தொழில் நுட்ப ரீதியாக சீனாவின் நால்வகை நவீனமயமாக்கலுடன் போட்டியில் ஈடுபடக் கூடியதாய் அமைந்தது.

இந்த வகையில் இரு பெரும் சனத்தொகைமிக்க நாடுகளான சீனாவும், இந்தியாவும் உலகமயமாக்கலிலும், அதனது ஏகாதிபத்திய பொருளாதாரத்தினதும் நேரடிப் பங்காளிகள் ஆகின. அதைத் தொடர்ந்து உலக அரசியல் ஒரு புதிய கட்டத்தை அடைந்தது. அதாவது இரு பெரும் ஆசிய நாடுகளினதும் அரசியல் பொருளாதார மாற்றமும் இவ்விரு நாடுகளுக்கிடையேயான பொருளாதார, அரசியல் மற்றும் ஆயுதப் போட்டிகளும் இணைந்து உலக அரசியற் போக்கில் துலாம்பரமான மாற்றத்தை ஏற்படுத்தின.

இந்த மாற்றம்தான் 21ஆம் நூற்றாண்டிற்கான உலக அரசியல் போக்கின் பிரதான அடித்தளமாகும்.

அமெரிக்க பொருளாதார முறையின் மீது சீனா மோகம் கொள்ளத் தொடங்கிய நிலையில், சீனப்பெரும் சுவரைத் தகர்த்து சீனாவிற்குள் நுழைவதற்கான ஒரு பாதையை அமெரிக்கா உருவாக்கியது. ஆனால் அந்த நுழைவாயிலுக்கு ஊடாக சீனா வெளியே பாய்ந்து உலகம் முழுவதற்கும் தன்னை விரிவாக்கத் தொடங்கியது. அமெரிக்காவால் திறந்து வழிசமைக்கப்பட்ட பரந்த உலகமயமாக்கற் பாதையில் சீனா வீறுநடை போட்டது. ஆதலால்தான் உலகமயமாக்கலுக்கு சவாலாக இருந்த சதாம் ஹூசைனின், பின்-லேடன் என்போருக்கு எதிரான போர்களின் போதெல்லாம் சீனா குறைகளையோ, அன்றி விமர்சனங்களையோ கூறியதாயினும் அவற்றைத் தடுப்பதற்கு எதிராகச் செயற்படவில்லை.

மேற்கூறிய போர்களுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தக்கூடிய எந்தவொரு இடத்திலும், சீனா அதனைப் பயன்படுத்தியதில்லை. வாயால் விமர்சனங்களைக் கூறினாலும் நடைமுறையில் மேற்படி போர்களுக்கு ஆதரவாகவே சீனா செயற்பட்டது. செயலில் அமெரிக்கா தன் கையில் இரத்தங்களை பூசிக்கொண்டவேளை, சீனா அதன் பயனாக தன் கையில் பணத்தை அள்ளத் தவறவில்லை. இதில் சீன இராஜதந்திரம் இரட்டிப்பு வெற்றியைப் பெற்றது. ஒரு புதிய பாதையை திறக்கும் முயற்சியில் அமெரிக்கா ஓரளவாவது விலை கொடுக்கிறது. ஆனால் சீனாவோ தான் சிறிதும் நட்டம் அடையாமல் அந்தப் பாதையில் பயணித்து இலாபம் அடைகிறது.

இந்த வகையில் அமெரிக்கா முன்னின்று உருவாக்கிய சர்வதேச ஏகாதிபத்திய வர்த்தகப் பாதைக்கூடாக - அந்த சர்வதேச அரசியல் - வர்த்தக - பொருளாதார - சட்டங்களுக்கு ஊடாக சீனா உலகளாவிய பரப்பில் தனக்கான பொருளாதார உருவாக்கத்தில் ஈடுபடலாயிற்று. சீனாவின் இந்தப் பொருளாதார விரிவாக்கமும், அதற்கான அரசியல் இராணுவ வியூகங்களும், அமெரிக்க - சீன உறவில் பெரும் போட்டிகளைத் தோற்றுவித்துள்ளன. இப்போட்டியில் அமெரிக்காவுடன் இணைந்து இந்தியாவும் ஒரு பாத்திரமாகியுள்ளது.

'சர்வதேச பயங்கரவாதம்' ஒடுக்கப்படும்வரை வளர்ந்து வந்த இப்போட்டி இரண்டாம் பட்சமானதாக இருந்தது. ஆனால் பின்-லேடனின் சாம்ராச்சியம் தோல்வி கண்டதைத் தொடர்ந்து அமெரிக்காவின் கவனம் சீனாவை நோக்கித் திரும்பியது. சீனா தனது உலகளாவிய விரிவாக்கத்திற்கு இந்துசமுத்திரத்தை இலக்காக்கிக் கொண்டது. இதில் இலங்கைத் தீவு மையப் புள்ளியில் அமைந்துள்ளதால் இலங்கையின் மீது தனது பிடியை வலுவாக்குவதன் மூலம் தனது ஆதிக்கத்திற்கான இந்துசமுத்திர வியூகத்தை சீனா வகுத்துள்ளது.

அமெரிக்கா முன்னின்று திறந்துவிட்டுள்ள சர்வதேச வர்த்தக ஒழுங்குப் பாதையைப் பயன்படுத்தி, இலங்கையை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர சீனா திட்டம் வரைந்தது. தமக்கு சாதகமான ஓர் அரசு இலங்கைத்தீவில் அமையுமிடத்து எத்தகைய இராணுவ வழிகளுமின்றி, உலகமயமாக்கலுக்கான சர்வதேச சட்ட விதிகளின் கீழ் இலங்கை அரசுடன் செய்துகொள்ளக் கூடிய சட்டபூர்வ ஒப்பந்தங்களின் மூலம், சீனா தன்னை இலங்கையில் நிலைநிறுத்திக் கொள்ளவும், அதன்வழி பிராந்திய அளவில் தேவையான ஆதிக்கத்தைப் பெறவும் முடியும்.


மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவுடனான சீனாவிற்கான எண்ணை விநியோகப் பாதையின் மையத்தில் இலங்கைத்தீவு அமைந்துள்ளது. வர்த்தகம், மூலப்பொருள் விநியோகம், எண்ணை விநியோகம், இராணுவ நகர்வுகள் ஆகிய அனைத்திற்கும் இலங்கை ஒரு மையப் புள்ளி. பொருளாதார நலன்களுக்கான ஒப்பந்தங்களைச் செய்வதற்கான ஒரு திறவுகோலாக அரசியல் - இராணுவ ஆதிக்கம் அமைந்துவிடுகிறது. அதே வேளை பொருளாதார ஆதிக்கம் அரசியல், இராணுவ ஆதிக்கங்களைப் பெறுவதற்கான ஒரு களமாக அமைந்து விடுகிறது. இங்கு ஒன்றுக்கு இன்னொன்று உறுதுணையாகிறது.

இந்த வகையில் தனக்குச் சாதமான ஓர் அரசு இலங்கையில் அமையுமிடத்து தனக்குத் தேவையான ஒப்பந்தங்களை சாதாரண சர்வதேச சட்டவிதிகளின் கீழ் ஏற்படுத்தி இலங்கையில் தனக்கான அரசியல் பொருளாதார மற்றும் தேவைப்படும் இடத்து இராணுவ விரிவாக்கங்களை செய்ய சீனா தயாரானது. எனவே ராஜபக்ஷவைப் பதவிக்கு கொண்டு வருவதன் மூலம் இதற்கான வியூகத்தை சீனா அமைக்கத் தொடங்கியது. இதற்கெதிரான மாற்று வியூகத்தை அமெரிக்கா அமைத்துக் கொண்டது.

இனப்பிரச்சினைப் போரை ஒரு கருவியாகப் பயன்படுத்தி சீனா தனக்கான வியூகத்தை வடிவமைத்துக் கொண்டது. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷ வெற்றி பெற்றதன் மூலம் இவ்வியூக அமைப்பில் சீனா வெற்றி பெற்றது. பொன்சேகா வெற்றிபெறாமல் போனதன் ஊடாக அமெரிக்கா தோல்வியடைந்தது.

மேற்படி ஜனாதிபதி தேர்தலின்போது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தேர்தல் புறக்கணிப்பானது ராஜபக்ஷவின் வெற்றிக்கு சாதகமான காரணியாய் அமைந்ததென எண்ணும் அமெரிக்கா, அதற்காக விடுதலைப் புலிகள் மீது சீற்றம் கொள்ளலாயிற்று. ரணில் அரசாங்கத்துடனான ஒஸ்லோ பிரகடனத்தில் இருந்து புலிகள் பின்வாங்கி விட்டதாகக் கருதிய அமெரிக்கா அதன் நிமித்தம் புலிகளுக்கு சில எச்சரிக்கை சமிக்ஞைகளைக் காட்டத் தொடங்கியது. ஆனால் புலிகளோ அந்த எச்சரிக்கை சமிக்ஞைகளை மேற்குலகத்துடன் ஒத்துப்போக முடியாததற்கான காரணிகளாக்கிக் கொண்டனர். மேற்படி தேர்தல் புறக்கணிப்புடன் மேற்குலகம்

(24 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம் அவசியம்

■ ஜெ.ஜெனாட்றாச்



புத்தி சொல்வதை எமது மனம்(ஆத்மா) தட்டிக்கழித்து சிக்கலில் சிக்கிக் கொள்ள தவியாய் தவிக்கிறது.

இத்தகைய மனங்களை ஒருமுனைப்படுத்தி கட்டுக்குள் கொண்டு வந்து வாழ்க்கையின் சீர்த்தன்மை விதியை மிக அழகாக எடுத்தியம்பி நிற்பது தியானம்.

லௌகீக வாழ்க்கையில் முடிவில்லா ஆனந்தத்தை அடைவதே மனித இனத்தின் குறிக்கோளாக இருக்கிறது. இவ்வுலகில் ஒவ்வொருவரும் ஆனந்தத்தை அடைய முயற்சி செய்கிறார்கள். ஆனால் மிகச் சிலரால் தான் அதை அடைய முடிகிறது.

ஒவ்வொரு ஆத்மாவும் (SOUL) சக்தி வாய்ந்த தெய்வீகத் தன்மை கொண்டது. மனிதனிடத்திலுள்ள தெய்வீகச் சக்தியைப் பயன்படச் செய்வதற்கு தியானம் ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. உடல் சம்பந்தமான விடயங்களில் ஊக்கம் காட்டும் இந்தக் காலகட்டத்தில் உலகெங்கும் முன் எப்போதையும்விட முக்கியத்துவத்தை தியானம் பெற்றுள்ளது.

நமது லௌகீக வாழ்க்கையில் ஆத்திரம், கவலை, கோபம், துக்கம், ஏமாற்றம் ஆகிய உணர்ச்சிகளை உண்டாக்கும் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. முழுமை அடைந்த ஒருவன் இவை எவற்றாலும் பாதிக்கப்படுவதில்லை, அசைவில்லாத உறுதி பெற்ற மனிதனாய் இருப்பான்.

நதிகள் பலவும் கடலில் போய்ச் சேர்வது போல எல்லா உணர்வுகளும் அவன் மனதில் சென்று அடங்கி விடுகின்றன. அவனுடைய அமைதி கலைவதில்லை. எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்கிறது.

இந்த நிலையை தியானத்தின் மூலமே ஒரு தூய்மையான ஆத்மா (Pure soul) அடையமுடியும். இதற்காகவே இந்த விடயங்களை உங்களுடன் அன்பாகப் பகிர்கின்றேன். இவ்வாறு தியானத்தால் முன்னேற்றம் உண்டாவதற்கு வழிமுறைகளைப் பெரியவர்கள் விளக்கியுள்ளனர். யோகிகளும், ஞானிகளும் சிறந்த சரியான உதாரணங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆன்மிக மனப்போக்கு சிறுகச் சிறுக மறைந்துவரும் இந்நாளில் 'தியானம்' (meditotion) என்பதை சாமானிய மக்களால் மட்டுமன்றி கல்வி கற்றவர்களாலும் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. தியானம் பற்றித் தவறாகப் புரிந்து கொண்டிருப்பவர்கள் தான் அதிகம்.

''தியானம்'' என்ற சொல்லைக் கேலியும், கிண்டலும் செய்வோர் பலர். தியானம் என்பது தெய்வ வழிபாட்டின் ஒரு முக்கியமான அம்சமாக திகழுகின்றது என்பது ஒரு பொதுவான உண்மைதான். என்றாலும் ஆன்மிகநோக்கத்துடனேயே தியானத்தை பயன்படுத்த முடியும், பயன்படுத்தவேண்டும் என்று எண்ணிவிடக் கூடாது. தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் கூட தியான முறையைப் பயன்படுத்தலாம்.

தியானம் ஓர் அற்புதமான மனோதத்துவமுறை, தியானம் மட்டுமென்ன? வாழ்க்கையில் இடையூறு இல்லாமல் வெற்றி மேல், வெற்றி பெறுவதற்கான அடிப்படை நிலையை, வாழ்க்கையில் ஏற்படுகின்ற தோல்விகளை, குழப்பங்களை சக்தியிழக்கச் செய்து, சுலபமாக முன்னேற பாதையை அமைத்துத் தருகிறது தியானம்.

''மனிதனை விலங்குகளினின்றும், பிரித்து பெருமை அளிப்பது, உயர்வளிப்பது அவனிடம் அமைந்திருக்கும் மனிதத்தன்மைதான், மனிதத்தன்மை என்பது மனிதனின் ஆளுமையைக் குறிப்பதாகும். ஆளுமை என்பது மனிதனது மகத்தான வல்லமையைக் குறிக்கும் ஒரு சொல். இவ்வாறு பிரமிப்பூட்டும் வல்லமையைப் பெறுவதற்கு தியானம் உதவுகின்றது'' இவ்வாறு சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

தியானத்துக்குத் தடைகளாக இருப்பது மனமும், உடலும் வியாதியில் சிக்கி இயங்காமையேயாகும்.

ஸ்தூல உடல் என்பது மனிதன் உலகுடன் தொடர்பு கொள்ள உதவுவதாகும். உடலை இயக்கும் மனம் (ஆத்மா) என்னும் சூக்கும உடல். இவ்விரண்டும் ஒன்றுபட்டு இயங்கவில்லை என்றால் மனிதனில் கோளாறு ஏற்படுகிறது.

தியானம் ஓர் அழகிய, தூய்மையான விடயம். இதனை அனுபவம் செய்து சந்தோஷத்தையும், திருப்தியையும், மன நிம்மதியையும் பெருக்கிக் கொள்ளலாம். அன்பே உருவான சமுதாயத்தை அனுபவம் செய்யலாம்.

''உன்னை நேசிப்பதுபோல உன் அயலவனையும் நேசி'' எனும் மனப்பக்குவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய பொக்கிஷத்தை அனுபவம் செய்வதற்கு எம்மை உடல் ரீதியாகவும், ஆத்ம ரீதியாகவும் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

தியானத்தை அனுபவம் செய்வதற்கு சுயகட்டுப்பாடு அவசியமாகின்றது.

தியானத்துக்கு - முன்னதான ஆறுபடிகளை பதஞ்சலி முனிவர் வரிசைப்படுத்தியுள்ளார்.

இயமம்- மன ஒழுக்கம்
நியமம்-உடல் ஒழுக்கம்
ஆசனம்- உடற்பயிற்சி
பிரணாயாமம்- மூச்சை அடக்கல்
பிரத்தியாகாரம் - புலனடக்கம்
தாரணை- மன ஒருமை என்பவையே அவை.

ஆன்ம ,முன்னேற்றத்தை அடைவதற்கு முக்கியமானது மனத்தூய்மையே.

"There is no mortal truly wise a restless of one
wisdom is the repose of minds"

''ஞானம் பெற்ற எந்த மனிதனும் பதற்றம் அடையும் நிலையில் இருப்பதில்லை. மன அமைதி நிலையே ஞானம் என்றழைக்கப்படுகிறது'' என லீயா வோட்டர் என்பவர் குறிப்பிடுகிறார்.

தியானத்தை அனுபவம் செய்ய முதல் ஒவ்வொருவரும் அனாவசிய எண்ணங்களை நீக்கவேண்டும். கடந்தகால சந்தேகங்களை பற்றியும், நீங்கள் அடைந்த தோல்விகளைப் பற்றியும் ஒருபோதும் நினைத்துச் சோர்வடையாதீர்கள்.

எதிர்காலத்தில் நடப்பவையெல்லாம் நன்மையானவை மட்டும்தான் என்று ஆழ்மனத்துக்கு (sub conscious mind) தியானத்தின் மூலம் தகவல் கொடுப்போம்.

''நீ என்ன நினைக்கிறாயோ அதுவாக ஆகின்றாய்'' என இயேசுபிரான் விவிலியத்தில் கூறி நிற்கிறார்.

நீ என்ன நினைக்கிறாயோ அதை உடன் ஆழ் மனத்துக்கு தியானத்தின் மூலம் சொல்லிவிட்டு, தூய்மையான, அமைதியான, அன்பான ஆத்மா வுடன் தியானத்தை அனுபவம் செய்யுங்கள்.

ஒருவன் தன்னைக் கட்டுப்படுத்தும் முறைகளைப் பார்ப்போம்.

அஹிம்சை
உண்மை
திருடாமை
பிரம்மச்சரியம்
மகிழ்ச்சியாக இருத்தல்

இவைதான் ஒருவன் தன்னைக் கட்டுப்படுத்தும் அடிப்படை அம்சங்களாகும். எவரையும் இம்சிக்காத நிலையே அஹிம்சை ஆகும். நான் எவ்வித இம்சையிலும் ஈடுபடமாட்டேன் என்று உறுதி மொழியை எடுத்துக் கொள்வதே ஆன்ம சாதனையில் முதற்படியேறும் முயற்சி. உங்களைப் போல அயலவர்கள் மீதும் (மற்றவர்கள்) தூய்மையான அன்பு செய்யுங்கள்.

தியானத்துக்கு மிகவும் அவசியமாக இருப்பது ஆரோக்கியமான மனமே. இதற்காக ஒருவர் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு உண்மையாக இருக்க வேண்டும். ஏனெனில் ஒரு பொய்யைச் சொன்னால் வரிசையாகப் பொய்யே சொல்ல வேண்டி வரும். மிகவும் புத்திசாலித்தனமாக சொல்லப்படும் பொய்கள் கூட நாளடைவில் உண்மையில்லை என்று கண்டு கொள்ளப் பட்டுவிடும்.

சொல், செயல், மனம் என்பவற்றால் உங்களுக்கு சொந்தமில்லாதவற்றை உரிமைப்படுத்தி கொள்வதே திருட்டு. பிரமச்சரியம் வார்த்தையைக் கேட்ட உடனேயே லௌகீக வாழ்க்கையில் இது எப்படி சாத்தியம் என நாங்கள் நினைப்பது உண்மைதான்.

பிறப்புறுப்பைக் கட்டுப்படுத்துவது மட்டுமே பிரம்மச்சாரியமாகாது. இந்திரியங்களை (ஐம்புலன்களை) அடக்கி இருத்தலே உண்மையில் பிரமச்சாரியமாகும். புலன்களையுடைய உடல் தியானத்துக்கு தரும் இடையூறுகளை தவிர்த்துக் கொள்ளலாம். இதற்காகவே பாலுணர்வு பரிசோதிக்கப்படுகிறது; குறைக்கப்படுகிறது; தெய்வீகப்படுத்தப்படுகிறது. முடியுமானால் அடக்கியும் விடப்படுகிறது.

மனித வாழ்க்கை பாலுணர்வை தவிர்த்து விடுவது என்பதில்லை. ஆனால் பாலுணர்வே கதியென்று அலைவதுதான் வாழ்க்கைக்குக் கேடு.

கட்டுப்படாத உச்சநிலைப் பாலுணர்வைக்கூட நல்லுணர்வு, ஒழுக்கக்கட்டுப்பாடு, பிரணாயாமம், உடற்பயிற்சி ஆகியன மூலம் கட்டுக்குள் கொண்டு வரலாம்.

மனம் சிதறாத அளவில் இயற்கையான உடலுறவு அனுமதிக்கப்பட்டதே. அதாவது பகலில் விந்து சக்தியை இழக்காமல் இருப்பவனும் பிரமச்சாரியே என்கிறது சாஸ்திரம்.

மனம் சமநிலையில் இருக்கும்போது இயற்கையாகப் பாலுணர்ச்சி எழாத போதும் செயற்கை முறையில் தூண்டி விட்டுக் கொண்டு கெட்டுப்போவதைத் தான் விட்டொழிக்க வேண்டும். காம உணர்வு அனுமதிக்கப்பட்டதே. ஆனால் அளவிற்கு மீறினால் அமுதமும் நஞ்சுதானே. எனவே காம உணர்வை கட்டுக்குள் கொண்டுவர தியானம் என்னும் பொக்கிஷத்தை நாம் அனுபவம் செய்யவேண்டும். மனத்துக்கு வேலையில்லாத பொழுதே தீய எண்ணங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. எனவே ஆத்மாவை பரமாத்மாவுடன் ஐக்கியப்படுத்தி உயர்வான எண்ணங்களை உங்கள் ஆழ்மனதில் நினைவு செய்வதன் மூலம் தீய எண்ணங்களைக் கட்டுக்குள் கொண்டுவந்து, இல்லாது செய்யலாம்.

உயர்ந்த எண்ணங்கள், மேலான சிந்தனைகள் மட்டமான பாலுணர்வை மறக்கடிக்கச் செய்யும். எனவே உங்கள் தியானத்தில் தூய்மையான, மேலான, உயர்ந்த எண்ணங்களை நினைவு செய்து அனுபவம் செய்யுங்கள்.

மனதை அதிகமாக கவரக் கூடியது பண ஆசையும், காம உணர்வுமே. இவற்றில் மனம் பதிந்திருக்கும் வரை தியானம் கைகூடாது.

மேலும் எமது வாழ்க்கையைத் தூய்மைப்படுத்துபவையாக ஆன்மிகநூல் படிப்பு, இறைவனைப் பணிதல் என்பனவும் இருக்கின்றது. ஒருவன் எதையும் தானே தெரிந்து கொண்டு விட முடியாது.

ஆன்மிக நூல்படிப்பு என்பது ஒருவன் தன்னைப்பற்றி அறிவதுதான். உலகம் என்பது என்ன? உடல் என்பது என்ன? மனம், புத்தி, ஆன்மா என்று அதை வகைப்படுத்தி அறிவது எல்லாம் ஆன்மிக நூல்படிப்பினாலேயே முடியும்.


நூல்களைப் படிப்பதை வடமொழியில் ''சுவாத்யாயம்'' என்று கூறுவர். இது உண்மையில் ஒருவன் தன்னைப் பற்றியறிவதே என்று பொருள்படும்.

மேலும் யோகநூல்களைப் படித்தல், பதஞ்சலி, திருமூலர், கீதை, உபநிடதம் ஆகியவற்றைப் படிப்பதாலும் எமது ஆத்மாவை தூய்மையாக்கி பரமாத்மாவுடன் இலகுவில் தொடர்புபடுத்தி சந்தோஷமாக இருக்கலாம்.

எமக்கு கிடைத்துள்ள இந்த அழகான வாழ்க்கையை மேலும் மேலும் சந்தோஷமானதாக மாற்றி, தூய்மையான அன்பை உங்களிடத்திலும், பிறரிடத்திலும் அனுபவம் செய்து வாழ்க்கையில் வெற்றி இரத்தினங்களை உங்களது ஆக்கிக்கொள்ள ''தியானம்'' (Meditation) என்னும் பொக்கிஷத்தை அனுபவம் செய்யுங்கள்.

''ஞானம் பெற்ற எந்த மனிதனும் பதற்றம் அடையும் நிலையில் இருப்பதில்லை. மன அமைதி நிலையே ஞானம் என்றழைக்கப்படுகிறது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செல்வச்சந்நிதி தேர் சிறப்பு மலர் - 30.08.2012

## சந்நிதியான் ஆலய வரலாறு

முருகன் என்றாலே தமிழ் நினைவுக்கு வரும் தமிழ் என்றால் திருப்புகழ் மனதில் தோன்றும். அந்தத் திருப்புகழால் முருகனைப் பாடிய அருணகிரிநாதர் தனியாக முருகனை மட்டும் பாடாது வேலையும், மயிலையும் சேவலையும் குறித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

அத்தகைய மதிப்பு வாய்ந்த வேலை மூலஸ்தான மூர்த்தியாகவும் எழுந்தருளி மூர்த்தியாகவும் கொண்டு வடக்கே வல்வெட்டித்துறை நகர சபைக்கு உட்பட்ட தொண்டமானாறு என்னும் வரலாற்றுப் புகழ்பெற்ற நகரில் கோயில் கொண்ட செல்வச் சந்நிதி முருகனுக்கு இன்று தேர்த்திருவிழா

தெற்கே கதிர்காமக் கந்தனின் வழிபாடு மற்றும் பூசை முறைகளை அடியொற்றியதாக தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வழிபாட்டு முறைகளும் பூசை முறைகளும் அமையப் பெற்றமை இந்த ஆலயத்தின் சிறப்பாகும். முருகனின் மீது ஆழ்ந்த பக்தி கொண்ட மருதர் கதிர்காமரின் நினைப்பும் விருப்பும் வெறுப்பும் எல்லாமே முருகன் தான் . தன் ஜீவனோபாயத் தொழிலின் போதும் முருகா என்றே துதிப்பார்.... நெஞ்சுருக அவன் நாமம் கூறும் போது அச்சமெல்லாம் அகன்று போகும். தொல்லைகளும், தொல்லைகள் தருபவர்களும் தொலைந்து போவார்கள்.

ஒரு நாள் தனது ஜீவனோபாயத் தொழிலான கடற்றொழிலை மேற்கொண்டிருந்தபோது, முருகன் அவர்முன்னே சிறுவனாகத் தோன்றி எனக்கு இங்கே கோயில் கட்டித் தரவேண்டும். எனக்கும் என்னுடன் வரும் 63 பேருக்கும் ஆலிலையில் வெண்பொங்கல் அமுதும் பயற்றங்கறியும், ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டதும் திகைத்துப் போன கதிர்காமர், எனக்குப் பூசை முறைகள் தெரியாது மந்திரமும் தெரியாது எப்படி உனக்குப் பூசை வைப்பேன் என்று பதறிய பொழுது, அவருக்குக் கதிர்காமத்தில் நடைபெறும் பூசை முறைகளையும் வழிபாட்டு முறைகளையும் முருகன் காட்டி அருளியதுடன் வெள்ளி வேலையும் கொடுத்து மறைந்தார்.

ஆகம வழிபாடு சாராத கிராமிய வழிபாட்டு முறையில் மருதர் கதிர்காமர் அன்று காட்சி கொடுத்த முருகனுக்கு வழிபாடு இயற்றத் தொடங்கினார். வெள்ளைத் துணியினால் வாயைக் கட்டி மந்திரம் சொல்லாது பூசைகளை மேற்கொள்ளும் போதும், திருநீறு வழங்கும் போதும் அவர்பின்னால் முருகனே நின்று வழங்குவதாக ஒரு நம்பிக்கை நிலவுகின்றது. ஆதலால் தான் மருதர் கதிர்காமரின் பரம்பரையில் வந்த இன்றைய குருக்கள் வாய்கட்டித் திருநீற்றினை வழங்கும் போது, அவரது காலைத் தொட்டு வணங்கி, அவரிடம் இருந்து திருநீற்றினை வாங்குவது, வேறு எந்த ஒரு ஆலயத்திலும் இல்லாத மகிமை.

இன்று மருதர் கதிர்காமரின் வழித் தோன்றல்களினால் மிகச்சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வரும் சந்நிதியான் கூட காலத்திற்குக் காலம் பல சோதனைகளைச் சந்தித்து வந்திருக்கின்றான். அழகான சித்திரத்தேர் அமைக்கப்பட்டு ஒரே ஒரு தடவை தான் தேரேறி முருகன் வீதியுலா வந்தார். அவரது அழகிய சித்திரத்தேர் எரிக்கப்பட்ட பொழுது தமிழ் உலகமே அழுதது... செய்வதறியாது திகைத்தது. ஒரு சித்திரத் தேரை இழந்த சந்நிதி முருகனுக்கு இன்று மூன்று அழகிய சித்திரத் தேர்கள் கம்பீரமாக வீதியுலா வரும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும்.


## விளம்பர அனுசரணையாளர்கள்




BAJAJ
கணேசன் மோட்டோர்ஸ்
(பஜாஜ்)
டேவிட் பிரிஸ் பீஸெபு மோட்டார்க் கம்பனியின் முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் அசல் உதிரிப் பாகங்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்
இல.1 - 3, பருத்தித்துறை வீதி, நெல்லியடிச் சந்தி, நெல்லியடி. தொ.பே.0777049364

வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றல் சேவை மூலம் வெளிநாட்டில் உள்ள உறவுகளிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்
புதிய அம்பிகா
பல்பொருள் வாணிபம்
இல.33, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.021 2263571, 021 2263139, 021 226 4197

ஓம் சரவணபவாய நமக
கட்டடப் பொருள்கள் மற்றும் பெயின்ற் வகைகள், சிமெந்து ஆகியவற்றைத் தரமாகப் பெற்றுக்கொள்ள
பாக்கியரெட்ணம்
ஹாட்வெயர்
மெயின் வீதி, சங்கானை.

தேவர்கள் சேனாதிபதியே போற்றி
செல்வாஸ்
ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்.
ஆவரங்கால்.

உணவுப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
வேணி
களஞ்சியம்
கே.கே.எஸ்.வீதி, சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.


சந்நிதி முருகனுக்கு அரகரோகரா
பலசரக்குப் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
க.கு.கந்தையாபிள்ளை
அன்சன்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அற்புதக் கந்தா அருள் தந்தே எம் வேணவா தீரவே வருகவே!
சந்நிதியான்
ஆச்சிரமம்
தொண்டமானாறு.

சகல வீட்டுத் தளபாடங்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
ஸ்ரார்
பேணிச்சர்
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே. 021 490 8775

(சி/2445)(2-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செல்வச்சந்நிதி தேர் சிறப்பு மலர் - 30.08.2012

## இனிதே தேர் இடம்பெறட்டும்

திரிபுர சங்காரத்து உண்மையை உணர்த்த திருத் தொண்டமானாற்று அரசமரத்தடி அன்னதானச் செல்வச்சந்நிதி வேற்பெருமான் இன்று இரதோற்சவம் செய்கின்றார். ஆன்மாக்களை இரட்சிப்பது பிரத்தியட்சமாகின்றது.



சிவகுரு நாதனாகிய செல்வச் சந்நிதி வேற்பெருமான் சூர்ய சந்திரர்களைச் சுழலும் உருளைகள் ஆகவும் சரம் அசரம் ஆகிய உறுப்புக்களைக் கொண்டதாகவும், நால் வேதங்கள் குதிரைகளாகவும், தீயின் நாக்கு, நீர்த்துளியின் வடிவிலும் அமைந்தது தேர். அதில் மேருவை வில்லாகவும் விட்டுணுவை அம்பாகவும், அக்கினியை அம்பின் கூர்நுனியாகவும் கொண்டு எழுந்தருளிப் பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்த திரிபுரங்களைச் சிவன் தமது திருப்புன்னகையால் தகனம் செய்தருளியமை மும்மலங்களை தகனம் செய்தது ஆகும். அக்குறியீட்டு நிகழ்வு இன்று சிவகுரு நாதனாகிய செல்வச் சந்நிதி வேற்பெருமான் ஆன்ம கோடிகளின் மும்மலங்களைத் தேர்ந்து தகனம் செய்ய எழுந்தருளும் உற்சவமாகும்.

விக்கினம் தீர்க்கும் விநாயகர் முன்வர ஞான வேற்பெருமான் இச்சா கிரியா சக்திகளுடன் ஞான சக்தியாய் எழுந்தருளி தொடர்ந்து தேருலா பவனி வருவார்.

இத்திருத்தேர் பவனி பக்தி வேர் கொண்ட ஊரார் எனும் பக்த கோடிகள் தேரின் வடம் பிடித்து மிடுக்காய் நடத்தி வேற்பெருமானின் அனுக்கிரகம் எனும் திருவருளால் மலபரிபாகம் பெற்று உய்வார்களாக என வாழ்த்தி ஆசீர்வதித்து இனிது தேர் உற்சவம் நடந்தேற வேற்பெருமானின் பொற்பாதங்களில் சென்னி வைத்து வணங்குகின்றனம்.

ஆறு. சிவசண்முக ஐயர்
இவ்வாண்டுபிரதம உற்சவ குரு
செல்வச்சந்நிதி

## சந்நிதியான் அற்புதக் காட்சி

45 அடி உயரமான சித்திரத்தேர் அழிக்கப்பட்ட பின் சந்நிதியான் மீண்டும் பழைய கட்டுத்தேரில் வீதியுலா வந்து கொண்டிருந்தான். ஆனால் அந்த கட்டுத்தேரும் சந்நிதியான் வீதியுலா வந்துகொண்டிருக்கும் போது அடியார்கள் கண் முன்னே ஆலயத்தின் மேற்கு வீதியில் குடை சாய்கின்ற துன்பியல் நிகழ்வு அரங்கேறியது. அப்பொழுது அந்த காட்சியை கண்ட அடியவர்கள் வேதனை த்தாங்க முடியயாது வாய்விட்டு கதறி அழுதனர். ஆம்! சந்நிதியானுக்கும் சோதனை மேல் சோதனை.

ஆனாலும் சந்நிதியானது அடியவர்கள் மெய்யடியார்கள் அல்லவா? சந்நிதியானுக்கு ஏற்படுகின்ற துன்பங்களை, சோதனைகளை அவர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்களா? ஒரு வருடத்திற்குள்ளேயே இன்று சந்நிதியான் வீதியுலா வருகின்ற அழகான அடக்கமான அந்த சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. இந்த அழகிய சித்திரத் தேரினை சந்நிதியானது அடியவரும் இந்து கலாசார அமைச்சராகவும் இருந்த அமரர் தி. மகேஸ் வரன் விசேட நிதி ஒதுக்கி புதிதாக உருவாக்கி வழங்கினார் கள். அதேபோல ஆறுமுகசுவாமி, விநாயகப் பெருமான் ஆகிய மூர்த்திகளுக்கும் அடியார்கள் பங்களிப்பால் சித்திரத்தேர்கள் அமைக்கப்பட்டன. தற்பொழுது சந்நிதியில் மூன்று சித்திரத்தேர்கள் வீதியுலா வருகின்றன.

இவற்றில் முதன்மையான அந்த சித்திரத்தேரில் சந்நிதியான் அன்றலர்ந்த பூக்களால் அலங்கரிக்கப்பட்டு எளிமையான வேலவனாக தேர் ஏறி வந்து மெய்யடியார்கள் எல்லோருக்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

ஏழை எளியவர், படித்தவர், பணக்காரர் என பல்வகைப்பட்ட மக்களும் சந்நிதியில் ஒன்றுகூடி வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்றனர். இவ்வாறு பல்லாயிரக்கணக்கான மக்களும் ஒன்ற கூடி தங்களை மறந்தவர்களாய் எல்லோரும் சந்நிதியானது மெய்யடியார்களாய் ஒருமித்த குரலில் அரோகரா! அரோகரா!! என வான்பிளக்க கோசமிடும் காட்சி ஒரு சாதாரண காட்சி அல்ல. ஒவ்வொரு அடியவர்க்கும் அது கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். இவ்வாறான அந்த அற்புதக் காட்சியை காண்பதற்காகத் தான் அங்கே அலையலையாக அடியார்கள் ஒன்ற கூடுகின்றனர். சந்நிதியான் தேர் ஏறி வருகின்ற இந்நன்னாளில் அவனருள் எல்லோருக்கும் கிடைப்பதாக.

ந.அரியரத்தினம், தொண்டைமானாறு

## வேலவனின் அருள் கிடைக்கப் பிரார்த்திப்போம்

எந்நிதியும் தருவான் சந்நிதி வேலவன், எங்கள் செல்வச்சந்நிதி வேலவன். சிங்கார வேலவனாய் பதிகள் தோறும் அமைந்து ஆறு படைதனில் அழகாய மர்ந்த வெற்றிவேற் பெருமான் அடியார்க்கு நல்ல பெருமானாக அமரரிடர் தீரச் சமர் புரிந்த குமரன் இலங்கை யிலும் தெற்கே கதிர்காமப் பகுதியில் வந்து அமர்ந் திருந்து கொடியோனாகிய சூரனைச் சங்காரம் செய்து தூயோனாக்கி தன் மலரடிக்கீழ் இன்பம் துய்க்கச் செய்து தன்னையே நாடி, வாடி, ஆடி, ஓடிய வள்ளியை மணம் முடித்து கதிர்காமத்தின் கண் அமர்ந்து அருள் பாலிக்கத் தொடங்கினான். அவ்வருள் ஒளியின் பிரகாசம் எங்கெங்கும் அமையத் திருவுளங் கொண்டு தொண்டமானாற்றில் சின்னக் கதிர்காமமாய் முருகன் வேலாயுதத்தின் வடிவில் எழுந்தருளியவன் எங்கள் சந்நிதி வேலவன்



இன்று வண்ணரதமேறி மும்மூர்த்திகளாய் வலம் வரும் விநாயகப் பெருமானும், வேற்பெருமா னும், சண்முகப் பெருமானும் பார்ப்பவர்களுக்கு மன நிம்மதியைத் தருவதோடு மகிழ்ச்சியையும் அளிக்கின்றனர்.

எங்கள் செல்வச் சந்நிதி வேலவன் தூய அன்புள்ளங்களையும், அடியார்களுக்கு நிம்மதியான வாழ்வையும் வழங்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். இன்றைய இரதோற்சவதினத்தினை தரிசிக்கின்ற, மான சிகமாக காணுகின்ற முருகன் அடியார் கள் எல்லோருக்கும் சகல செல்வயோகமும் மிக்க பெரு வாழ்வும் கிடைக்க வேலவன் தாழ் பணிந்து போற்றுகின்றேன்.

செ. மோகனதாஸ் சுவாமிகள்
சந்நிதியான் ஆச்சிரமம்.

சிறுவர்கள், பெரியோர்களுக்கான சிறந்த புடைவைத் தெரிவுகளுக்கு
ஸ்ரீ ரங்கம் ரெக்ஸ்ரைல்
வதிரி வீதி, உடுப்பிட்டி. தொ.பே. 021 3737455

விளம்பர அனுசரணையாளர்கள்

Ph : 021-3207437.
Cell : 077-7210206
ஸ்ரீ சுசீலா
ஆபரண மாளிகை
(916 KDM) தங்க நகைகள்
மொத்தமாக கிடைக்கும்.
நெ. 239. பிரதான வீதி, பருத்தித் துறை.

S. Aran
Hotline : 0776661805
KOHIL'S BABY NEEDS
கோகில்ஸ் பேபி நீட்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி

சந்நிதியான்
புடவையகம்
இல. 2
நியூ மார்க்கட்
வல்வெட்டிதுறை
Hotline:0777965442


பலசரக்கு வியாபாரம்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்
சாய் ஸ்ரோர்ஸ்
(மாதாந்த வீட்டுப்பொருள்கள்
வீடுகளுக்கே கொண்டு வந்து
தரப்படும்)
தொடர்புகளுக்கு: 0750381682,
0759426114

சந்நிதி முருகனின் அற்புதங்கள் ஆனந்தம்.
கடந்த நான்கு வருடங்களாகச் சந்நிதி முருகனின் நேரடி நெறிப்படுத்தலில் அந்தந்த வருடங்களில் முருகப் பெருமானால் நிகழ்த்தப்பெறும் அற்புதங்களை, அனுக்கிரகங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்கின்றோம். இம் முயற்சி சகல நாடுகளிலுமுள்ள முருகனடியார்களின் பேராதரவுடன் சகல வளர்ச்சி முன்னெடுக்கப்படுகின்றது. இன்றைய தினம் சந்நிதியின் இலவசமாக விநியோகம் செய்யப்படும் அற்புதங்கள் அனுக்கிரகங்கள் நூலினைப் பெற்று இதன் மகிமையை அறிந்து மேன்மையடைவீர்களாக
சி.சிவகுமாரன்
ஸ்ரீ வாணி வெளியீட்டகம், வல்வெட்டி.
தொ.பே.0778285599

கலைவாணி
ரெக்ஸ் &
பிரதான வீதி, நெல்லியடி. தொ.பே.0777111001

அருண்
புடைவையகம்
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே. 021 226 2857
(சி/2445)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செல்வச்சந்நிதி தேர் சிறப்பு மலர் - 30.08.2012

## வாழ்த்துச் செய்தி



அன்னதானக் கந்தனே அழகு இரதப் பவனி விழா வுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின் றேன். சந்நிதியானின் பதி அடங்கிய பிரதேசத்தின் பிரதேச செயலர் என்ற ரீதியில் இது எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் என்றால் மிகையில்லை.

ஆற்றங் கரையமர்ந்து அனுதினமும் அருட்கருணை பொழியும் அன்னதானக்கந்தன் இன்று அழகு இரதமேறி ஆரோகணிக்கின்றான். உலகெங்கும் வாழும் சைவத் தமிழ் அடியார்கள் வருடாவருடம் தவமிருந்து காத்திருக் கும் தினமிது. இன்று ஆறுமுகனின் அருளும், கருணை யும், ஆசியும் இந்த ஆற்றங்கரையெங்கும் அள வற்று கரைபுரண்டு பெருகிப்பாயும், ஆதரவற்றோரை யும், அண்டி வந்தோரையும் அரவணைத்து இன்னமுது வழங்கி வினைகளை அறுத்து அனைவருக்கும் பேரின்பப் பெரு வாழ்வை நல்க அவனின் அபயகரம் அருள்புரி யும். நாமும் தூயமனதோடு தொண்டமானாற்றில் நீராடி காவடி கரகமெடுத்து நேர்த்தி தீர்த்து மனமுருகி அவன் புகழ்பாடி அவனடி பணிந்து இஷ்ட சித்திகளை பெற் றுயர்வோம்.

இச்சந்தர்ப்பத்தில் சந்நிதியான் அருள்ஒளி எங்கள் எல் லோருடையதும் அக இருளை களைந்து எமது மண்ணில் சாந்தியும் சமாதானமும் நிலவச் செய்ய வேண்டும் என்று இறைஞ்சிப் பிரார்த்தித்து பணிகின்றேன்.

**இ.த.ஜெயசீலன்,** பிரதேச செயலாளர்,
வடமராட்சி வடக்கு,பருத்தித்துறை.

## அன்னதானக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா



எம் ஒவ்வொருவரின் உடலிலும், உயிருக்கு உயிராய் அசைவுக்குச் சக்தி யாக நின்று என்றும் அருள்பாலிக்கும் சந்நிதி முருகன் இன்று தன் அழகிய சித்திரத் தேர் ஏறி வீதியுலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

எங்கள் வீட்டுப் பிள்ளைகள் என்று உரிமையுடன் அழைத்து வழிபடும் எங்கள் குமரன், இன்று பெரியதொரு தேரேறி உலகத்தை இரட்சிக்க எழுந்தருளியுள்ள இன் றைய நன்னாளில் உதயன் பத்திரிகை நிறுவனம் சிறப்பு மலரை வெளியிடுவது குறித்து எமது நன்றியையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்னதானக் கந்தன், காவடிக்கந்தன், சல்லோடைக் கந்தன் என்று அழைக்கப்படும் முருகன் இன்று வேல் வடி வில் தேரேறி வரும் நாளில் அனைத்து மக்களும் அவன் அருளைப் பெற்று மேலோங்கிய வாழ்வைப் பெற வேண் டும். சமய ரீதியாகவும், சாதி ரீதியாகவும், இனரீதியாகவும் பிளவுபட்டுள்ள எமது இனத்தை ஒன்று படுத்தும் ஒரு சக்தியாக எமது சந்நிதி வேலன் விஸ்வரூப மெடுத்து அருள்பாலிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டு கின்றேன்,

**ந. அனந்தராஜ்,** நகர சபைத் தலைவர்
வல்வெட்டித்துறை நகரசபை வல்வெட்டித்துறை.

## தேடி வரும் அடியவரின் குறை தீர்த்து ஆட்கொள்ளும் அன்னதானக் கந்தன்

தமிழர் தம் பெருந் தெய்வமாகவும் தேடி வருவோர்க் கெல்லாம் ஆதரவளிக்கும் தெய்வமாகவும் அருளாட்சி செய்பவன் செல்வச் சந்நிதியான். பழமையான பூவரசு மரத்தினை தலவிருட்சமாகவும், வல்லியாறு என்று புராணங்களில் சொல்லப்படுகின்ற தொண்டைமானாற் றையும், ஆலமரச் சோலைகளையும் சூழலாகக் கொண்ட அமைவிடத்தில் எம் பெருமான் கோயில் கொண்டருள்கின்றார்.

'பூவரசு பூச்சொரிய ஆலரசு கலசமென
வேலரசு ஆளுகின்ற சந்நிதானம் 'என்று போற்றிப் பாடப்படும் இயற்கையழகை எம்பெருமானுடைய இருப் பிடம் கொண்டிருக்கிறது. அத்துடன் அப்பெருமானுடைய அருட்திறத்தை விதந்து கூறும் வகையில்

'ஞானப் பொறி மின்னுகின்ற சந்நிதானம் வேலன்
ஊனம் உடைத் தெரிக்கும் அவதாரம்'

என்றும் பாடல்கள் விதந்து போற்றுகின்றன. எம்பெரு மான் தன்னை நாடியும் தேடியும் வருகின்ற அடியார்கள் மத்தியில் தானும் ஒருவனாக நடமாடி வருபவன் இங்கு கோயில் கொண்ட வேலவன். வேல் பூசையின் போது நிவேதிக்கப்பட்ட அமுதை மருந்து என்று சொல்லும் அளவுக்கு அது மகத்துவமானது. தீராப் பிணி தீர்த்து ஆன்ம ஈடேற்றம் செய்து வைக்க வல்லது. இதனா லேயே ஆலயச் சூழலில் நாற்பத்தியெட்டு அன்னதான மடங்கள் இயங்கி வந்தன. இன்று கூட ஆலயத்தின் எல்லாத் திசைகளிலும் ஆறு, ஏழு மடங்கள் வரை அன்ன தானப் பணியை ஆற்றி வருகின்றன. இவற்றில் சந்நிதியான் ஆச்சிரமம் செய்து வரு கின்ற அன்னதானப் பணிகளும், இதர சமூகப் பணிகளும் மகத்துவமானவை. இத்தகைய பாரம்பரியம் மிக்க சூழலின் மத்தியில் பெருங்கருணை வடிவினனாக கோயில் கொண்ட வேற்பெருமானின் தேர்த்திருவிழா இன்றாகும்.

**துரை-கணேசமூர்த்தி**
ஆசிரியர்-யாழ்ப்பாணக் கல்லூரி.

## சந்நிதியின் ஆரம்பம்

செல்வச் சந்நிதியானின் ஆரம்பகாலப் பூசகராகிய மருதர் கதிர்காமரை ஆட்கொண்டருளத் திருவுளங் கொண்ட முருகப் பெருமான், ஓரிடையனாக வந்து, கதிர்காமர் ஆற்றில் தொழில் செய்து கொண்டிருக்கும் வேளையில் கதிர் காமா என ஆற்றின் மறுகரையில் நின்று கூவியழைப்பார். கதிர்மாமர் பார்ப்பதற்கு முன் முருகன் மறைந்து விடுவார். இவ்வாறு சில நாள்களாக அவரையழைப்பதும் மறைவது மாகத் திருவிளையாடல் செய்து, ஈற்றில் தன்னை வெளிப் படுத்தித் தனக்குப் பூசை செய்யுமாறு கேட்பார். கதிர்காமர் பூசை முறையோ, மந்திமோ நானறியேனென மறுத்தார்.

அப்பொழுது பெருமான் எனது ஆடையைப் பிடித்துக் கொள் கண்களை மூடு எனக் கட்டளையிட்டார். கதிர்காமர் அவ்வாறே செய்தார். முருகனும் கதிர்காமரும கண்ணிமைக் கும் நேரத்தில் வானவெளி மார்க்கமாகச் சென்று கதிர்காமத் தில் நின்றனர். வேற்பெருமான் கட்டளைக்கமைய கண்களைத் திறந்தார். கதிர்காமத்தில் கந்தப் பெருமானுக்கு நடைபெறும் பூசைமுறைகளைக் கண்டார் கதிர்காமர். அங்கிருந்த வேலா யுதங்களில் ஒன்றை எடுத்துக் கொண்ட கதிர்காமர் முன்னர் போல் கண்களை மூடி முருகனின் ஆடையைப் பிடித்துக்கொண் டார்.கண் விழித்தபோது சந்நிதியில் நிற்பதை அறிந்தார் கதிர்காமர். தான் பெற்ற வேலை பூவரசமரத்தருகில் வைத்து வாயைக்கட்டி கதிர்காமத்தில் கண்டவாறு பூசை செய்தார் கதிர்காமர். கந்தப்பெருமானின் கட்டளைப்படி அறுபத்தி நான்கு ஆலிலைகளில் அமுது படைத்துப் பூசை செய்தார். தினமும் பூசையின் பின் முன் வாசலி லுள்ள திண்ணையில் குமரப்பெருமான் தெற்கு முகமாக இருக்க, கதிர்காமர் வடக்கு முகமாக இருந்து கொண்டு சம்பாசணை செய்வார்கள்.

**சி.சிவகுமாரன்**
(நன்றி:சந்நிதி அற்புதங்களும் அனுக்கிரகங்களும்)

## தேரில் வருகின்றான் சந்நிதி வீதியிலே

ஆற்றங்கரையில் அற்புதமாய் வீற்றிருக்கும்
ஆழகன் முருகன் தேரில் வருகின்றான்
போற்றிப் புகழ்ந்து துதிபாடிப் பணிந்திடுவோம்
போர்புரிந்த கொடும் சூரனை வதைத்து
சீற்றம் தணிந்து தேவகுஞ்சரியை மணந்தான்
சிவனுக்கும் உமைக்கும் செல்வத் திருமகனாக
தோற்றம் கொண்டது ஓர் பொய்கையிலே-இன்று
தேரில் வருகின்றான் செல்வச் சந்நிதி வீதியிலே.

ஆலமுண்ட அரசனுடைய மைந்த னவன்
ஆலிலையில் பருப்போடு அமுது கொள்வான்
காலம் முழுவதும் அவன் காலடியில் சரணடைந்தால்
கவலைகள் யாவும் காற்றாகிக் கரைந்திடும்
மாலின் மருகன் வள்ளியின் மணவாளன்

வானவர் துயர் தீர்த்த வடிவேலழகன்
வேலினைக் கையிலேந்தி வெற்றித் திருமகனாய்
தேரிலே வருகின்றான் சந்நிதி வீதியிலே.

வீரவாகு தேவரின் வெற்றிப் பாதச் சுவடுகள்
வேலவரின் சந்நிதியில் சரித்திரச் சான்றாக,
வாரண முகத்தவனாய் வந்த தாரகாசுரனை
கூராயுதத்தினால் கொன்றொழித்தவன்
மாமரமாய் நின்ற கொடும் சூரபன்மனை
கூர் வடிவேலால் பிளந்து வென்றவன்!
பாரம் உனதேயென்று சரணடைந்த எமைக்காக்கத்
தேரில் வருகின்றான் செல்வச் சந்நிதி வீதியிலே.

**ஏழாலை மூ. இந்திராணி**

(சி/2445)(2-6)

விளம்பர அனுசரணையாளர்கள்

கந்தனுக்கு அரோகரா
தளபாடங்கள், கூரை வேலைகள், கதவுஅலுமினியம்
பிற்றிங் வேலைகள் ஒடருக்குச் செய்துகொள்ள....
சுதன் தச்சுத் தொழிலகம்
(அரசாங்கா உத்தரவு பெற்றது)
உரிமையாளர் - த.சுதன், நிற்சாமம்,
சங்கானை. தொ.பே. 0776594625

வேல்முருகன்
வணிக நிலையம்
இல.56 A (378) இல.295 (21), மணிக்கூட்டு
வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 9437

T. Sarkunarajah
Seemati
சீமாட்டி புடவைக் கடை
அனைத்து ரக புடவைகளினதும்
மொத்த, சில்லறை, வியாபாரிகள்
Dealers in Textiles & Fancy Goods
No. 122, Power House Road, Jaffna
Branch: Mangai Silks, Modern Market, Jaffna.

சாரங்கா நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD
(Permit No: Ecd/ In/ Aut/ Mc/ 164)
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 6972

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 6972, Fax. 222 8869
இணை நிறுவனங்கள்
சாரங்கா ஜுவெல்லரி
சிவா நகைமாடம்

கொழும்பு ⟷ யாழ்ப்பாணம் ⟷ கொழும்பு
Venkadeswara Express
A/C Video Coach
217, Central Road, Colombo 12. Tel: 0115234588
Colombo: 0773988776,
Jaffna: 077 3929359,
Hot Line: 0777743578,
Tel: 021 222 6972

கண்ணாடி வகைகளில் ஏக விநியோகஸ்தர்கள்
பட்டாபி [illegible]
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 7827.
இல. [illegible]
யாழ்ப்பாணம். தொ.பே.021 222 4351

அம்பாள் மரக்காலை
[illegible] துறை வீதி,வீரமாகாளி
அம்மன் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777111147, 021 222 0045

R.V.G ஸ்தாபனம், 58, நல்லூர்
குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 6806
ஆர்.வி.ஜி மருந்தகம்,
504, ஆஸ்பத்திரி வீதி,(O.P.D.முன்பாக),
யாழ்ப்பாணம். தொ.பே.021 222 6806

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிக்காது விட்டால் அழிவுக்கே வழிவகுக்கும்

## பிழையான சக்தியை உடைத்தெறிய வேண்டும் என்கிறது கூட்டமைப்பு

திருகோணமலை,ஓக.30

**இன்று எங்கள் கரங்களில் உள்ள ஒரே வலிமையான ஆயுதம் வாக்களிக்கும் உரிமையே. இதனைப் பயன்படுத்தித்தான் நாங்கள் எங்கள் அரசியல் பாதையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும். எனவே, நாம் வாக்களிக்காமலிருந்து, பிழையான சக்திகள் கிழக்கு மாகாணசபையைக் கைப்பற்ற இடமளித்தால் அது எமது தாயகமண்ணின் அழிவுக்கே வழிவகுக்கும். ஆகவே, பிழையான சக்திகளைத் தேர்தல் மூலம் துடைத்தெறிய வேண்டும் என்று திருகோணமலையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் கந்தவனம் கோணேஸ்வரன் தெரிவித்தார்.**

செல்வநாயகபுர மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆதரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-


உலக அரங்கிலே இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை நாங்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கான வலிமையை எம் தலைவர்களுக்கு நாமே வழங்க வேண்டும். அதற்கு எமது மக்களின் ஒற்றுமையும் ஆதரவும் தேவை. அதனை வாக்களிப்பின் மூலமே வழங்க முடியும்.

இன்று எங்கள் கரங்களில் உள்ள ஒரே ஆயுதமான வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தி எமது அரசியற் பாதையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இதனை முகம் பார்த்து, இலக்கற்ற மனிதர்களுக்கு தாரைவார்க்கவோ, பணத்துக்காக அல்லது பதவிக்காக விற்றுவிடவோ முடியாது. அவ்வாறு நாம் செய்வோமானால் எங்கள் அடுத்த தலைமுறை தவிக்க வேண்டிவரும்.

சம்பூர் மக்கள் வீடிழந்து வீதிக்கு வந்து எத்தனை வருடங்களாகிவிட்டன? அவர்களைச் சொந்த மண்ணில் மகிழ்ச்சியோடு வாழ வைக்கும் பொறுப்பு எமக்கு உண்டு. அவர்களை தொடர்ந்து முகாம்களில் அல்லற்பட விடலாமா? இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு கிழக்குத் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் கூட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் - என்றார். (ச)



## படகு சேதம்; பயணிகள் சிரமம்



மட்டக்களப்பு,ஓக. 30

மட்டக்களப்பு,மண்முனை, ஒடத்துறையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த இரண்டு இயந்திரப் படகுகளில் ஒன்று சேதமடைந்த நிலையில் கரையில் கட்டப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பாதையைப் பயன்படுத்தி வரும் ஆயிரக்கணக்கான மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது ஒரு இயந்திரப்படகு மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றது. அதில் அதிகமானோர் ஏறுவதனால் படகின் இருபக்கமும் உள்ள தட்டுகளில் நின்று ஆபத்தான நிலையில் பொது மக்கள் ஓடத்துறையைக் கடக்க வேண்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறு படகில் நின்று பயணித்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன் சறுக்கி ஆற்றில் விழப்பார்த்ததாக இப்பாதையில் பயணித்தவர்கள் கூறினர்.

ஓடத்துறையைக் கடப்பதற்கு பாலம் கட்டும் ஆரம்பக்கட்ட வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## அரசின் தப்புக் கணக்கை உடைத்தெறிய வேண்டும்

### புளொட் அமைப்பின் தலைவர் கோருகிறார்

மட்டக்களப்பு, ஓக.30

உயிரிழப்புகளுக்கும், அழிவுகளுக்கும் முகங்கொடுத்த எமது இனம், உணர்வுகளையும் உரிமைகளுக்கான குரலையும் இழந்திருக்கும் என்று அரசு தப்புக்கணக்குப் போடுகிறது. இந்த அரசுக்கு சரியான பாடத்தை மக்கள் வழங்கி சர்வதேசத்துக்கு எமது நிலைப்பாட்டை ஆணித்தரமாகக் காண்பிக்க வேண்டும் என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் த. மனோகரராசாவை ஆதரித்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் தீர்வு, மீள்குடியேற்றம், மனித உரிமை மீறல் உட்பட்ட பல விடயங்களில் சர்வதேசமும் ஐ.நா.வும் இலங்கை அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுக்க ஆரம்பித்திருக்கும் இன்றைய நிலையில், தமிழ் மக்கள் தமக்கே ஆதரவாக இருப்பார்கள் இங்கே எந்தவொரு பிரச்சினைகளும் இல்லையென காட்டுவதற்காகவுமே குறித்த காலத்துக்கு முன்னதாகவே கிழக்கு மாகாணசபையைக் கலைத்து தேர்தலை நடத்தி ஆளுங்கட்சி வெற்றியீட்டிக் காட்ட கங்கணம் கட்டி நிற்கிறது.இதனை புரிந்துகொள்ளாதிருக்க தமிழர்கள் ஏமாளிகள் அல்லர். - என்றார். (ச)

## கிழக்கு மக்கள் வழங்கும் தீர்ப்பே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும்

### ஐ.தே.க. வேட்பாளர் தெரிவிப்பு

திருகோணமலை,ஓக.30

நாட்டின் ஆட்சி மாற்றத்துக்கு அடித்தளமாக அமையப் போவது கிழக்குவாழ் மக்களின் தீர்ப்பாகும். தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் ஆட்சியாளர்கள் எதிரிகளாகவே பார்க்கின்றனர். இவற்றுக்கு முடிவுகட்டுவது மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் எம்.ஏ.எம்.மஹ்ரூப் தெரிவித்தார்.


ரஹ்மானியா பகுதியில் நடத்தப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பௌத்த சிலைகளை அங்குமிங்குமாக வைப்பதும், ஏனைய மதத்தினரின் வணக்கஸ்தலங்களை சேதப்படுத்துவதும் பேரினவாதிகளின் விளையாட்டாகி விட்டது. பொருள்களை நினைத்தவுடன் விலையேற்றுவதும், நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டுவதும் சர்வசாதாரணமாகி விட்டது.

அனைத்து சமயங்களையும் சார்ந்தோர் அனைவரும் இலங்கையர் சமமான என்ற கண்ணோட்டத்துடன் நடத்தப்படுவர் என்று கூறிக்கொண்டு குரோதத்தை வளர்க்கும் செயல்களே நாட்டில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணசபையின் ஆட்சிக்கு வருவது யார் என்பதைத் தீர்மானிக்கும் கட்சியாக கிழக்குத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே இருக்கப்போகின்றது. - என்றார். (ச)



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சேருவிலவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நுவெரலியாவில் கடும் பணி

நுவரெலியா,ஓக.30

நுவரெலியாவில் தற்போது கடும் பனிமூட்டத்துடனான வானிலை நிலவுகின்றது என்று மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி குறிப்பிட்டார்.

சில சந்தர்ப்பங்களில் பிரதேசத்தை ஊடறுத்துப் பலத்த காற்று வீசுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நுவரெலியாவில் காலை மற்றும் மாலை வேளைகளில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக வாகன விபத்துக்கள் இடம்பெறுவதற்கான அபாயம் உள்ளது. இதன் காரணமாகக் கடும் பனி பொழியும் சந்தர்ப்பங்களில் வாகனங்களின் முற்புற மின்குமிழ்களை ஒளிரவிடுமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தல் விடுப்பதாக அவர் கூறினார்.

தற்போது பாடசாலை விடுமுறைக்காலம் என்பதுடன் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்கு வருகை தருவதினால் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்த வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது ஹற்றன்-நுவரெலியா வீதி புனரமைக்கப்பட்டு வருவதால் குறித்த பகுதியில் கற்கள் மற்றும் சேறு காணப்படுவதாகவும் அது குறித்தும் சாரதிகள் க்வனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

## அதாவுல்லா மீது குற்றச்சாட்டு விசாரிப்பதற்கு விசேட குழு

மட்டக்களப்பு,ஓக. 30

அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்களின் தொடர்ச்சியான முறைப்பாடுகளையடுத்து, தேசிய காங்கிரஸின் செயலாளரும், அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்காக 3 பேர் கொண்ட குழுவொன்றை அனுப்பியுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

வாக்குகளைப் பெறுவதற்காக அரச சொத்துக்களைப் பயன்படுத்துதல் மற்றும் மிரட்டல் விடுக்கப்படுதல் என்பன அக்கரைப்பற்றில் அதிகம் இடம்பெறுவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளான பவ்ரல் மற்றும் கபே ஆகியன முறைப்பாடு செய்துள்ளன.

இந்தப் பகுதியில் தேர்தல் பிரசாரத்துக்காகப் பொதுநிர்வாக அமைச்சு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்த அமைச்சர் அக்கரைப்பற்றிலுள்ள சுற்றுலா விடுதியில் 20 இற்கு மேற்பட்ட ஆதரவாளர்களுடன் தங்கியிருக்கிறான் என கபே அமைப்பு கூறியுள்ளது. குறித்த சுற்றுலா விடுதியை தேர்தல் திணைக்களம் முறைப்பாட்டு நிலையமாகப் பயன்படுத்தவுள்ளதால் அதைவிட்டு வெளியேறும்படி எழுத்துமூலம் கேட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கூறினார்.

தேர்தல் பிரசாரத்துக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இப்பகுதியில் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக நிரந்தர பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவரையும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களையும் நியமித்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தல் தமிழர் ஒற்றுமையை வெளிப்படுத்தட்டும்

### ம.ம.முன்னணியின் உபதலைவர் கோரிக்கை

இரத்தினபுரி,ஓக.30

சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை வெளிக்காட்ட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் உபதலைவர் கே. கனகரட்ணம் தெரிவித்தார்.

எட்டியாந்தோட்டை, பனாக வத்தை தோட்ட கீழ் பிரிவில் சேவல் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் புஸ்பநாதனுக்கு ஆதரவு திரட்டும் வகையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சப்ரகமுவ மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் தமது தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இரண்டு தமிழ் உறுப்பினர்களை மாகாணசபைக்குத் தெரிவுசெய்து தமிழர்களின் ஒற்றுமையை சர்வதேசத்துக்கு வெளிக்காட்டவேண்டும்.

தமிழர்களின் தன்மானத்தையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இந்த மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களிடமே உள்ளது - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதையும் ஒன்றுக்கு, பல முறை யோசித்துச் செய்ய வேண்டியது அவசியம். ஏதோ ஒரு காரணத்திற்காக அலைச்சல்களைச் சந்திப்பீர்கள். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். கடன் பிரச்சினைகளை, வராத பண வரவுகளை நினைத்துக் கவலைப்படுவீர்கள்.

**இடபம்:** பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவார்கள். உறவினர்கள் சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் அகலக்கால் வைக்காமல், எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும்.

**மிதுனம்:** நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்கள் வீட்டுக்கு வருவார். தொழில் ரீதியாக சிலரிடம் கடுமையாக நடந்து கொள்வீர்கள். நீண்ட நாள்களாக மறைத்து வைத்திருந்த இரகசியம் ஒன்றை மற்றவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

**கடகம்:** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகும். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை, சிலர் உங்களிடம் காட்டுவார்கள். சக ஊழியர் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும்.

**சிங்கம்:** எதிர்கால நலன் கருதி புதிய திட்டம் போடுவீர்கள். சில தினங்களுக்கு முன்னர் உருவான பிரச்சினை ஒன்று இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரும். நண்பர்களுக்காக மனம் உவந்து செலவு செய்வீர்கள். நீங்கள் எதிர்பார்த்த சில உதவிகள் மட்டுமன்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கலாம்.

**கன்னி:** உடல்நிலையில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் ரீதியாக புதியவர்களின் நட்பைப் பெறலாம். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டுக்கு வராத உறவினர் வருவார். சிலரின் தகுதிக்கு மீறிய செயல்பாடுகளைப் பார்த்துக் கோபம் அடைவீர்கள்.

**நாளை**

ஆவணி - 15 வெள்ளிக்கிழமை 31.08.2012
திதி: பூரணை மு.இ. 08.09 வரை
நட்சத்திரம்: அவிட்டம் கா.06.31 வரை
சுபநேரம்: 06.05 - 07.35 வரை
ராகு காலம்: 10.35 - 12.05 வரை

**துலாம்:** அதிகரிக்கும் செலவுகளால் பணப்பற்றாக்குறை ஏற்படும். வெளியில் சொல்ல முடியாமல், உங்களுக்குள்ளேயே சில விடயங்களைப் போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள். உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம்.

**விருச்சிகம்:** சிக்கலான பிரச்சினை ஒன்றை சாமர்த்தியமாகச் செயற்பட்டு முடிவுக்கு கொண்டு வருவீர்கள். குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து எதிலும் நேர் வழியில் செயற்பட வேண்டும். மற்றவர்கள் தலையிட்டால், உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம்.

**தனுசு:** தொழில் ரீதியாக கணிசமான வருமானம் வரும். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். நண்பர்களை நம்பி எதையும் செய்ய வேண்டாம். பல நாள்களாகப் பார்க்காத சிலரை திடீரெனச் சந்திப்பீர்கள்.

**மகரம்:** மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். வசதி படைத்தவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். உங்களின் யோசனைகளுக்கு குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் ஆதரவு பெருகும். செலவுகளைக் குறைத்து, சேமிப்பை அதிகரிக்க வேண்டும்.

**கும்பம்:** மற்றவர்களை நம்பாமல் எந்தக் காரியத்தையும் நீங்களே சுயமாகச் செய்வீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடல்நிலையில் அக்கறை காட்டுவீர்கள். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். நீங்கள் எதிர்பாராத தரப்பிலிருந்து திடீரென உதவி கிடைக்கும்.

**மீனம்:** சிலர் உங்களுக்காக செலவு செய்ய முன்வந்தும், அதை வேண்டாம் என மறுப்பீர்கள். முன்னேற்றத்திற்கு வழி காட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். உங்களுக்குப் பிடித்த ஒன்று மற்றவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 7 | 6 | 2 | | | 3 | |
| | | | | 5 | | | 6 | |
| 2 | | | | 4 | | 9 | | 7 |
| 8 | 7 | | | 1 | | 5 | | |
| | 5 | 4 | | | | 6 | 2 | |
| | | 1 | | 6 | | | 7 | 8 |
| 7 | | 5 | | 9 | | | | 6 |
| | 9 | | | 3 | | | | |
| | 1 | | | 7 | 8 | 4 | 9 | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 1 | 2 | 5 | 3 | 6 | 8 | 9 |
| 2 | 9 | 6 | 8 | 1 | 7 | 4 | 3 | 5 |
| 8 | 3 | 5 | 6 | 9 | 4 | 2 | 1 | 7 |
| 3 | 7 | 2 | 5 | 4 | 8 | 9 | 6 | 1 |
| 5 | 6 | 9 | 1 | 7 | 2 | 8 | 4 | 3 |
| 4 | 1 | 8 | 6 | 3 | 9 | 7 | 5 | 2 |
| 9 | 2 | 3 | 4 | 8 | 1 | 5 | 7 | 6 |
| 1 | 5 | 4 | 7 | 9 | 6 | 3 | 2 | 8 |
| 6 | 8 | 7 | 3 | 2 | 5 | 1 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நிஜமாக
24.04.1937

நிழலாக
11.09.2011

## திருமதி பொன்மணி இராசதுரை

திதி: ஆவணி பூர்வ பக்க சதுர்த்தசி

அன்புக்கொரு இலக்கணமாய் அறிவுக்கொரு அகல் விளக்காய்
பாசத்தின் இருப்பிடமாய் எங்கள் குலவிளக்காய் வந்துதித்த
எங்கள் அம்மாவே! மாமியே! அப்பம்மாவே!

கண்ணில் தோன்றும் காட்சியெல்லாம் கனவாகிப் போனதுண்டு
மண்ணில் பிறந்திட்ட மாந்தரெல்லாம் மண்ணாகி மறைந்துபோனதுண்டு
எண்ணிலே அடங்காத விண்மீன்களும் என்றோ ஒருநாள் மறைந்துபோகும்
எம் நெஞ்சினிலே உங்கள் நாமம் என்றென்றும் நிலைத்துநிற்கும்

நீங்கள் விட்ட இறுதி மூச்சை நாம் மீட்டு சுவாசிக்கின்றோம்
உங்கள் கால் தொட்ட சுவடுகளில் தலைவைத்துத் தூங்குகின்றோம்
உறங்கும் நிமிசப்பொழுதிலும் ஒவ்வொரு கவளச் சோற்றிலும்
உயிரின் கணத்தின் துடிப்பிலும் உறைந்து போன எங்கள் அம்மாவே!
ஆண்டு ஒன்று என்ன ஆயிரமாகட்டும்
மீண்டும் மீண்டும் வாழ்ந்திருப்பாய் - அம்மா
தோன்றும் ஒவ்வொரு உயிரினுள்ளும்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

வட்டுவினி
இணுவில் மேற்கு.
இணுவில்.

குடும்பத்தினர்

(22170) (45.6)

# 1 ஆவது, 26 ஆவது நினைவஞ்சலி




அமரர்
இராசன் தருமரத்தினம்
மலர்வு 26.08.1947
உதிர்வு 11.09.2011
திதி: சதுர்த்தசி

திருமதி
தருமரத்தினம் மனோன்மணி (மணி)
மலர்வு 16.12.1951
உதிர்வு 17.04.1986
திதி: சிதார்த்த

திதி: 30.08.2012

இருபத்தி ஆறு ஆண்டுகள் – அம்மா
உமையிழந்து இருவிழியும் நீர் – சொரிய
அம்மாவும் அப்பாவுமாயிருந்த
அன்புக் கோயில் – அப்பாவும்
ஆலமரம் போல் அடி சாய்ந்து விட்டீரோ
தூக்கம் நாம் கொள்ளாவிடில்
ஏக்கம் நீங்கள் அடைவீர்கள்
தாய் தந்தை உறவிலே தரணியில்
யாரும் உண்டோ
அருயிர் தெய்வங்களின் பாதமதில்
கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

கரணவாய் வடக்கு, நாச்சிமார் கோயிலடி.

குடும்பத்தினர்.

(22283)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளர்கள் போராட்டத்தால்:

## இசற் புள்ளி பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் சிக்கல்

கொழும்பு,ஓக.30

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்கப் பிரச்சினை காரணமாக இசற் புள்ளிப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இசற் புள்ளி சர்ச்சைக்குத் தீர்வு வழங்கும் நோக்கில் அதிகளவு மாணவர்களைப் பல்கலைக்கழகங்களில் சேர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எனினும் விரிவுரையாளர்கள் நடத்திவரும் தொடர் போராட்டம் காரணமாக மாணவர்களைச் சேர்ப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

**விரிவுரையாளர்களின் போராட்டத்தால் மாணவர்களை இணைத்துக்கொள்வதில் சிக்கல்.**

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நடத்திவரும் போராட்டம் காரணமாக அதிகளவில் மாணவர்களை இணைப்பது தொடர்பிலான தீர்மானங்களை எடுக்க முடியவில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)


## பங்குச் சந்தைக்கு புதிய தலைவராக நாலக கொட ஹேவா



கொழும்பு பங்குச்சந்தையின் புதிய தலைவராக கலாநிதி நாலக கொடஹேவா நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்குச் சந்தையின் ஆணையாளர்களாக மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுநர் பிரியந்த பெர்ணான்டோ மற்றும் சுஜீவ முதலிகே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கொழும்பு பங்குச் சந்தையின் தலைவராக பதவி வகித்த திலக் கருணாரட்ன கடந்த வாரம் தமது பதவியிலிருந்து திடீரென விலகி இருந்தார். (ச)



சிலாபம், முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த விலங்கு வேள்வி தடுக்க இடைக்கால உத்தரவு வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் மறுப்புத் தெரிவித்தது. இந்த வழக்கினைத் தாக்கல் செய்த மனுதாரர்களான பௌத்த மதகுருமார்கள், தங்களது சட்டத்தரணியுடன் நீதிமன்றத்தை விட்டு வெளியேறுகின்றனர்.

## வங்கியில் கொள்ளை; மாட்டினான் திருடன்

கொழும்பு,ஓக.30

இங்கினியாகல கிராம வங்கிக்குள் புகுந்து அதன் முகாமையாளரை கத்தியை காட்டி மிரட்டி வங்கிக் கொள்ளையில் ஈடுபட முயற்சித்தார் எனக் கூறப்படும் நபர் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளார்.

முகத்தை மறைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நபர் நேற்றுமுன்தினம் மாலை வங்கி முகாமையாளரை மிரட்டி பணம் கொள்ளையிட முயற்சித்துள்ளார்.

கொள்ளையின் பின் தப்பிச் செல்ல முற்பட்டவரை அருகில் இருந்த நபர் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து பிளாஸ்டிக் கைக்குண்டொன்றும், கத்தியும் மீட்கப்பட்டுள்ளதாக இங்கினியாகல பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இங்கினியாகல பொலிஸார் சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

## எண்ணெய் கசிவை நிறுத்த 'பூம்'

கொழும்பு,ஓக.30

பாணந்துறையை அண்மித்த கடற்பரப்பில் மூழ்கிய கப்பலில் இருந்து எண்ணெய் கசிவதைக் கட்டுப்படுத்துவதற்கென 'பூம்' எனப்படும் மறைப்பு ஒன்றை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவ திணைக்களப் பணிப்பாளர் அனில் பிரேமரத்ன தெரிவித்தார்.

'பூம்' மறைப்பு மற்றும் அதனை கடலில் விரிப்பதற்குத் தேவையான படகு வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு இராஜதந்திர மட்டத்திலான பேச்சுக்களை நடத்தி இந்தியாவிடமிருந்து அதற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.(ச)

# மு.காவின் ஆதரவை கோரப்போவதில்லை

### உறுதி கூறுகிறார் பஸில்

கொழும்பு,ஓக.30

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் அங்கு ஆட்சியமைப்பதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒருபோதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெறப்போவதில்லை. எமக்கு தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை மக்கள் வழங்குவார்கள் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் நிலைமைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் தீர்வு, அபிவிருத்தி மற்றும் சுதந்திரம் என்பனவற்றை விரும்பும் மக்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே வாக்களிக்கவேண்டும்.ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் அரசுக்கு இருக்க வேண்டிய உறவு தற்போது இல்லை என்றே கூறவேண்டும். அதற்காக நான் யாரையும் குற்றகூற விரும்பவில்லை.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்து ஆட்சியமைக்க மக்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆணையை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அவ்வாறு மக்களின் ஆதரவுடன் எம்மால் ஆட்சியமைக்க முடியும்.

மக்களின் விருப்பத்துக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுவோம். கிழக்கில் ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எந்தவொரு கட்சியினதும் ஆதரவை நாடாது.



ஆட்சியமைக்கும் அதிகாரத்தை மக்கள் எங்களுக்கு வழங்கவில்லையாயின் ஆணையைப் பெறுபவர்கள் கிழக்கில் ஆட்சியமைத்துக் கொள்ள முடியும். எம்மைப் பொறுத்த வரை கிழக்கு மாகாணத்தில் அமைதியையும் சுதந்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளோம். அபிவிருத்திகளை முன்னெடுத்துவருகின்றோம். அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளுகின்றோம். இந்த நிலையில் மக்கள் எம்மை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை ஆளும் கட்சிக்கு உள்ளது.

தனித்துப் போட்டியிடும் முன்னர் முஸ்லிம் காங்கிரஸ் 10 வேட்பாளர்களைக் கேட்டுள்ளது. நாங்கள் ஒன்பது வேட்பாளர்களைத் தருவதாகக் கூறினோம். அதனை விரும்பாது மு.கா. தனித்துப் போட்டியிடச்சென்றது.ஆனால் தற்போது அவர்களால் ஒன்பது ஆசனங்களைக் கூட பெற முடியுமா? என்பது கேள்விக்குறியாகியுள்ளது. எம்முடன் இணைந்து போட்டியிட்டிருந்தால் அந்த ஒன்பது ஆசனங்களைப் பெற்றிருக்கலாம். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது- என்றார். (ச)

## இந்திய இராணுவ அதிகாரிகள் இலங்கை இராணுவத்துடன் பேச்சு

கொழும்பு,ஓக.30

இலங்கை,இந்திய இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான இரண்டாவது சுற்றுப் பேச்சு கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகியது.

இலங்கை இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த உயர்மட்ட பேச்சுக்களில் பங்கேற்க இந்திய இராணுவத்தின் அனைத்துலக ஒத்துழைப்புக்கான மேலதிகப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் குர்தீப் சிங் தலைமையிலான அதிகாரிகள் குழு வந்துள்ளது.



இரு நாடுகளின் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான உறவுகள், ஒத்துழைப்புகள் குறித்து ஆராயப்படும் இந்தப் பேச்சுக்களின் முதலாவது கூட்டம் கடந்த ஆண்டு ஜுன் மாதம் புதுடில்லியில் நடைபெற்றிருந்தது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தப் பேச்சுக்களில் இந்திய இராணுவத்தின் சார்பில் அனைத்துலக ஒத்துழைப்புக்கான மேலதிகப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் குர்தீப் சிங், இந்திய இராணுவத்தின் நடவடிக்கை பிரதிப் பணிப்பாளர் பிரிகேடியர் ஹர்ச குப்தா, இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்புப் பிரிவின் பணிப்பாளர் கேணல் கஜன் தீப், இந்திய இராணுவ பயிற்சிப் பணிப்பாளர் கேணல் விவேக் தியாகி ஆகியோர் பங்கேற்றனர்.

இலங்கை இராணுவத்தின் செயலர் மேஜர் ஜெனரல் எச்.சி.பி. குணதிலக தலைமையில் இராணுவப் பிரிவுகளின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள் இந்தப் பேச்சுக்களில் இலங்கைத் தரப்பில் பங்கேற்றனர்.

பயிற்சி, புனர்வாழ்வு, திட்டமிடல் ஆகிய துறைகளில் ஒத்துழைப்புகளை விரிவாக்கிக் கொள்வது குறித்து மூன்று நாள்கள் நடைபெறும் இந்தப் பேச்சில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இந்தப் பேச்சின் முடிவில் இருதரப்புக் குழுக்களுக்கும் தலைமை தாங்கும் அதிகாரிகளுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்படும்.

இந்தப் பேச்சுக்களில் பங்கேற்க வந்துள்ள இந்தியப் படை அதிகாரிகள் குழு, இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணங்களை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை, மேஜர் ஜெனரல் குர்தீப் சிங் தலைமையிலான இந்திய இராணுவ உயரதிகாரிகள் குழு நேற்றுமுன்தினம் இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜயசூரியவைச் சந்தித்து பேச்சு நடத்தியது (ச)

## கல்வித்துறையை மேம்படுத்த அரசின் நடவடிக்கை வேண்டும்

### ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு,ஓக.30

தவறுகளை மூடி மறைக்க முயற்சிக்காது நாட்டின் கல்வித்துறையை மேம்படுத்த அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவும், கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சை வினாத்தாள் பிரச்சினை, இசற் புள்ளி பிரச்சினை, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பிரச்சினை ஆகியன ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பிழையால் ஏற்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சூழ்ச்சி செய்வதாகத் தெரிவித்து பிரச்சினைகளை மூடிமறைப்பது நியாயமற்றது என்று அவர் தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் தொடர்பில் உடனடியாக பரீட்சைத் திணைக்களம் விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

## நான்கு காடுகளில் தீ

கொழும்பு,ஓக.30

நாட்டில் உள்ள நான்கு காட்டுப் பகுதிகளில் தீ பரவியுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.


லுனுகல, ரன்தெம்பே, வவுனியா மற்றும் மாங்குளம் ஆகிய பகுதிக் காடுகளில் இத் தீ பரவியுள்ளதாக குறித்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட குறித்த தீ தொடர்ந்தும் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவது...

# ஆண்களா? பெண்களா?



## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

இந்து ஆலயங்களில் மிருகபலியிடல் தொடர்பான உங்களது விமர்சனங்களை முன்வைக்கவும்



உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

நவீன உலகம் பிரசவித்த தொடர்பு சாதனங்களில் தொலைபேசியானது இன்று தொல்லைபேசியாக மாறி விட்டது. தொலைபேசியிடம் இளைய சமுதாயம் தொலைந்துவிட்டது. தொலைபேசியினால் இன்று அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதும் ஆண்களே. தொலைத் தொடர்பு சாதனத்தை ''அதிகம் பயன்படுத்துவதும் ஆண்களேதான். தொலைபேசியில்லாத சிறுவனுமில்லை, காதலி இல்லாத இளைஞனும் இல்லை'' காரணம் தொலைபேசியின் பாதிப்புதான்.

கைத்தொலைபேசியின் சாதாரண எஸ்.எம்.எஸ், எம்.எம்.எஸ். போன்றவற்றால் தகவல்களும் குறும்படங்களும் உடனுக்குடன் கடத்தப்படுகின்றன. மேலுமாக இன்று இணையப் பாவனை இளைஞர்களிடையே கைத் தொலைபேசியில் வளர்ச்சி பெற்றதாக காணப்படுகின்றது. இதன்முலம் நீலப்படம் எனும் வைரஸ் ஆண்களை பாதிப்புக்குள்ளாக்கியிருக்கின்றது. இதனால் சமூகத்தில் சிறுவர்கள், பெண்களுக்கெதிரான வன்முறைகள் கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளன.

தவறிய அழைப்புக்களை அனுப்பியும் எஸ்.எம்.எஸ் மூலமும் தெரியாத நபர்களுடன் குறிப்பாக பெண்களென்றால் காதல் பேச்சுக்கள் பேசியும் காதுக்குள்ளேயே எல்லாம் முடிந்து போகின்றது. இவ்வாறாக கைத் தொலைபேசியை அதிகம் பயன்படுத்துவதால் ஆண்களே பாதிக்கப்படுகின்றனர். இதனால்தான் இன்று சமூகக்கட்டமைப்பில் வேண்டாத மாற்றங்கள் நிகழ்கின்றன.

அவசியமான கைத்தொலைபேசியை அவசியமற்ற முறையில் பயன்படுத்தி தமது வாழ்க்கையை மது, மாது, சூது என்பவற்றுள் தெரியாமல் தொலைத்து விட்ட ஆண்களே உங்கள் வளமான எதிர்காலத்துக்கு நவீன சாதனங்களைப் பயன்படுத்தி பயனுள்ளதாக்கி விடுவீர். இதனால் தொலைபேசியின் தொல்லைகள் குறைய இடமுண்டு.

ரி.ரிஷா, பளை.



## வாழ்க்கையில் கல்வியின் முக்கியத்துவம்

''மனிதனுக்குள் இருக்கும் திறமையையும், முழுமையையும் வெளிக்கொண்டு வருவது கல்வி''. சமுதாயம் காண விரும்பும் சான்றோனை உருவாக்கி அவனை நாட்டின் சிறந்த குடிமகனாக்குவதும் கல்வி.

கல்வி ஒருவனை வளமாக வாழவைக்கவில்லையானால் அந்தக் கல்வி நோக்கமற்றதாகி விடுகிறது. உலகிலுள்ள எல்லா மனிதனுக்கும் இலவசமாகக் கிடைக்கக்கூடிய செல்வம் கல்விச் செல்வமாகும். இது எல்லாச் செல்வங்களை விடவும் மேலோங்கிய செல்வம். கல்வியறிவு பெற்றவன், சமூகத்தில் மட்டுமல்ல உலகத்திலும் உயர்ந்த வனாக என்றும் காணப்படுகின்றான். ஒருவன் தன்னு டைய வாழ்க்கையில் வளம்பெற அவனுக்கு உதவியாக கல்வி விளங்குகிறது.

மனிதன் சிந்திக்கும் திறனைக் கொண்டுள்ளான். சிந்தனையின் அடிப்படையில் அறிவுபெருக வேண்டும். சிந்திக்கும் திறனே எதையும் தூண்டி, துருவி ஆராயும் இயல்பினைக் கொண்டது. இதன் மூலம் கற்றதற்கான பகுத்தறிவும், ஆற்றலும், திறனும் வெளிப்படுகின்றது. கல்வியின் பயனைப் பற்றிக் கூறும் அமெரிக்க கல்வி உளவியலாளர் ஒருவர் கல்வி ஒருவனிடத்தில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும், ஒருவன் பெறுகின்ற பல வகைப்பட்ட அனுபவங்களே கல்வியென்றும் கூறுகிறார்.

கல்வி என்பது அனுபவங்களை அனுபவங்களால் அனுபவங்களூடாக அளிப்பதாக அமைய வேண்டும் என்றும் அந்த அறிஞர் கூறுகின்றார். இந்தவகையிலே கல்வியை மற்றவர்களுக்கு ஊட்டுவதிலும் வழிகாட்டுவதிலும் ஒரு ஆசிரியரின் பங்கு மிகவும் முக்கியமானதும் மகத்துவமானதுமாகும்.

சமூகத்தின் அனைத்து மட்டங்களில் உள்ளவர்களும் கல்வியின் அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். கல்வி இல்லாத ஒருவன் மனிதனாக வாழ்வதில் அர்த்தமில்லை. மனிதன் பிறந்ததிலிருந்து புலன்கள் மூலம் பெறும் அனுபவத்தின் மூலம் அறிவைப் பெறத் தொடங்குகிறான். புதிய விடயங்களை அறிந்து கொள்ளலும் தேடலும்தான் கல்வி ஆகும். கல்வி ஒருவனை இந்த வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகிறது. கல்வி கற்ற ஒருவன் தான் கற்றபடி உலகத்தில் நடந்து கொள்கிறான்.

மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் அனுபவத்தின் மூலம் கல்வியைக் கற்க வேண்டும். கல்வி கற்பதற்கு வயது, இன, மத, பேதம், உயர்வு, தாழ்வு வேறுபாடுகள் இல்லை. ஒரு பிறப்பில் ஒருவன் கற்கும் கல்வியானது அவனை ஏழேழு பிறப்பிலும் தொடர்ந்து பயனளிக்கின்றது. அதுமட்டுமல்லாமல் கல்வியால் சிறந்த ஒருவனை நாடும், ஏடும் போற்றும். பாடசாலை தொடங்கி பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுவதோடு கற்றல் முடிவடைகிறது என்று எல்லோரும் நினைப்பதுண்டு. மாறாக நாம் குழந்தையாக இருக்கும் போது பெற்றோரிடம் இருந்தே கல்வியையும் கற்றலையும் ஆரம்பிக்கின்றோம் என்பது அனைவரும் அறிந்த விடயம். ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும், பெறும் அனுபவங்களும் அவனுக்குப்பல அறிவை வளர்க்கின்றன.

வாழ்க்கை எனும் சொல்லின் அர்த்தத்தின் மூலம் கல்வியின் பயனைப் பெறலாம். வாழ்க்கை என்பது இந்தப் பூமியில் பிறந்த நாம் அவளது ஆசீர்வாதத்துடன் இந்தப் பூமியில் நம்பிக்கையோடு வாழ்ந்து சாதித்து வெற்றி பெறுவது ஆகும். வாழ்க்கையை வெற்றியாக்குவது இந்தக் கல்வி ஆகும். இன்றைய காலத்தில் கல்வி வளர்ச்சி குறைந்த வண்ணம் உள்ளது. காரணம் இன்று கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் கல்வியின் பெறுமதியை அறியவில்லை. அதனால் இந்தக் காலத்தில் கல்வியால் சாதித்தவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. ஆனால் கல்வியின் உண்மைத்தன்மையை அறிந்தவர்களே இன்றும் சாதித்த வண்ணம் உள்ளனர்.

ஆகவே அவர்களைப் போல் நாமும் அறிவைச் செழுமையாக்க கல்வியை விரும்பி உண்மைத்தன்மையை அறிந்து கற்க வேண்டும். கற்றவற்றை வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும். கற்ற கல்வியை வாழ்க்கையில் வெற்றி பெறும் அளவுக்கு நாம் ஒழுக வேண்டும்.

சேரன்
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-...........................................................

முகவரி :- ...........................................................

...........................................................

........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## சிநேகிதி நீ...

என் சிநேகிதி நீ
என் சிநேகத்தைப்
பெற்றவள்
உள் மனதோடு
தோழமை தந்தவள்
நான்
என்னை அறியும் முன்பு
உன்னைத்தான் அறிந்தேன்
நம் நட்பு- நாம்
பழகிச் சிரித்த
நாள்கள்
ஊடல் கொண்டு
முகம் திருப்பிய
பொழுதுகள்
நினைக்கும் -போது
பசுமைதான்- ஆனால்
இப்போது நான்
தனிமையை உணர்கிறேன்
நான்
உன்னை இருத்திய
என் மனதில்
எவரையும்
கற்பனை செய்துகூடப்
பார்த்ததில்லை
இன்று நீ
என்னுடன் இல்லை
என்பது
இன்னும் என்னுள்
நம்பப்படாமல்
இருக்கின்றது.
மௌனங்கள்
நிறைந்த
நம் சிநேகிதம்
ரணங்கள் கொண்டு
வெறுமை உள்ளத்தை
நிரப்புகின்றது...
நம் பிரிவு
ஒரு சொப்பனம் போல
பொய்யாகிப்
போய்விடாதா......?

தியா, தீவகம்.

## இயற்கையின் அழிவு



இத்தனை நாளாக
எத்தனை துயரங்கள்
இன்னுமா நாட்டில்
கொடுமையின்
அவலங்கள்!
இயற்கையின்
அழிவென அதிருதே
உலகினி!
நாயென அலைந்திட
பூமியே அதிர்ந்திடும்
அலையொரு புறம்
அதிர்வொருபுறம்;
குழல் மழை
பொழிந்தது
நாடில்லை வீடில்லை;
நல்கிட ஊரில்லை
எளியவர் வாழ்வினில்
ஏறிட வழியில்லை;
தாயது மடியினில்
தலையது சாய்த்துமே
உறங்கிடும்
வேளையில்
உயிரது பிரிந்தது
ஊரில்லை
உறவில்லை
உறங்கிட வழியில்லை
பாரிய பசித்தொல்லை
பதறியும் பயனில்லை!
வளந்தரும் வாழ்க்கையும்
கலைந்திடும்
காட்சியாய் எதிர்பார்த்த
நனவுகள்
தூக்கத்தில் கனவென
தொலைந்துமே
போயிடும்
இதுவொரு
தொடர்கதை!
கங்குலே விலகிடும்
காலையே வழிவிடும்
நெஞ்சினில் வழிந்திடும்
குருதியை நிறுத்திடு
ஏழைகள்
வாழ்க்கைகள் எங்கனும்
மலர்ந்திட இயற்கைத்
தாயே!
நீ கொஞ்சம் வழிவிடு!

வி. உமாஜனி A/L (2013)
யா/ வடமராட்சி ம.ம.கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறத்திற்கு அழிவுண்டா

'ஸ்த்யம் வத' 'தர்மம் சர' என்று ஆணையிடுகிறது வேதம். 'உண்மையே பேசு' 'அறமே செய் ' என்பது அதன் பொருள்.

இந்தக் கலி காலத்தில் உண்மையே பேசினால் ஊரெல்லாம் எதிரி. உலகெல்லாம் பகை என்று பலர் பயப்படுகிறார்கள். உண்மையைப் பேசுகிறவர்கள், உண்மையைப் பேசினால் மட்டும் போதாது அறவழியில் வாழ்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். உங்கள் வாழ்வு அறவழியில் இல்லாமல் உண்மை பேசுகிறேன் என்று பிறரைப் பற்றிப் பேசினால் துன்பம் தான் மிஞ்சும்.

பழைய வைத்திய முறையில் மருந்துகள் கொடுக்கும் போது, மருந்து மட்டும் சாப்பிட்டால் போதாது, பத்தியமான உணவுகள் சாப்பிட வேண்டும். புளி, காரம், எண்ணெய் மிகுந்த மோசமான உணவுகள் சாப்பிடாமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் மருந்து வேலை செய்யும் என்று சொல்வார்கள். சில சமயம் பத்தியமற்ற உணவுகள் சாப்பிட்டால் மருந்து விபரீதமாகக் கூட வேலை செய்யும். அதே கதை தான் .... உண்மை பேசுவது என்பது மருந்து மாதிரி. அறவழியில் வாழ்வது பத்தியமான உணவு மாதிரி. இரண்டும் இணைந்து நிகழ வேண்டுமே ஒழிய உண்மை மட்டும் பேசி, அறவழியில் நாம் நடக்காவிட்டால் அடி உதை தான் கிடைக்கும் .

அறவழியில் நடக்கக்கூடப் பலர் பயப்படுகிறார்கள். அறவழியில் நடந்த ராமர் கஷ்டப்பட்டார். தருமர் கஷ்டப்பட்டார். அயோக்கியர்கள் சுகவாழ்வு வாழுகிறார்கள் என்று பலர் புலம்புகிறார்கள். இது மாயை. பெரிய பொய். இராமன் கஷ்ரப்பட்டார் என்று உங்களுக்கு யார் சொன்னது? அது நீங்களாக நினைத்துக்கொண்ட பொய். இராமன் கஷ்டப்பட்டதாக உங்களிடம் வந்து சொன்னாரா? தருமர் துன்பப்பட்டதாக உங்களிடம் வந்து அழுதாரா? அவர்கட்கு நேர்ந்த சோதனைகளைத் துன்பங்களாக நீங்கள் கருதுகிறீர்கள். அவர்கள் கருதுவதே இல்லை. நெருப்புக்கு காகிதம் அஞ்சும். தங்கம் பயப்படுமா? நீங்கள் அறவழியில் நடந்தால் வரும் அனுபவங்களைத் துன்பம் என்று முத்திரை குத்தாதீர்கள். அறவழியில் நடப்பவருக்கு ஒரு நாளும் துன்பம் வராது . ''இன்பமே எந்நாளும் ... துன்பம் இல்லை '' என்கிறது நாவுக்கரசர் தேவாரம்.


ஒரு கதை சொல்லட்டுமா? சிலப்பதிகாரம் மாதிரி இருக்கும். சிலப்பதிகாரம் இல்லை. அதற்கு நேர்மாறான கதை. ஒரு ராஜாவின் அரண்மனையில் சிலம்பு திருட்டுப் போய்விட்டது. அரசனுக்குக் கடுங்கோபம். சிலம்பைக் கண்டுபிடிக்க ஒற்றர்களை ஏவினான். பயன் இல்லை. ''ஒரு மாதத்திற்குள் சிலம்பைக் கொண்டு வந்து தருபவர்களுக்குப் பெரும் பரிசுத்தொகை'' என்று அறிவித்தான். கூடவே மக்களை மிரட்ட ''அதற்குப் பிறகு அது யாரிடமாவது இருந்து கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது கொண்டு வந்து தந்தால் மரணதண்டனை '' என்றும் அறிவித்தான்.

அந்த ஊருக்குத் துறவி ஒருவர் சீடர்களோடு வந்துகொண்டிருந்தார். வழியில் சிலம்பு கீழே கிடந்து அவர் கைக்கு அகப்பட்டது. விசாரித்த போது அது ராஜாவின் சொத்து. அதை உடனே கொண்டுபோய்க் கொடுத்தால் பரிசு உண்டு. குறிப்பிட்ட ஒரு நாளுக்குப் பிறகு கொண்டு போய்க்கொடுத்தால் மரணதண்டனை என்று துறவிக்குத் தகவல் கிடைத்தது.

துறவி அதைக் கொண்டு போய்க் கொடுக்கவில்லை. வைத்துக்கொண்டார். சீடர்களுக்கு ஒன்றும் புரியவே இல்லை. சரியாக எந்த நாளுக்குப் பிறகு கொடுத்தால் மரணதண்டனை என்று ராஜா அறிவித்தாரோ அதற்குப் பிறகு போய் அரசரிடம் சிலம்பைக் கொடுத்தார். ''இப்போது உமக்கு மரணதண்டனை நான் விதிக்கவேண்டி இருக்குமே'' ஏன் கிடைத்ததும் தரவில்லை என்று சீறினான் அரசன்.


''ஒன்று கிடைத்ததும் ஓடோடி வந்து தந்திருந்தால் பரிசுக்கு நான் ஆசைப்பட்டதாக கருத்து. நான் பரிசை விரும்பவில்லை. இரண்டு... மரணதண்டனை கிடைக்கும் என்று நான் அஞ்சிக் கொடுக்காமலேயே வைத்திருந்தால் நான் சாவுக்கு பயந்தவன் என்று அர்த்தம். நான் மரணத்திற்குப் பயப்படுபவன் இல்லை. மூன்று ... சிலம்பை அப்படியே வைத்துக் கொண்டால் பிறர் பொருளுக்கு ஆசைப்பட்டவன் என்று ஆகிவிடும். நான் பிறர் பொருளை விரும்புவதே இல்லை. அதனால் இப்போது கொடுத்துவிட்டேன் '' என்றார் துறவி.

''இப்போது உமக்கு மரண தண்டனை கிடைக்குமே'' என்றான் அரசன். துறவி கம்பீரமாக அரசனைப் பார்த்து ''மூடனே... அறவழியில் நடக்கும் ஒருவனை அழிக்க எந்த அரசுக்கும் அதிகாரம் இல்லை. தர்மம் உன் சட்டத்தை விட மேலானது. விடு வழியை'' என்று கூறியபடி வீரமாக நடந்தார். அரசர் தலைவணங்கி வழிவிட்டான்.அறம் அழிவற்றது.நம்புங்கள்.



சுகி.சிவம்

# அசாதாரண சூழலிலும் பூசைகள் பெற்ற வேலணை பெரியபுலம் மகா கணபதி



## லக்ஸ்மன்

(கடந்தவாரத் தொடர்ச்சி...)

ஆரம்பகாலத்தில் சுதையினால் கூடப்பட்ட மணிக் கூட்டுக் கோபுரத்தை நா.சபாபதிப் பிள்ளையும் மணியை நாகலிங்கம் வாத்தியாரும் வழங்கியிருந்தனர். 1920, 1930 களில் இடம்பெற்ற திருப் பணிகளுக்கெல்லாம் ஊர்மதிக்கும் பெருமக்கள் பலர் தமது ஒத்துழைப்புக்களை வழங்கியிருந் தனர். 1938 இல் கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பதினைந்து பேர் பரிபாலன சபைக்குத் தெரிவானார்கள்.

இந்தச்சபைக்கு பொன்னையா தலைவராக இருந்தார். 1940 இல் சேர்.கந்தையா தலைவரானார். 1948 இல் மீண்டும் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. 1950 களில் மீண்டும் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பொதுமக்கள் இதற்காக உதவியுள்ளனர். நா.சரவணமுத்து தலைமையில் 1960 இல் புதிய பரிபாலனசபைத் தெரிவு செய்யப்பட்டது. இவர்களது காலத்தில் ஆலயம் புதுப் பொலிவுடன் விளங்கியது. புதிய இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் பிள்ளையார் விலாஸ் கணபதிப்பிள்ளையால் நடப்பெற்றது.

ஆலயத்துக்கான பரிபாலனசபைகள் அவ்வப்போது முறையாகத் தெரிவு செய்யப்பட்டு தேவையான திருப் பணி வேலைகளும் உரிய முறையில் செய்து முடிக்கப் பட்டு வந்துள்ளது. இப்போது ஆலய பரிபாலன சபையின் தலைவராக பொ.அருணகிரிநாதன் உள்ளார். நாட்டின் அசாதாரண சூழல்களால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாக 1965 ஆம் ஆண்டு முதல் இந்த ஆலயத்தில் பூசகராக இருந்து வந்த இ.சோமஸ்கந்தசர்மாவும் இடம்பெயர்ந்து சிறிது தூரம் சென்றபின் மீளவும் கோயிலுக்கே திரும்பிச் சென்று அங்கேயே தங்கி வழமையான பூசைகளைச் செய்துள்ளார்.

இடப்பெயர்வு காலத்தில் தொடர்ந்தும் பூசைகள் நடைபெற்று ஆலயம் முடிப்பிள்ளையார் ஆலயம் என்பதில் அந்தப் பகுதி மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்ததுடன் இது முடிப்பிள்ளையாரின் திருவிளையாடலே என்கிறார்கள் இடம்பெயராத மக்களுக்கு ஆதரவு நிலையமாகவும் கோயில் அமைந்தது.

**1996 இல் மீள்குடியேற்றம் இடம்பெற்றதை அடுத்து மக்கள் தமது வழமையான செயற்பாடுகளை மேற்கொண்டனர். ஏழு ஆண்டுகளின் பின் ஆலயத்தின் சபை 1998 இல் கூடியது. அதனைத் தொடர்ந்து புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றன.**

1996 இல் மீள்குடியேற்றம் இடம் பெற்றதை அடுத்து மக்கள் தமது வழமையான செயற்பாடுகளை மேற்கொண்டனர். ஏழு ஆண்டுகளின் பின் ஆலயத்தின் சபை 1998 இல் கூடியது. அதனைத் தொடர்ந்து புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றன.

இந்தச்சமயம் தலைவராக இருந்த பொ.அருணகிரிநாதன் சபையின் முக்கிய பதவிகளை வகித்த ந.கணேசபிள்ளை, க.பரமேஸ்வரி, வி.சாம்பசிவம், மு.மகேந்திரன் ஏனைய உறுப்பினர்களின் அனுசரணையுடன் ஆலயத்தின் சிறப்புக்கான பணிகளை முன்னெடுப்பதில் ஆர்வமுடன் ஈடுபட்டிருந்தனர். பஞ்சதள இராஜகோபுர வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதுடன் புதிய தீர்த்தக் கேணியும் அமைக்கப்பட்டது.

தேர்முட்டி அமைக்கப்பட்டுள்ளது. புதிய சித்திரத் தேர் உருவாக்கப்பட்டுள்ளது. மின்னிணைப்பு சுற்றுப்புற வீதிகள் புனரமைப்பு கொட்டகை அமைத்துச் சப்பரம், தேர் புனரமைப்பு, வாகனங்கள் புனரமைப்பு என முக்கிய திருப்பணி வேலைகள் இடம்பெற்றுள்ளன.

இந்தத் திருப்பணிகளை அந்தப் பகுதியில் உள்ள முருகேசு செல்லம்மா, மயில்வாகனம், ந.ஜவகர்லால்நேரு பொ.பரராசசிங்கம் குடும்பத்தினர்களால் இவற்றுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் வைகாசி பௌர்ணமி திதியில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும் வகையில் பதினொரு தினங்கள் உற்சவம் இடம்பெறும். முக்கிய நாள்களில் விசேட பூசைகள் நடைபெறும் உற்சவ காலங்களில் தாக சாந்தியை சி.க. குடும்பத்தினரும் ஐங்கரன் அன்னதான சபை அன்னதானப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

ஆலய வளர்ச்சியிலும் திருப்பணிகளிலும் இராசா ஆசிரியர் பரம்பரையினரும் பேரம்பலம் பராசக்தி குடும்பத்தினரும் மயில்வாகனம் இராசரத்தினம், கந்தையா பாக்கியம், செ.சோமசுந்தரம், மு.குமாரசாமி ஆகியோரது குடும்பங்களும் அக்கறை கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பண்டைக் காலம் முதலே இங்கு புராண படலங்கள் படிக்கப்படுவதாகவும் சமீப காலம் வரை இது தொடர்ந்ததாகவும் சொல்லப்படுகின்றது. வசதி படைத்தவர்களின் கனவில் தோன்றி முடிப்பிள்ளையார் தனக்குத் தேவையான திருப்பணிகளை மேற்கொள்ளுமாறு கூறுவதாகவும் அதனால் மக்கள் தாமாகவே முன்வந்து அவற்றைச் செய்வதாகவும் இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்காக உழைத்த அனைவரும் பிள்ளையாரின் அருள் நிச்சயம் என்றும் தலைவர் அருணகிரிநாதன் கூறுகிறார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில இலங்கை இந்துமத
குருபீடாதிபதி
சிவாகமஞானி கலாநிதி
அருள் ஜோதி ஸ்கந்த
சாம்பசிவ சிவாச்சாரியார்
அவர்களின் 150 ஆவது ஆண்டு ஞாபகார்த்த ஆன்மீகப் பெருவிழாவில்
எமது நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம ஆலய பிரதம குரு
**சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள்** அவர்களிற்கு
சிவாச்சார்ய சிரோமணி எனும் சிறப்புப்பட்டம்
வழங்கப்பட்டதையிட்டு ஆலய அறங்காவலர் சபையினர் சார்பிலும்
அடியார்கள் சார்பிலும் மனமார வாழ்த்துகின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி (22351)(6.8) அறங்காவலர் சபையினர், நீர்வேலி செல்லக்கதிர்காம தேவஸ்தானம்

# கல்வி மற்றும் அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் முல்லைத்தீவு மாவட்டம்

**பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவு தொகை வழங்குதல்**

முல்லைத்தீவு மாவட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் செயற்திட்டத்திற்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கு உதவி வழங்கு வதை தீர்மானிப் பதற்கான நேர்முகத்தேர்வு ஒன்று எதிர்வரும் 04.09.2012 ஆம் திகதி (செவ்வாய்) காலை 09.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந் நேர்முகத் தேர்வில் உதவியைப் பெறுவதற்கு மாணவர்கள் நியாயப் படுத்தக்கூடிய ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விண்ணப்பித்த மாணவர்களுக்கு தனித்தனியே கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விண்ணப் பித்து கடிதம் கிடைக்காத மாணவர்கள் **021 2290031** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப் படுத்திக்கொள்ளவும்.

பெயர் விவரங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நா. வேதநாயகன்
அரசாங்க அதிபரும் தலைவரும்,
கல்வி மற்றும் அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்,
முல்லைத்தீவு மாவட்டம். (சி/2978)(6-8)

# மரண அறிவித்தல்

## குகானந்தன் திபிஷன்

உரும்பிராய் தெற்கு, உரும்பிராயை பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட குகானந்தன் திபிஷன்நேற்று (29.08.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் குகானந்தன் தர்சிகா தம்பதியரின் அன்பு மகனும் டிலக் ஷியின் அன்புத் தம்பியும் ஆவார்.



அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.08.2012) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணி யளவில் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத் தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (22301)(5-8)

தகவல்:
குடும்பத்தினர்.

## சட்டவிரோதமாக கள் விற்றோர் அகப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஒக. 30

கடந்த மாதம் சட்ட விரோதமாக கள் விற் பனை மற்றும் 21 வயதுக் குட்பட்டவர் களுக்கு சிகரெட் விற் பனை செய்த 47 பேர் யாழ். மதுவனத் திணைக் களத்தின் தேடுத லில் அகப்பட்டதாக யாழ்.மது வரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என். கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது :-

மதுபானத் திணைக் களத்தின் சட்டகோவை களுக்கு அப்பால் சட்ட விரோ தமாக கள் விற்பனை மற்றும் 21 வயதுக் குட்பட்டவர் களுக்கு சிகரெட் விற் பனை செய்தமை, புற நாட்டு மதுபான வகை கள் விற்பனை பதிவு செய்யப்படாத அரச சாராயம் விற்பனை போன்ற குற்றங்களுக் காக 47 பேர்கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப் பட்டனர்.

இதன் போது 2 லட்சத்து 4ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக் கப்பட்டுள்ள னர். இந்த மாதத்தில் கசிப்பு விற் பனை செய்த எவரும் இனங்காணப்படவில்லை.

எனினும் சட்டவிரோ தமாக கள் விற்பனை மற் றும் 21 வயதுக்குட் பட்ட வர்களுக்கு சிக ரெட் விற்பனை போன்ற வற்றில் ஈடுபட்டோரே அதிக மாக இனங் காணப் பட்டுள்ளனர்.

இவர்களில் சட்ட விரோதமாக கள் விற் பனைசெய்த 13 பேரும் பதிவு செய்யப்படாத அரச மதுபானம் விற் பனை செய்த 4 பேரும் பிறநாட்டு மதுபானம் விற்பனை செய்த ஒருவ ரும் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 29 பேரும் கைது செய்யப்பட்டமை குறிப் பிடத் தக்கது என்று கூறினார். (ம-14)

## தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங் கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திரு முறைப் பாராயணம் என்பன நாளை வெள்ளிக்கிழமை பூரணைத் தினத்தில் காலை 8 மணிமுதல் யாழ். கந்தர்மடம் ஸ்ரீ செல்வநாகபூஷணி அம்பாள் ஆலயத் தில் ஆலய அறங் காவலர்களின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது என்று மன்ற அமைப் பாளர் தெரிவித்துள் ளார். (ம)

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி கனகசபை

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது (சங்கீதம் 116 : 15)



கொக்குவில் காந்தி ஜீயைப் பிறப்பிடமாக வும், கொக்குவில் மேற்கு, பிடாரி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கனகசபை கடந்த (27.08.2012) திங்கட்கிழமை கர்த் தருக்குள் நித்திரை யடைந்தார்.

அன்னார் கல்வாரி பூரண சுவிசேஷ தேவா லயத்தின் மூப்பர் வீ. கனகசபை ஐயா அவர்களின் அன்பு மனைவியும், பாபு, சிங்கா, விக்ரம் ஆகியோரின் அன்புத் தாயும், மீரா, ரூபி ஆகியோரின் மாமியும் நத்தானி யேல், சாம்ஜோன், ஜெனிபர் ஆகியோ ரின் பாசமிகு பேர்த்தியும், கல்வாரி தேவாலய போதகர் வீ. கனகராஜா அவர்களின் அண்ணியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (31.08.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக் கத்திற்காக தாவடி கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு. (21602) (45.6)

தகவல்:
போதகர் கனகராஜா
குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 02.08.2012 வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சின்னப்பா சிவகணேசநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.08.2012 )வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 01.09.2012 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி,
தெல்லிப்பழை. [22197][6.8]

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி: தமிழக இளைஞர் காங்கிரஸ் எதிர்ப்பு



இலங்கை இராணுவத்துக்கு வெலிங்டன் பயிற்சி முகாமில் பயிற்சி அளிப்பதற்கு தமிழ் நாடு இளைஞர் காங்கிரஸும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் கட்சித் தலைவர் எம். யுவராஜா ஈரோட்டில் செய்தியாளர் சந்திப்பில் இது பற்றித் தெரிவித்ததாவது:-

இலங்கை வெலிங்டன் பயிற்சி முகாமில், பயிற்சி பெற்று வரும் இலங்கை இராணுவ அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேற்றவேண்டும்.

தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவின் எந்த மூலையிலும், இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கக்கூடாது. இலங்கை நட்பு நாடுபோல செயற்படுவதில்லை.

இந்திய அரசு இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளித்தால் அது தமிழக மீனவர்களையும், அங்குள்ள இலங்கைத் தமிழர்களையும் தாக்கவே பயன்படும்.

எனவே இலங்கை இராணுவ அதிகாரிகளை இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்ப வேண்டும்-என்றார். (வ)

## ஆலயத் திருவிழா காலத்தில் நாடக நிகழ்வுகள்

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று ஆரம்பமானது. இதனையொட்டி யாழ். நாட்டார் வழக்கியற் கழகமும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் நாடக நிகழ்வுகள் மாலை 7 மணிக்குதினமும் நடைபெற்று வருகின்றன.

இதில் வள்ளி திருமணம், பவளக்கொடி, பூதத்தம்பி, அரிச்சந்திர மயான காண்டம், சத்தியவான் சாவித்திரி, பக்தநந்தனார் போன்ற நாடகங்கள் இடம்பெறும்.(வ-14)

## ஆஸி. செல்ல முயன்ற 28 பேர் கடலூரில் வைத்துக் கைது

கடலூர் துறைமுகத்திலிருந்து சட்ட விரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முயன்ற இலங்கைத் தமிழர்கள் உட்பட 28 பேர் கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் சிலர் கடலூர் துறைமுகத்திலிருந்து சட்டவிரோதமாக படகு மூலம் பிற நாடுகளுக்குச் செல்ல இருப்பதாக உளவுத்துறைப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து கியூ பிரிவு மற்றும் கடலோரக் காவல் படையினர், கடலூர் பகுதியில் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 28 பேரில் 18 பேர் இலங்கை அகதிகள் என பொலிஸாரது முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இலங்கை அகதிகளில் 8 பேர் தமிழக முகாம்களில் பதிவு செய்யப்பட்டுள்ள அதே வேளை, ஏனைய 10 பேரும் பதிவுகள் எதுவுமின்றி கன்னியாகுமாரி முகாமில் தங்கியிருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் முகவர் மூலமாக இந்தியப் பணம் 50 ஆயிரம் ரூபா தொடக்கம் 80 ஆயிரம் ரூபா வரை செலுத்தி சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்துள்ளனர்.

இவர்கள் ஆஸ்திரேலியா செல்வதற்குத் தயாரான படகு புதுச்சேரியைச் சேர்ந்த வேலு என்பவருக்குச் சொந்தமானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## நம்பிக்கை வேண்டும்

ஒவ்வொன்றிலும் நம்பிக்கை இருக்கவேண்டும். சிலர் மூட நம்பிக்கைகள் என்கிறார்கள். நம்பிக்கை இன்றி இந்த உலகத்தில் எவரால் வாழ முடியும்? காலை விழித்தெழுந்தது முதல் உறங்கச் செல்லும் வரை ஒவ்வொரு வேலையையும் நம்பிக்கையோடுதான் செய்கின்றோம். ஆனால் தெய்வத்தின் மீதுதான் நம்பிக்கை இல்லை. ஒரு சித்தாந்தி எழுதிய பஞ்சாங்கத்தை நம்பி தர்ப்பணங்களைச் செய்கிறோம். ஏகாதசி என விரதங்களைக் கடைப்பிடிக்கிறோம். ஆனால், தத்-த்வம் அஸி, பிரஞ்ஞானம் ப்ரஹ்ம, அஹமாத்மாப்ரஹ்ம, அஹம்ப்ரஹ் மாஸ்மி என வேதங்கள் மணி ஓசை போன்று கூறிக்கொண்டு இருந்தால் அதை நம்புவதில்லை. நிலையற்றவைகளை எளிதில் நம்பி விடுகிறார்கள். என்றென்றைக்கும் நிலையானதை நம்புவதில்லை. இந்தப் பலவீனத்தை அகற்றிக் கொள்ளவேண்டும்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## சமய சந்நிதிகளில்

யாழ். இந்துசமய பேரவையில் எழுந்தருளி இருக்கும் சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கு ஆவணி மாத அபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 6மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறவுள்ளது. இந்த அபிஷேகத்தை சிதம்பரத்திலிருந்து வருகை தந்துள்ள சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீட்சகர் நடத்தவுள்ளார். (வ)

* * *

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 7மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று 9 மணியளவில் சுவாமி தேரில் எழுந்தருளுவார். (வ)

* * *

ஆனைக்கோட்டை மருதவிக்ன விநாயகர் சம்பந்த ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-100)

* * *

நவாலி அத்திராய் முருகமூர்த்தி ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ-100)

## பாடசாலைக்கு வகுப்பறைக் கட்டடம்

வடமராட்சி, ஓக.30

வடமராட்சி கிழக்கில் உள்ள செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு 35 இலட்சம் ரூபா செலவில் புதிய வகுப்பறைக்கட்டடம் ஒன்றை சேவாலங்கா நிறுவனம் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. இந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் அண்மையில் நட்டு வைத்தார். (வ-8)

## 31ஆம் நாள் நினைவுகள்



மலர்ந்தது
1972.06.28



உதிர்ந்தது
2012.07.31

அமரர் பொன்னையா செல்வராசா

செல்லக்குட்டி எனும் செல்வமே!

உள்ளதை உள்ளபடி உரைக்கின்ற உத்தமனே
ஊரோடு உறவோடு ஒற்றுமையில் திளைத்தவனே
கள்ளங்கபடமின்றிக் கதைகள் பல சொன்னவனே
காரிருளில் எமைவிட்டுக் கடிதகன்ற மாயமென்ன?
வெல்லமென உன் நினைவை மெல்லும் வகை நீக்கி
வேகுகின்ற நெஞ்சத்தின் வேதனை நீ அறியாயோ?
செல்லக்குட்டியனே எங்கள் செல்வத்தின் ராசாவே-நீ
சென்றதனால் எங்கள் சீர்சிறப்பும் சென்றதையா!

மயூரம்
கொற்றாவத்தை, பொலிகண்டி கிழக்கு.

(22238)(5-6)

மனைவி, மகள்,
பெற்றபிள்ளைகள்.

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொயிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(22204) (5.6.7)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
23
★
05
★
1928



மறைவு
31
★
07
★
2012

திருமதி முருகேசு நாகரத்தினம்

கடந்த 31.07.2012 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி, தபால், தந்தி, பத்திரிகை, கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மூலம் துயரைப் பகிர்ந்து கொண்டவர்க்கும், அவருக்கு சிகிச்சையளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியநிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் எமது குடும்பத் தெய்வத்தின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (30.08.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைகின்றோம்.

கேணியடி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

(சி/1735)(45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்த சரியான மருந்துகள் இல்லை

## உயிரிழப்புகள் அதிகரிக்கின்றன என பேராசிரியர் ஜயலத் கவலை

இலங்கையில் வட மத்திய மாகாணத்தில் 15 70 வயதுக் குட்பட்டவர்களில் 15 சத வீதமானோரில் சுமார் 20 ஆயிரம் பேர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த நோயை குணப்படுத்த சரியான மருந்துகள் கண்டுபிடிக் கப்படாமையினால் தினமும் உயிரிழப்பு இடம்பெறுகின்றது. குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டோர், 10 வயதுக்கும் மேற்பட்டோரே இந்த நோயின் தாக்கத்துக்கு அதிகளவில் ஆளாகியுள்ளனமை தெரியவருகின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நோயின் தொற்றின் வேகத்தையும், நிலையையும் அறிந்துகொண்ட களனி, ரஜரட்ட,பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவப் பீட பேராசிரியர்கள், முன்னணி மருத்துவ குழுக்களினால் இந்த நோயின் தாக்கம், தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

குறிப்பாக இலங்கையில் வட மத்திய மாகாணத்தில் பலர் இந்நோய்க்கு பலியாகியுள்ளனர். சிறுநீரக நோய் குறித்து சர்வதேச அமைப்புகளும் கவனம் செலுத்தி வருகின்றன. இதன்படி பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான பேராசிரியராக கடமைபுரிந்து, தற்போது சுவிட்சர்லாந்து ஜெனிவாவில் உலக சுகாதார அமைப்பில் உள்ளக நோய் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகராக செயற்படும் இலங்கை விசேட வைத்தியர் பேராசிரியர் சாந்தி மெண்டிஸ் வேண்டுகோளுக்கிணங்க, உலக சுகாதார அமைப்பினால் இந்த சிறுநீரக நோய் தொடர்பிலான 3 அறிக்கைகளை ஆராய்ச்சியின் பின்னர் முன்வைத்திருந்தது.

இதன் முதலாவது அறிக்கை 2011 ஜூன் மாதத்திலும், இரண்டாவது அறிக்கை 2011 ஒக்டோபர் மாதத்திலும், மூன்றாவது அறிக்கை 2012 பெப்ரவரி மாதத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மருத்துவச் சபை ஊடாக இந்த தகவல் வெளியிடப்பட்டது. இதன் பிரகாரம் குறித்த அறிக்கைகளில் உலக சுகாதார அமைப்பானது இந்நோயை எவ்வாறு இனங்காண்பது மற்றும் கட்டுப்படுத்துவது குறித்து முக்கிய குறிப்புகளை குறிப்பிட்டிருந்தது.

இந்த நோய் மேலும் பரவுவதை தவிர்க்க தாமதமின்றி இந்த அறிக்கைகளில் உள்ள பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நோய்களுக்குச் சிகிச்சை வழங்குவதைப் பார்க்கிலும் அந்த நோயை இல்லாதொழிப்பதே மேல் ஆகும்.

துரதிர்ஷ்டவசமாக உள்நாட்டு,வெளிநாட்டு மருத்துவ நிபுணர்கள் உலக சுகாதார அமைப்பின் குறித்த 3 அறிக்கைகளிலும் நோய்த் தடுப்பு தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த நோயானது வட மத்திய மாகாணத்திலேயே அதிகளவில் பரவி வருகின்றது என்பதை தற்போதுள்ள அரசு தெரிவிக்கவில்லை.

இப்போதாவது உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்ட 3 அறிக்கைகளிலுமுள்ள பரிந்துரைகளை மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அதிலுள்ளவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த அறிக்கையில் உள்ளவற்றை தாமதமாகியும் நடைமுறைப்படுத்தாவிட்டால் அப்பாவி மக்களின் உயிரிழப்பை தடுப்பதற்கு வழி கிடையாது. மக்களைக் காப்பாற்றுவது அரசின் பொறுப்பு.

விருத்தியாகும் சிறுநீரக நோயை தடுக்க நடவடிக்கை எடுக்காமல் சிகிச்சை நிலையங்களை திறந்துவைப்பதில் என்ன பயன்? எதிர்காலத்தில் இந்நோய் விருத்தியாகாமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று மேலும் கூறினார். (ம)

# மாகாணசபை தேர்தல் முடிந்ததும் 7 அமைச்சுப் பொறுப்புக்கள் மீளாய்வுக்கு

கொழும்பு,ஒக.30

மாகாண சபைகளுக்கான தேர்தல் இடம்பெற்று முடிந்ததும் உடனடியாகவே ஏழு அமைச்சுகளுக்கு வழங்கப்பட்டுள்ள துறைசார் பொறுப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அரச நிர்வாகத்தில் மறுசீரமைப்பொன்றை ஏற்படுத்தும் திட்டத்தின் வேறு ஒரு கட்டமாகவே இந்த மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

அமைச்சரவைப் பொறுப்புகளில் மாற்றங்கள் என்ற இந்த விவகாரம் பலகாலமாக இழுபட்டு வந்துள்ள நிலையில் பெரும்பாலும் அடுத்த மாதத்தின் இரண்டாவது வாரமளவில் இந்த மாற்றம் இடம்பெறக் கூடும் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த அமைச்சரவை மறுசீரமைப்பை கைவிட்டு விடுவதற்கே அரசு முன்னர் தீர்மானித்திருந்தது. எனினும் செயற்றிறன் அற்ற தன்மைகள், நிர்வாகச் சிக்கல்கள், ஊழல் விவகாரங்கள் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படாது குவிந்து தொடர்ச்சியாக அரசு அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டி நேர்ந்தது. இதனால் அமைச்சுக்களின் செயலாளர்கள் மாற்றப்பட்டுள்ளது போன்று செயற்றிறன் குன்றிய அமைச்சர்களின் அமைச்சுப் பொறுப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கெனக் கூட்டப்பட்ட உயர் மட்டக் கூட்டத்தில் வைத்து மாற்றப்படவுள்ள ஒரு துறைசார் பொறுப்புக்கள் குறித்த இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பொறுப்பு மாற்றங்கள் சம்பந்தமாக ஒரு சில அமைச்சர்களுடன் ஜனாதிபதி கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

முக்கியமாக மக்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்படும் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அமைச்சுக்கள் பலவும் பொறுப்புக்கள் மாற்றப்படும் பட்டியலில் உள்ளடங்கியுள்ளன.

நாட்டில் உக்கிரமடையும் பிரச்சினைகள் சம்பந்தமாக முறையான விதத்தில் மக்களுக்கு அறிவூட்டித் தெளிவுபடுத்தப்படாததால் பிரச்சினைகள் முற்றி அரசு அசௌகரியத்துக்கு ஆளாகியிருப்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் அலசப்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (ம-22)

# தூர்ந்து போன வாய்க்கால்களை புனரமைக்கத் தீர்மானம்

மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் குளங்களையும் வாய்க்கால்களையும் ஆழமாக்க முடிவு

தென்மராட்சி ஒக.30

மழை காலம் ஆரம்பிக்கவுள்ளதால் சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழை வெள்ளம் வழிந்தோட முடியாமல் தூர்ந்துபோயுள்ள வாய்க்கால்களை உடனடியாக துப்புரவு செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற நகராட்சி மன்ற விசேட கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாததால் மழை வெள்ளம் வழிந்தோட முடியாமல் குடியிருப்புகளுக்குள் புகுவதால் இந்த வாய்க்கால்களை புனரமைக்க வேண்டுமென உறுப்பினர் ந.திருக்குமரன் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட சபையினர் மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அந்தந்த வட்டார பொது அமைப்புக்களின் உதவியுடனும் நகரசபை வாகனங்களின் உதவியுடனும் தூர்ந்து போயுள்ள குளங்களையும் மழை வெள்ளம் வழிந்தோடக்கூடிய வாய்க்கால்களையும் ஆழமாக்குவதென தீர்மானிக்கப்பட்டது எனத் துணைத் தலைவர் கு.சதாசிவமூர்த்தி தெரிவித்தார். (ம-9)

# பட்டதாரிகளுக்கு இருமாத ஊக்குவிப்பு கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஒக.30

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு கடந்த ஜூலை மாதம் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு ஜூலை, ஓகஸ்ட் மாதங்களுக்குரிய வேதனம் (ஊக்குவிப்பு கொடுப்பனவு) வழங்கப்படவில்லை.

கடந்த ஜூலை இரண்டாம் திகதி நியமிக்கப்பட்ட அந்தந்த பிரதேச செயலகங்களில் கடமையாற்றி வரும் பட்டதாரி பயிலுநர்களுக்கு இதுவரை உரிய கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# சுன்னாகம் பனை அபிவிருத்திச் சங்கம் பனை ஏறும் போட்டியில் முதலாமிடம்



சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு மாவட்டக் கூட்டுறவு சபையால் நடத்தப்பட்ட பனை மரம் ஏறுதல் போட்டியில் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் முதலாம் இடத்தைப் பெற்றது.

இந்தப் போட்டி அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முன்றிலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் பங்கு பற்றினர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த பனை மரம் ஏறும் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட சங்கங்கள் வருமாறு:-

முதலாம் இடம் - சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த தி.அருமைத்துரை, இரண்டாம் இடம் - அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ந.நதீஸ்வரன், மூன்றாம் இடம் - பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த தி.இந்திரசித்து. இப்போட்டியில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன், கூட்டுறவு சபையின் தலைவர் ஆர்.ராஜாராம், வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் என்.கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-17)

# இறுதியில் வெற்றி...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவான புலி எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டது. அரையும், குறையுமாக பயங்கரவாதிகள் எனக் கூறிவந்த நிலைமாறி சொல்லிலும், செயலிலும் முழு அளவில் புலிகளை மேற்குலகம் பயங்கரவாதிகள் என்ற வகைப் பாட்டில் கையாளத் தொடங்கியது.

"புலிகளை ராஜபக்ஷ பார்த்துக்கொள்ளட்டும் ராஜபக்ஷவை நாங்கள் பார்த்துக்கொள்வோம்" என்ற முடிவிற்கு மேற்குலகம் வந்தது. இந்த வகையில் புலிகளுக்கு எதிரான ராஜபக்ஷவின் போரை ஆதரிக்கும் நிலைப்பாட்டை மேற்குலகம் எடுத்துக் கொண்டது. இனப் போரின் பெயரால் இலங்கையில் சீனா அடையும் வேகமான வளர்ச்சியைத் தடுப்பதற்கு முதலில் போரை முடிவிற்குக் கொண்டு வர வேண்டும் என மேற்குலகம் கருதியது.

இதற்காக மேற்குலகு ராஜபக்ஷவிற்கு உறுதுணையாகச் செயற்படும் முதல் நிலை முடிவை எடுத்தது. புலிகளின் ஐந்து ஆயுதக் கப்பல்களை அமெரிக்கா மூழ்கடித்து உதவியதாக ராஜபக்ஷ பின்னாளில் வெளிப்படையாகக் கூறினார். அதாவது இலங்கையின் இராணுவத் தலைமைத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா அமெரிக்கா சென்றிருந்த போது அவரை அமெரிக்க அரசு விசாரணைக்கு உட்படுத்த எத்தனித்த நிலையில் - அதனைக் கைவிடச் செய்வதற்காக ராஜபக்ஷ மேற்படி அமெரிக்காவால் புலிகளின் ஐந்து ஆய்யுதக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட இரகசியத்தை வெளியிட்டார்.

தமக்குச் சாதகமான ராஜபக்ஷவை பதவியில் அமர்த்துவதன் மூலமே இலங்கையை மையமாகக் கொண்ட தமது இந்துசமுத்திர வியூகத்தை வடிவமைக்கலாமென சீனா எண்ணியது. இதற்கு இலங்கையின் இனமுரண்பாட்டு போரை ஊன்றுகோலாகப் பயன்படுத்தி உயரம் தாண்டும் பாய்ச்சலில் சீனா வெற்றி பெற்றது.

தேர்தலில் வெற்றி பெற்ற ராஜபக்ஷவிற்குத் தன்னையும், தனது குடும்ப ஆதிக்கத்தையும், இன ஆதிக்கத்தையும் நிலை நிறுத்த போர் வெற்றி அவசியப்பட்டது. ஆதலால் ராஜபக்ஷக்களுக்கும் போர் ஒரு தெரிவானது.

புலிகளைத் தோற்கடிப்பதற்கேற்ற பலமான முழுநீள உதவியை வழங்குவதன் மூலம் சிங்கள மக்களிடம் நற்பெயரைப் பெற்று இலங்கையில் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளச் சீனாவிற்கும் போர் ஒரு பிரதான தெரிவானது. சிங்கள [illegible] எதிர்ப்பானதாகவே இருந்து வந்துள்ளமை, இங்கு சீனாவிற்கு ஒரு சாதகமான புள்ளியாக மாறுகிறது.

ராஜபக்ஷக்கள் போர் விருப்புப் கொண்டிருந்ததால் அதைப் பயன்படுத்தி முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கொல்லவோ, அந்தச் சக்திகளை அரசியல் அரங்கிலிருந்து அகற்றவோ போர் உதவும் என்று இந்திய அரசும் கருதியதால் இந்தியாவின் தெரிவாகவும் போர் அமைந்தது.

சீனசார்பு அரசு பதவிக்கு வர புலிகளின் தேர்தல் புறக்கணிப்பு உதவியதென்பதாலும், புலிகளை கட்டுப்படுத்த போர் தேவையென மேற்குலகம் கருதியதாலும், மேற்குலகின் தெரிவாகவும் போரே அமைந்தது.

புலிகளை அழிப்பதற்கான போரை முன்னெடுப்பதற்கு ஆதரவளிப்பதன் மூலம், சிங்கள [illegible] அரசியலில் [illegible] வந்துவிடலாமென ஜே.வி.பி. கருதியதால் அதன் தெரிவும் போராகவே இருந்தது..

தன்னைத் தோற்கடிக்க புலிகளின் தேர்தல் புறக்கணிப்பே பிரதான காரணமாக அமைந்ததென ரணில் விக்கிரசிங்க கருதியதால் அதன் மீதான ஆத்திரத்தை தீவிர போர் ஆதரவாக அவரும் ஆக்கிக் கொண்டார். அதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தெரிவும் போராகவே அமைந்தது.

தமக்குக் கிடைக்க ஏற்பாடாகி இருந்த போதியளவு ஆயுதக் கப்பல்கள் பற்றிய எதிர்பார்க்கை, புலிகளுக்கு போர் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆதலால் புலிகளின் தெரிவும் போராகவே அமைந்தது.

மேற்கூறிய ஒவ்வொரு தரப்பினரும், தத்தம் நிகழ்ச்சி நிரலுக்குள் ஏனையோர் அடங்குவதாகக் கணக்குப்போட்டனர். ஆனால் இறுதி அர்த்தத்தில் சீனாவின் நிகழ்ச்சி நிரலுக்குள்தான் அனைத்து தரப்பினரும் அடங்கினர். தேர்தல், போருக்கு முன்னான போர் அரசியல், போரின் போதான போர் அரசியல் ஆகிய மூன்றையும் சீனா தனது அரசியல் சதுரங்கத்திற்கான வெற்றிக் காய்கள் ஆக்கியது.

அமெரிக்காவிற்கும், சீனாவிற்கும் இடையில் நீண்டகால அடிப்படையிலான பூகோள அரசியல் பொருளாதார ஆதிக்கப் போட்டி, இந்திய-சீன பிராந்திய நலன்கள் என்பன இலங்கைத்தீவின் உள்நாட்டுக் காரணிகளுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் போராய் வெடித்தது. சிங்கள பேரினவாத நலனும், ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் ஆதிக்க நலனும் போர் வடிவம் கொண்டன. ராஜபக்ஷக்கள், தமது குடும்ப ஆதிக்க நலனை இனப் பிரச்சினையின் வடிவான போருடனும், உலகப் பெரு வல்லரசுகளான அமெரிக்கா, சீனா, மற்றும் பிராந்திய வல்லரசான இந்தியா என்பனவற்றின் தேவைகளுடனும் ஒரு நேர்கோட்டில் இணைப்பதில் வெற்றி பெற்றனர்.

நன்றி- பொங்குதமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பயிற்சி நெறியை முடித்தோர் தொடர்பு கொள்க

## கல்வியமைச்சு கோரிக்கை

பட்டதாரியல்லாத ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த பின் இறுதி பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பக்க சந்தர்ப்பம் மறுக்கப்பட்டவர்கள் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாக பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பட்டதாரியல்லாத ஆசிரியர்களின் இருவருட வாரயிறுதி மற்றும் நிறுவனசார் ஆசிரிய பயிற்சி நெறிகள் கடந்த ஏப்ரல் மாதம் பூர்த்தியடைந்த நிலையில் இறுதி பரீட்சைகள் பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டன. இறுதியாக செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் பரீட்சைகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் எதிர்வரும் மாகாண சபை தேர்தல்கள் காரணமாக செப்டெம்பர் 20ஆம் திகதி பரீட்சைகளை நடத்த பரீட்சை திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அறிய கிடைத்துள்ளது.

இறுதி பரீட்சைக்கு தோற்றுவதற்கு பயிற்சி வகுப்புகளுக்கு குறைந்தது 67 சதவீத பங்குபற்றுகை கொண்டவர்களே அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். என்றாலும் தற்போது அதற்கு குறைந்த பங்குபற்றுகை உள்ளோரும் பரீட்சைக்கு தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுவது குறித்து பரிசீலனை செய்யப்படுகின்றது. இதன்போது வாய்ப்பு பெறுவோர் கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் ஜீஜீசெட் சமூக இணைவுக்கான கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியோடு ஒழுங்கமைக்கும் ஐந்து நாள் வதிவிட செயலமர்வில் நூறு சதவீதம் பங்குபற்றி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை பெற முடியும்.

மேலும், 67 சதவீதத்துக்கு குறைந்த வரவு காரணமாக பரீட்சைக்கு விண்ணப்பக்க மணதம் 28ஆம் திகதிக்கு முன்பதாகபணிப்பாளர்,ஆசிரிய கல்வி நிர்வாகம், கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு தமது தொலைபேசி இலக்கத்தை குறிப்பட்டு முறையீடு செய்யும்படி கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப் பரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16)

# பருத்தித்துறையில் இருந்து தெய்வேந்திர முனை வரை பயணம்

## ஆரம்பிக்கிறது ஆசிரியர் சங்கம்

பருத்தித்துறை, தேவேந்திரமுனை ஆகிய இரு இடங்களிலிருந்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் நேற்று அறிவித்துள்ளது.

இரு பகுதி ஆர்ப்பாட்டக்காரர்களும் ஒரே சமயத்தில் தொடங்கி, முன்னேறி ஒரு இடத்தில் சந்திப்பர். இவர்கள் சந்திக்கும் இடத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்படும் என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் பேச்சாளர் டாக்டர் மஹிம் மெண்டிஸ் கூறினார். பல்கலைக்கழக ஆசிரியர்கள், கல்வித்துறை தொழிற்சங்கங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பர் என அவர் கூறினார்.

இரத்தினபுரி, ஆநுராதபுரம் அடங்கலாக அடுத்த சில நாட்களில் மாகாண சபை தேர்தல் நடைபெறவுள்ள இடங்களில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளன பொதுக் கூட்டங்களை நடத்துமென டாக்டர் மெண்டிஸ் கூறினார். அரசாங்கத்திடமிருந்து எந்த பதிலும் இதுவரை கிடைக்காதபடியால் நாம் எமது தொழிற்சங்க நடிவடிக்கையை தீவிரமாக்க வேண்டியுள்ளது. எம்மோடு இணைந்து இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றுமாறு நாம் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறோம் என அவர் மேலும் கூறினார்.

(16)

# அகதிகள் தொடர்பான சட்டத்தை அமுலாக்க அவகாசம் தேவை

## ஆஸி கூறுகிறது

அகதிகள் தொடர்பான புதிய சட்டத்தை அமுல்ப[illegible]த்த கால அவகாசம் தேவைப்படும் என அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை போன்ற நாடுகளிலிருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கும் அகதிகளை பசுபிக் தீவுகளில் முகாம்களை அமைத்து தங்க வைப்பது தொடர்பான சட்டத்தை அமுல்படுத்த சில காலம் செல்லும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் தஞ்சம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பபுவா நியூகினியா மற்றும் நௌரு தீவுகளில் அகதிகளை தங்க வைப்பது தொடர்பான சட்டம் அண்மையில் -புதிய சட்டம் அமுல்படுத்தப்பட மாட்டாது என வெளியான தகவல்களில் உண்மையில்லை எனவும் இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் கால தாமதம் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



கொழும்பில் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தை கண்ணீர்ப் புகைக்குண்டு வீசி கலைக்கும் பொலிஸார்.

# எரிகாயங்களுக்குள்ளான வயோதிபப் பெண் சாவு

யாழ்ப்பாணம், ஓக.30

எரிகாயங்களுக்கு ஆளான வயோதிபப் பெண் யாழ். போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் ஊர்காவற்றுறை சுருவிலில் நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த மேரி பற்றிமா (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(16-4)

# தென்மராட்சி பிரதேசத்தில் கிராம அலுவலர் உள்ளக இடமாற்றம்

தென்மராட்சி,ஓக.30

தென்மராட்சி பிரதேச செயலக கிராம அலுவலர் பிரிவுகளில் நீண்ட காலம் பணியாற்றிய 11 கிராம அலுவலர்கள் உள்ளக இடமாற்றல் செய்யப்பட்டுள்ளனர்.

நாளைமறுதினம் நடைமுறைக்கு வரும் வகையில் பிரதேச செயலரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றல் பெற்ற கிராம அலுவலர்களும் இடமாற்றம் செய்யப்பட்ட பிரிவுகளும் வருமாறு:

ந.தனபாலசிங்கம்- கொடிகாமம் தெற்கு-கைதடி தென்கிழக்கு, கு.இரவீந்திரன்-கைதடி தென்கிழக்கு-கோவிலாக்கண்டி, தி.மகா லிங்கம் -தனங்களப்பு -கெற் பேலி, ஐ.கானமூர்த்தி- கெற் பேலி-தனங்கிளப்பு, க.வாமதேவன்-மட்டுவில் தெற்கு-சந்திரபுரம், கு.பரமானந்தம்-சந்திரபுரம்-கொடிகாமம் மத்தி, க.சுபாஸ்சந்திரபோஸ்-கொடிகாமம் மத்தி-கொடிகாமம் தெற்கு, வே.நாகதேவன்-தாவளை இயற்றாலை-மாசேரி, ந.இராசலிங்கம்-மாசேரி-தாவளை இயற்றாலை, செ.சிவசுப்பிரமணியம்-மட்டுவில் வடக்கு- மட்டுவில் மத்தி, க.ஸ்ரீவிக்கினேஸ்வரராசா -கோவிலாக்கண்டி- மட்டுவில் வடக்கு.

(ம-9)




**Auto விற்பனைக்கு**

4 Strock QV-xxxx எனும் இலக்கமுடைய சொந்தப் பாவனையில் உள்ள Auto உடன் விற்பனைக்கு உண்டு. T.P: 0777243354

(22362)(8.14)

**வாடகைக்கு**

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு- 0212270610

(சி/9356)(3.14)

**வேலையாள் தேவை**

யாழ். நகரிலுள்ள பான்சி கடைக்கு விற்பனையாளர் (பெண்) உடன் தேவை, முன் அனுபவம் உள்ளவர்களுக்கு திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும் .

பயிலுனரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:- 0779793300

பிரகாஸ் பான்சி

யாழ்ப்பாணம்.

(22386)(3.14)

**வேலையாள் தேவை**

திருநெல்வேலிப் பகுதியில் இயங்கி வரும் விநியோக களஞ்சியத்திற்கு

1. விற்பனையாளர் (ஆண்)
2. கணினி இயக்குனர் (பெண்) தேவை

T.P- 0777563781

(22356)(3.14)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்.கல்வியங்காடு சட்டநகர் வீதி அருகில் (இளங்கலைஞர் மன்றம் முன்)

தொடர்பு - 0776849095

**முக்கிய அறிவித்தல் - 2012**
**சாட்டி புனித சித்தாந்திரை மாதா ஆலய பெருவிழா**

வேலணை சாட்டி புனித சித்தாந்திரை மாதா ஆலய பெருவிழா 06.09.2012 - 15.09.2012 வரை நடைபெறவுள்ளது. இக்காலப்பகுதியில் தற்காலிகமாக (ஐஸ்கிறீம் கடை, இனிப்புக் கடை, சாப்பாட்டுக்கடை, கச்சான்கடை மற்றும் நடமாடும் உணவுப்பண்ட வியாபாரிகள் மற்றும் ஏனைய கடைகள்) வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் சகலரும் வேலணை பிரதேச சபை உப அலுவலகத்தில் ஒவ்வொரு வியாபாரத்திற்கும் முன்கூட்டியே அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதுடன், பொதுச்சுகாதாரப்பரிசோதகரின் அனுமதியுடன் வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், ஏனைய வாகனங்கள் வாகனத்தரிப்பிடங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே தரித்தல் வேண்டும்.

சி.சிவராசா
தவிசாளர்
பிரதேச சபை வேலணை.

(சி/2990)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியா பிறீமியர் லீக்

# கலைமகளும் ஸ்ராரும் துரத்தின ; வென்றன

யாழ்ப்பாணம் , ஓக.30

வவுனியா செவ்வானம் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் '' வவுனியா பிறீமியர் லீக்'' கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடந்த வாரம் இடம்பெற்ற போட்டி களின்முடிவுகள் சில வருமாறு -

வடக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழகத்துக்கும், தமிழ் யூனியன் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையோன போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வடக்குஸ்ரார் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய தமிழ் யூனியன் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜெசி அதிரடியாக ஆடி 28 பந்துகளில் 43 ஓட்டங்களையும், நிரோஷ் 21 பந்துகளில் 20 ஓட்டங் களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வடக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பாக ஜீவன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளைக்கைப்பற்றினார்.

133 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வடக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி, 19.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் அரவிந்தன் அபாரமாக ஆடி அரைச்சதம் கடந்தார். அரவிந்தன் 44 பந்துகளில் 58 ஓட்டங்களையும், குமரன் 8பந்துகளில் 18ஓட்டங் களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தமிழ் யூனியன் விளையாட்டுக் கழக அணிசார்பாக அனுசன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20ஓட்டங்களைகொடுத்து 2 இலக்குகளை கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக அரவிந்தன் தெரிவு செய்யப் பட்டார்.

மற்றொரு ஆட்டத்தில் நீயு பைற் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கலைமகள் விளையாட்டுக்கழக அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நீயூ பைற் விளையாட்டுக்கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சத்தியமூர்த்தி 38 பந்துகளில் 51 ஓட்டங் களையும், மயூரன் 21 பந்து களில் 32 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கலைமகள் விளையாட்டுக்கழக அணி சார்பாக வினோத் , புவிராஜ் ஆகியோர் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர்.

141 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைமகள் விளையாட்டுக்கழக அணியின் ஆட்டத்தில் அனல் பறந்தது. அந்த அணி 13.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் வாணவேடிக்கை காட்டி, அதிரடியில் கலக்கிய புவிராஜ் 26 பந்துகளில் 54 ஓட்டங்களையும் ,ரகுராஜ் 9 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர் போட்டியின் நாயகனாக 54 ஓட்டங்களைக் குவித்ததோடு, 19 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 3இலக்குகளைக் கைப்பற்றிய கலைமகள் விளையாட்டுக் கழக வீரன் புவிராஜ் தெரிவானார். (ங-23-400)

### மன்னார் பிறீமியர் லீக்

# அனல் பறக்கும் ஆட்டங்களில் அன்ரனிஸ்; விக்டரிஸ்

யாழ்ப்பாணம் ,ஓக.30

பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் மன்னார் ''பிறீமியர் லீக் கிரிக்கெட்'' சுற்றுப்போட்டிபரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தச் சுற்றுத் தொடரின் 13 ஆவது போட்டியில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியும், கிளிநொச்சி விளையாட்டுக்கழக அணியும், மோதிக்கொண்டன.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தடிய சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 10பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக அணித்தலைவர் சுகந்தன் 13 பந்துகளில் 22 ஓட்டங் களையும், அகிலன் 9 பந்து களில் 15 ஓட்டங்களையும், பெற்றனர்.

பந்து வீச்சில் கிளிநொச்சி விளையாட்டுக் கழக அணிசார்பாக அனட் திலக்சன் 9 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பாபு 14 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், துசாந்தன் 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்தப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. இதனால் அந்த அணி சென். அன்ரனிஸிடம் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி விளையாட்டுக் கழக அணிசார்பாக றேகன் 11 பந்துகளில் 13 ஓட்டங் களையும் அனுசன் 8 பந்து களில் 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிசார்பாக பிரதீப் 4 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் லஜீப், அகிலன், ஜோசியஸ், சுகந்தன், ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

சுற்றுத் தொடரின் 14ஆவதுபோட்டி சென்.ஜோசப் அணிக்கும் சென். விக்டரிஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற ஜோசப் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது.

சென்.ஜோசப் அணி சார்பாக நிஸ்மல் 22 பந்துகளில்21 ஓட்டங்களையும், டானியல் 14 பந்துகளில் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.விக்டரிஸ் அணிசார்பாக விவேக் 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் ,மெஸ்லின் 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும்கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.விக்டரிஸ் அணி ,ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின்அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 5.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இலக்கு இழப்பு எதுவுமின்றி, வெற்றி இலக்கைத் தொட்டது.

துடுப்பாட்டத்தில் சென். விக்டரிஸ் அணிசார்பாக அணித்தலைவர் அஜித் 19பந்துகளில் 41 ஓட்டங்களையும், ஜொய்சன் 14பந்துகளில் 30 ஓட்டங்களையும்பெற்றனர்.

(ங-23)

## மைதானங்களில் நாளை....

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் ''நியூஸ்ரார் பிறீமியர் லீக் '' வெற்றிக்கிண்ணத்துக்கான 20 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை வெள்ளிக் கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் 2009 ஆம் ஆண்டு நடத்திய பிரிவு 3 க்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ங- 23)

## வதிரி டைமன்ஸ் அரையிறுதிக்கு

யாழ்ப்பாணம்,ஓக.30

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில்நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.

இந்தக் காலிறுதியாட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கு எதிராக அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய , வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## மாவட்ட கிரிக்கெட் அணித் தெரிவு

யாழ்ப்பாணம் , ஓக .30

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் 2012 ஆம் ஆண்டுக் கான மாவட்ட கிரிக்கெட் அணியை தெரிவு செய்யவுள்ளது. மேற்படி தெரிவுக்கான பயிற்சிகள் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளன.

மேற்படி பயிற்சிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள், தங்களது கழகங்களில் இருந்து 5 சிறந்த வீரர் களை அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ங-23)

## காண்டீபன் வி.க வின் விளையாட்டுப் போட்டி

வடமராட்சி இன்பர்சிட்டி கிராம அபிவிருத்திச் சங்கமும், இன்பர் சிட்டி காண்டீபன் விளையாட்டுக்கழகமும் இணைந்து 57 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் இல்ல மெய்வன்மை விளையாட்டுப் போட்டி மற்றும் வெளிக்கழகங்கள் பங்கு பற்றும் விளையாட்டுப் போட்டிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காண்டீபன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் வெளிக் கழகங்கள் பங்கு பற்றும் ஆண்களுக்கான கபடிப் போட்டி, கிறிஸ் மரம் ஏறுதல், ஆண், பெண் இருபாலருக்குமான கயிறிழுத்தல் போட்டி, தலையணைச் சண்டை ,மல்யுத்தம், அஞ்சல் ஓட்டம் ஆகிய நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. (ங-78)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பெண்கள் பிரிவினருக்கான கரம் போட்டியில் வெற்றியீட்டிய வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை வீராங்கனைகள், கல்லூரி அதிபர் எஸ்.ஜேசுநேசன், பயிற்றுனர் வி.வி.ஜெயநேசன் மற்றும் பொறுப்பாசிரியருடன். (ங-400-23)

## வவுனியா தெற்கு வலயம் வென்றது 8 பதக்கங்களை

வவுனியா,ஓக.30

விசேடதேவையுடையவர்களுக்கான மாகாணமட்ட விளையாட்டு நிகழ்வுகளில் வவுனியா தெற்கு வலயம் 8 பதக்கங்களை வென்றுள்ளது.

விசேடதேவையுடையவர்களுக்கான தடகளப் போட்டி கடந்த மாதம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களில் இருந்து 600 விசேட தேவையுடைய மாணவர்கள் பங்கு பற்றினர் . இதில் வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து பங்கு பற்றிய 19 மாணவர்களில் 8 மாணவர்கள் தங்கம் உட்பட பதக்கங்களை பெற்றுள்ளனர்.

மூன்று முறிப்பு அ.த.க பாடசாலையைச் சேர்ந்த ஆ. றம்மியா குண்டெறிதல் போட்டியில் முதலாமிடத்தையும், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.வர்சாயினி பெரிய பந்து எறிதல் போட்டியில் முதலாமிடத்தையும், தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சு.சிந்துஜா 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தையும் பெற்று வலயத்துக்கு தங்கப்பதக்கங்களைப் பெற்றுக்கொடுத் துள்ளனர்.

செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த நா.ரஞ்சன் நீளம் பாய்தல் போட்டியிலும், தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பிரவீன் 30 மீற்றர் ஓட்டத்திலும், செட்டிக் குளம் மகாவித்தியாலயத்தசை் சேரந்த எஸ். கலஸ்டிக்கா 30 மீற்றர் ஓட்டத்திலும் முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ச.ஹரிஸ்ராஜ் 50 மீற்றர் ஓட்டத்திலும் , தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நன்சி 100 மீற்றர் ஓட்டத்திலும் மூன்றாமிடத்தினைப் பெற்று வெண்கலப்பதக்கங்களை வென்றனர்.

(ங-400)

## போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் , ஓக .30

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் , சேவாலங்கா மன்றத்தின் அனுசரணையுடன் மன்னார் பெரியபண்டிவிரிச்சான் ''முத்துக்கள் 3'' புகழ் வள்ளுவர் விளையாட்டுக்கழகம், மன்னர் மாவட்ட லீக்கின் நெறிப்படுத்தலுடன் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட , வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் செப்ரம்பர் மாதம் 14ஆம், 15 ஆம் ,16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கு பற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் எதிர் வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது அணி தொடர்பான விவரங்களை மன்னார் பெரியபண்டிவிரிச்சான் ''முத்துக்கள் 3'' புகழ் வள்ளுவர் விளையாட்டுக்கழக தலைவரிடம் ஒப்படைக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. (ங- 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி வரை போராடித் தோற்றது வயம்ப

# இறுதிக்குத் தகுதி பெற்றது ஊவா



ஊவா அணியின் இலகுவான வெற்றியை, வயம்ப அணி கடினமானதொரு போட்டித் தன்மையை இறுதிக் கட்டத்தில் வழங்கி நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் அந்த வெற்றியை ஊவாவிடம் தாரை வார்த்தது. இறுதி வரையில் வயம்ப அணியின் தூணாக ஆடிய மொஹமட் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

எஸ்.எல்.பி.எல் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மஹேல ஜெயவர்தன தலைமையிலான வயம்ப அணியும், திலின கண்டம்பி தலைமையிலான ஊவா அணியும் மோதிக் கொண்டன. ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஊவா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதனடிப்படையில் களமிறங்கிய ஊவா அணி ஜேக்கப் ஓரத்தின் அதிரடி இமாலய விளாசலுடன் 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக முனவீர, ராஜபக்ஷ களமிறங்கினர். ராஜபக்ஷ 4 ஓட்டங்களுடன் முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த அணித் தலைவர் கண்டம்பி, முனவீரவுடன் இணைந்து சுமார ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரிடையேயும் 41 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் முனவீர 17 பந்துகளில் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த சந்தர்போல் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்த கண்டம்பி 29 பந்துகளில் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய மக்டொனால்ட் 0, சீக்குகே பிரசன்ன 9 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து வெளியேற அணி 13.5 பந்துப் பரிமாற்றங்களில் 89 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தடுமாறியது.

அதன் பின்னர் களமிறங்கிய ஜேக்கப் ஓரம் அதிரடி வேட்டை நடத்தினார். சரமாரியாக ஓட்டக் குவிப்பை ஓரம், சந்தர்போல் ஜோடி மேற்கொண்டது. இவர்களின் ரொக்கட் வேக தாக்குதலில் வயம்ப அணி முற்றாக நிலை குலைந்தது.

24 பந்துகளில் 56 ஓட்டங்கள் ஆறாவது இலக்குக்காக இவர்களிடையே பகிரப்பட்டது. ஓரம் 17 பந்துகளில் 5 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி அடங்கலாக 41 ஓட்டங்களை விளாசினார். அதன் பின்னர் தனது கையில் ஆட்டத்தை எடுத்தாடிய சந்தர்போல் இறுதி வரையில் ஆட்டமிழக்காமல் 41 பந்துகளில் 50 ஓட்டங்களை விளாசினார். இறுதியில் ஊவா அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் அப்துல் ரஷாக் 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 172 என்னும் மிகப் பெரிய வெற்றி இலக்கை நோக்கி வயம்ப அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. தமிம் இக்பால், சந்திமால் ஜோடி இலக்கை விரட்டக் களமிறங்கியது. ஊவா அணி துடுப்பாட்டத்தில் அதிரடி வேட்டை நடத்தியது போல் ஆரம்பத்திலேயே இலக்கு வேட்டை நடத்தியது. தமிம் இக்பால் 11, சந்திமால் 5, ஜெயவர்தன, செகான் ஜெயசூர்ய ஒரு ஓட்டம், அப்துல் ரஷாக், சிறிவர்தன 3 ஓட்டங்கள், வீரவர்தன 0 என்று வெளியேறினர். ஓரம், குல், சேனநாயக்க பந்து வீச்சில் மிரட்ட வயம்ப அணி முதல் ஆறுபந்துப் பரிமாற்றங்களுக்குள்ளேயே 27 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் அஷார் மொஹமட், இசுரு உதான ஜோடி சேர்ந்தது. இருவரும் அணியை முதலில் 50 ஓட்டங்களையாவது தாண்டச் செய்வதற்காக கடும்பாடுபட வேண்டியிருந்தது. பின்னர் மெல்ல மெல்ல அஷார் மொஹமட் அதிரடி வேட்டையைத் தொடக்கினார். இவரது அதிரடி பின்னர் அதிகரிக்க, ஊவாவின் வெற்றி மெல்ல ஊசல் ஆடியது. மறுமுனையில் இசுரு உதானவும் இறுதிக் கட்டத்தில் அதிரடியை கையில் எடுக்க ஊவாவின் வெற்றிக் கனவு தகரத் தொடங்கியது. தொடர்ச்சியாக பவுண்டரிகள், சிக்கஸர்கள் என்று அரங்கம் அதிர்ந்தது.



இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு 25 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் உதான ஆட்டமிழந்தார். 8 ஆவது இலக்குக்காக மிகச் சிறப்பாக 80 பந்துகளில் 120 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் உதான 38 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் வயம்ப அணியால் 8 இலக்குகளை இழந்து 151 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 20 ஓட்டங்களால் இறுதிக்கான வாய்ப்பை வயம்ப இழந்தது. மொஹமட் ஆட்டமிழக்காமல் 47 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 75 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஓரம் 16 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக இவரே தெரிவானார். (5)

# வீழ்ந்தது பாக். வென்றது ஆஸி.

பாகிஸ்தானுடனான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.


டுபாயில் இரு அணிகளுக்குமிடையிலான ஒரு நாள் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆஸ்திரேலிய அணியின் சிறப்பான பந்து வீச்சுக் காரணமாக முன்வரிசை இலக்குகள் வேகமாக வீழ்த்தப்பட்டன. இருப்பினும் மத்திய வரிசையின் உதவியுடன் பெரும் போராட்டத்தின் மத்தியில் 45.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. அஷாட் சபிக் 56, உமர் அக்மல் 52 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஆஸி. சார்பில் ஸ்ராக் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

சுமாராக எட்டக் கூடிய இலக்கை விரட்டிய ஆஸ்திரேலிய அணியும் சிறிது தடுமாறியது. இருப்பினும் அணித் தலைவர் கிளார்க், பெய்லி அரைச்சதம் கடக்க ஆஸ்திரேலிய அணி 48.2 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. பந்து வீச்சில் சயிட் அஜ்மல் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய அணியின் ஸ்ராக் தெரிவானார். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஹனஹிர நாகாஸ் இறுதிக்குத் தகுதி

தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக ஆட்டத்தில் எந்தவொரு பந்தும் வீசப்படாத நிலையில், லீக் ஆட்டத்தின் அடிப்படையில் நஹனஹிர நாகாஸ் அணி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

இலங்கையில் நடைபெற்று வரும் எஸ்.எல்.பி.எல் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற இருந்தது. இதில் மத்தியூஸ் தலைமையிலான நஹனஹிர நாகாஸ் அணியும், சனத் ஜெயசூர்யா தலைமையிலான கந்துரட்ட வொரியஸ் அணியும் மோத இருந்தன.

இந்த நிலையில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக ஆட்டத்தில் நாணயச் சுழற்சியே இடம்பெறவில்லை. இறுதியில் நேற்றிரவு 10.45 மணிக்கு ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும் லீக் ஆட்டத்தில் கந்துரட்ட வொரியர்ஸ் அணியை நஹனஹிர நாகாஸ் அணி வீழ்த்தியிருந்ததன் அடிப்படையில் நாகாஸ் அணி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

நாளை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் ஊவா அணியை நஹனஹிர நாகாஸ் அணி எதிர்கொள்கின்றது.

# முதல் பந்துக்குப் பயம்



கிரிக்கெட் போட்டியில் துணிச்சலாக துடுப்பெடுத்தாடும் சேவாக்கிற்கு, முதல் பந்தை சந்திக்கும் போது பதட்டமாக இருக்குமாம். இந்திய அணியின் தொடக்க வீரரான சேவாக். அதிரடி ஆட்டத்தில் கில்லாடி பவுண்டரி, சிக்சர்களாக பறக்க விடுவது வழக்கம். இவருக்கும் களத்தில் இருக்கும் போது பதட்டம் ஏற்படுவதுண்டு.

இது குறித்து சேவாக் கூறியதாவது:

ஒவ்வொரு ஆட்டத்திலும் முதல் பந்தை சந்திக்கும் போது மனதில் லேசான நடுக்கம் இருக்கும். அப்போது எனது வயிற்றில் பட்டாம்பூச்சி பறப்பது போன்ற உணர்வு ஏற்படும். ஆனால் இதனை ஒருபோதும் வெளிப்படுத்தியது கிடையாது. ஏனெனில் அது எதிரணி பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக மாறிவிடும். இதனால் பந்துவீச்சில் நெருக்கடி கொடுத்து, எனது இலக்கை விரைவில் கைப்பற்றிவிடுவார்கள். ஒவ்வொரு முறையும் பந்தை எதிர்கொள்ளும் போது, தன்னம்பிக்கையுடன் விளையாடுவதால், ஆரம்பம் முதல் அடித்து ஆட முடிகிறது.

மனவலிமையும், தன்னம்பிக்கையும் இருந்தால், எந்த ஒரு பந்து வீச்சாளரின் பந்தையும் சமாளித்து விடலாம். பொதுவாக சர்வதேச போட்டியில் மனவலிமை முக்கியமான ஒன்று. துடுப்பாட்ட வீரராக இருந்தாலும் சரி, பந்து வீச்சாளராக இருந்தாலும் சரி மனம் தளராமல் போராடினால் இலக்கை அடைந்துவிடலாம்.

சச்சினுடன் இணைந்து விளையாடும் போது ஆறுதலாக இருக்கலாம். ஏனெனில் எதிரணியினர் சச்சின் இலக்கை கைப்பற்றுவதை இலக்காக கொண்டுள்ளனர். ஆனால் கம்பிருடன் விளையாடும் போது, அதிக நெருக்கடி ஏற்படும். ஏனெனில் கவனம் என் மீது தான் அதிகம் இருக்கும். இதுபோன்ற நேரத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் விளையாடுவேன்.

போட்டியில் 'டக்-அவுட்' ஆனாலும் சரி, 300 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தாலும் சரி மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் களமிறங்குவேன். சில நேரங்களில் இலக்கை விரைவில் இழந்து திரும்ப நேரிடும். இது போன்ற சமயங்களில் மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் அடுத்த ஆட்டத்தில் சாதிக்க முடியும்.

இந்திய அணியில் அடித்து ஆடக்கூடிய திறமையான வீரர்கள் நிறைய வந்துவிட்டனர். விராத் ஹோக்லி, சுரேஷ் ரெய்னா, டோனி, யுவராஜ் சிங், ரோகித் சர்மா ஆகியோர் விரைவில் பந்தை சிக்சருக்கு அனுப்பும் திறமை பெற்றுள்ளனர். இதேபோல டேவிட் வோர்னர் (ஆஸ்திரேலியா), ஷேன் வொட்சன் (ஆஸ்திரேலியா), கெவின் பீட்டர்சன் (இங்கிலாந்து) உள்ளிட்ட மற்ற அணி வீரர்களும் அடித்து ஆடுவதில் திறமையானவர்கள் - என்றார். (5)


## NEW SCIENCE COLLEGE

வெங்கடேசன் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**2013 A/L DAY CLASS**

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

(2012 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது)

**CHEMISTRY**
**Mr. DIAS**

ஆரம்பம்:- 01.09.2012
Sat 8.00 am

(சி/2984)(3.6)

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றுக்கு தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய 20 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் தேவை.

✱ கல்வி O/L வரை
✱ சம்பளம் :-

ஆரம்பம் - 8000/=
உணவு உதவி - 4500/=
மொத்தம் - 12500/=

தங்குமிடம் இலவசம்

தொடர்புகளுக்கு :- 0777811519

(22359)(3.14)

## Colour Print

Colour Photo copy Colour Print

A4,A3 அளவுகளில் தரமான பிரதிகள்

30 ரூபாவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.



Online Uthayan
359, Kasthuriyar Road, Jaffna.
T.P- 0215676722

(சி/2217)(3.14)

## Vacancy For English Teachers
Urumpirai KIDS' PARK / Thirunelvely SMART KIDS

Retired English Teachers, HNDE or equivalent qualified, persons with previous experience in teaching English in preschools can apply with C.V.

Closing Date :- 05.09.2012

Urumpirai Kids' Park,
Gnanavairavar Road,
Urumpirai.

(22354)(3.6)

## விற்பனைக்கு

அமெரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட பாவித்த கால் நடமாட முடியாத வர்களுக்கான Battery இல் (rechargable) இயங்கும் electric power wheel chair விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 0779293181

(22365)(9.14)

## விற்பனைக்கு

தரமான கருங் சல்லிகள் (½", ¾", 1", 1½", 4", 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

226- தொடர் இலக்க ½ வொடி லேடன் லொறி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0775890730.

(சி/2565)(9.14)

| |
|---|
| வணிகக்கல்வி |
| S. பிரதீபன் M.com |
| Paper Class ஆரம்பம் 01.09.2012 சனி 6am |
| A/L 2013 சனி, ஞாயிறு 7am |
| A/L 2014 சனி, ஞாயிறு 8am |
| புதிய பிரிவுகள் ஆரம்பம் (22313)(3.6) |
| யூனிவேர்சல் கந்தர்மடம். |

## ஸ்கிரீன் பிறிண்டிங் வேலைவாய்ப்பு



அனுபவமுள்ளவர்கள், பழகவிரும்புபவர்கள்



தொடர்பு : Online Uthayan
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(சி/2986)(6-5)

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக!!
அரேபியன் மற்றும் இத்தாலி மொழி வகுப்புக்கள் ஆரம்பம் !!!

திருமணம் செய்து அல்லது தொழில் வாய்ப்புக்காக அரேபியா, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு செல்வோர்க்கான வகுப்புக்கள்

குறிப்பு:- பயிற்சி நெறியின் பின்னர் சரளமாக கதைக்க மற்றும் எழுத வாசிக்க முடியும், அரச சான்றிதழ் வழங்கப்படும். உடன் பதிவினை மேற்கொள்ளவும் !!!

By:- S.Selvathashan M.Sc in ICT

மேலதிக விபரங்களுக்கும் அனுமதிகளுக்கும் :-
UNI - ICT CAMPUS (PVT) LTD
No 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 22 55867 / 0777 110 862
(மானிப்பாய், நெல்லியடி கிளைகளிலும் ஆரம்பம்)

## வாகனம் விற்பனைக்கு

எமது பாவனையிலுள்ள NPLA தொடரிலக்கமுடைய Freezer பொருத்தப்பட்ட 250 - கன்ரர் வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : அஸ்வினி மல்ரி பிளாசா, ராஜா பிளாசா
74, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு யாழ்ப்பாணம்

(22306)(6-8)


## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் லீலானந்த சிவம்

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் லீலானந்த சிவம் (29.08.2012) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யேசுதாசன் மற்றும் தேவமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், ஞான மலரின் பாசமிகு கணவரும், மேரி மலர்விழியின் (சுவிஸ்) பாசமிகு தந்தையும், ஜெயக்குமாரின் (சுவிஸ்) அன்பு மாமனும், நிலானியின் பாசமிகு பேரனும், இரட்ணசிங்கம் (ஓய்வு பெற்ற இ.மி.ச), செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மத்தியூஸ் மனோகரன், மத்தியூஸ் றஞ்சன், தேவறஞ்சினி, தேவராணி, நித்தி யானந்தன் (UK), எட்வேட் ராஜன் (பிரான்ஸ்), தேவரமணி, லூர்த்ஜீவா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு,
கேணியடி.

தகவல்
குடும்பத்தினர்.

(22364)(3.14)

## மரண அறிவித்தல்



### சிற்றம்பலம் நித்தியானந்தன்
(பிரபல தேங்காய் விற்பனையாளர்)

சங்கரத்தையை பிறப்பிடமாகவும் மானிப்பாய் சோதிவேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் நித்தியானந்தன் நேற்று (29.08.2012)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்-ஆச்சித்தாய் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தகுமாரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தியாகராஜா மற்றும் இராஜரட்ணம், வேலுப்பிள்ளை, துரைராஜா காலஞ்சென்ற தனபாலன் மற்றும் இரகுநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் பாலசறோஜினி, பத்மானந்த வடிவேல், பாலயோகினி, பாலகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2012) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோதிவேம்படி,
மானிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்.

(22357) (15-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு 36 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. rajichart @ yahoo.com எனும் email மூலம் தொடர்புகொள்ளவும். (22196) (45.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கந்தையா இரவீந்திரன் (J.P)



இணுவில் மேற்கு(ஜே/191) பிரிவில் 22 வருடம் கிராம அலுவலராக பணியாற்றி இப்பகுதியில் சமய, சமூக சேவைகளிலும் அளப்பரிய சேவையாற்றி அறுபதாவது வயதில் ஓய்வு பெறும் இவரை பல செல்வங்களும் பெற்று வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

I.E.T வேக் சொப்
கந்தசுவாமி கோயில் வீதி,
இணுவில்.

(221956) (5-6)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093
E-mail: alliance jaffna@yahoo. com
(கச்சேரி வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி கட்டடம்)
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

(22198) (45-6)

## கோட்டைக்காடு, மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயம் இராசகோபுர நிர்மாணம்

ஐந்து தளங்களைக்கொண்ட மேற்படி இராசகோபுர நிர்மாண வேலையை கூலி ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்க விரும்பும் முன் அனுபவம் உள்ளவர்கள் 01.09.2012 இல் இருந்து 14.09.2012 வரை உள்ள காலப் பகுதிக்குள் கீழ் தரப்பட்டுள்ள விலாசதாரருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நா. கணேசமூர்த்தி
செயலாளர்,
கோட்டைக்காடு,
மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை,
'சண்முகா மருந்தகம்'
54, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
தொ.பே. 077 9256 739.

திருமதி இரகுபதி லோகநாயகி
தலைவர்:
கோட்டைக்காடு, மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை.

(22307) (45-6)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
25 ★ 06 ★ 1998

பரமன் அடியில்
30 ★ 08 ★ 2007

செல்வன் **கண்ணதாசன் ரஜந்தன்** (அன்பு)

(தரம் 4 மாணவன், யா/இணுவில் இந்துக்கல்லூரி)

எம் இல் வாழ்வின் நல்முத்தாய்
வந்துதித்த குலக்கொழுந்தே
புன்னகைக்கும் புதுமலராய்
மடிதவழ்ந்து மகிழ்வித்தாய்
சிறுகாற்றும் உனைத்தீண்டா
சிறுகிடுக்கில் காத்து வந்தோம்
ஒரு கூட்டில் மகிழ்ந்திருந்தோம்
எங்கு சென்றாய் அன்புவே
துள்ளி ஓடும் புள்ளி மானாய்
பள்ளி செல்லும் உன்னழகை
பொறுக்காமல் பறித்தானோ காலனவன்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

இணுவில் கிழக்கு,
இணுவில்.

(22303)(6.8)

குடும்பத்தினர்.

## தமிழ்ப் பெரியார்களின் சிலைகள் புனரமைப்பு

நெளுக்குளம், ஓக.30

நீண்டகாலமாகவே கவனிப்பாரற்றுக் காணப்பட்ட தமிழ்ப் பெரியார்களின் சிலைகள் வவுனியாவில் சீர் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா நகரை அண்டிய பகுதிகளிலும் நகர மையப்பகுதியிலும் தமிழுக்கும், சமயத்துக்கும் அரும்பணியாற்றிய தமிழ்ப் பெரியார்களின் சிலைகள் அமைக்கப் பட்டிருந்தன. ஆனால் போர் மற்றும் அமைதியற்ற சூழல் காரணமாக இந்தச் சிலைகள் பராமரிப்பின்றி காணப்பட்டன. தற்போது வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் இந்தச் சிலைகள் யாவும் சீர்செய்யப்பட்டு வர்ணப் பூச்சுக்களும் இடப்பட்டுள்ளன. இந்த வேலைத் திட்டத்தை வவுனியாவிலுள்ள தனியார் வர்த்தக நிலையங்கள் மேற்கொண்டன. (க-421)

## மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் அகற்றப்படவுள்ள மண்ணணைகள்

அக்கராயன், ஓக.30

மாந்தை கிழக்கில் போர்க்காலத்தில் அமைக்கப்பட்ட மண்ணணைகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் இராணுவத்தின் பொறியியல் பிரிவினர் இந்த மண்ணணைகளை அகற்றும் பணிகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 17 கிலோ மீற்றர் நீளமான மண்ணணைகளே இவ்வாறு அகற்றப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பதில் பிரதேச செயலாளர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இந்த மண்ணணைகள் பாலைப்பாணி, விநாயகபுரம் ஆகிய கிராமங்களை ஊடறுத்துச் செல்கின்றன.

இந்த மண்ணணைகள் அகற்றப்படுவதால் பெருமளவு விவசாய நிலங்கள் விடுவிக்கப்படுமென எதிர் பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

## ஓட்டோக்களைப் பதிவுசெய்யுமாறு கோரிக்கை


மன்னார், ஓக.30

மன்னார் நகரசபைப்பகுதியில் உள்ள ஓட்டோக்களுக்கான பதிவுகளை நகரசபையில் மேற்கொள்ளுமாறு அவற்றின் உரிமையாளர்களுக்கு நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மக்கள் தமது சொந்தத் தேவைகளுக்காகவும், தொழில் ரீதியாகவும் பயன்படுத்தும் அனைத்து ஓட்டோக்களையும் பதிவு செய்து கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்படுகின்ற அனைத்து ஓட்டோக்களுக்கும் விசேட பதிவு இலக்கங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மன்னாரிலுள்ள சில ஓட்டோ சாரதிகள் பயனாளிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதோடு குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகையவர்களின் வண்டிகளை அடையாளம் காண்பதற்கு இந்தப் பதிவு [illegible] நகர சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.




உங்கள் முன்னேற்றத்தின் ஊன்றுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank
Nations Leasing

(சி/2643)(45.6)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை
தோற்றம் 29.03.1938
மறைவு 29.08.2004

தம்பிப்பிள்ளை அன்னம்மா
தோற்றம் 29.12.1946
மறைவு 13.09.2005

ஊர்போற்ற வாழ்ந்த உத்தமர்களே! உங்களை இழந்து ஆண்டுகள் எட்டாயினும் -
ஈரவிழிகளாய் செய்வதறியாது - உங்கள் நினைவில் என்றும் நாம்.
அமரர்களின் 8ஆம் ஆண்டு நினைவுதினம் இன்று (30.08.2012) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

அளவெட்டி, மகாத்மா லேன்.

(22305) (45.6)

குடும்பத்தினர்.

## அரசாங்க அறிவித்தல்
## பகிரங்க ஏலவிற்பனை - 2012
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலக அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தற்போது பாவனையில் இல்லாத பின்வரும் பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன. பொருள்களின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 01. வாகன ரயர்கள் | 07. உருக்குக் குழாய்கள் |
| 02. உருக்குக் கதிரைகள் | 08. தட்டச்சுப் பொறிகள் |
| 03. மரத்தளபாடங்கள் | 09. பிறின்டர்கள்,பக்ஸ் இயந்திரங்கள் |
| 04. பழைய புதினப் பத்திரிகைகள் | 10. உருக்கு பெயர்ப்பலகைகள் |
| 05. வாகன உதிரிப் பாகங்கள் | 11. பிளைவூட் பலகைகள் |
| 06. கூரை மின்விசிறிகள் | 12. தட்டு ஓடுகள், முகட்டு ஓடுகள் |

மேற்படி பொருள்களின் ஏலவிற்பனையானது 20.09.2012 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நாவற்குழி அரச களஞ்சியத்தில் நடைபெறும். ஏலவிற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக்கிளையுடன் தொடர்புகொண்டு அலுவலக நாள்களில் 30.08.2012 முதல் 19.09.2012 காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நாவற்குழி அரச களஞ்சியத்தில் பொருள்களைப் பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருள்களைப் பெற்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏலவிற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்குப் பிந்தாமல் பொருள்களை நாவற்குழி அரச களஞ்சியத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

[illegible] அருமைநாயகம்
அரச அதிபர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்டத்தரிப்பு பிரான்பற்று அருள்மிகு

# "சரவணப் பொய்கை"

# புதிதாக நிர்மாணிக்க...
# பெருவிழாவும் தேர்...



## நல்லை ஆதின முதல்வரின் ஆசிச்செய்தி



பிரான் பற்றில் எழுந்தருளியிருந்து அருளாசி புரியும் முருகப் பெருமானுக்கு இன்று புதிதாக, எண்கோண வடிவில் சிற்பவேலைகளோடு அமையப்பெற்ற தீர்த்தக்கேணி முருகனின் தீர்த்தத்துக்கு அர்ப்பணிக்க இருப்பது, இந்த ஆலயத்துக்கும் இங்கு வாழும் மக்களுக்கும் சிறப்பைச் சேர்ப்பதாகும். ஆன்மாவைப் பற்றியிருக்கும் தீவினைகளை அகற்றுவது தீர்த்தோற்சவமாகும். இந்த அழகான தீர்த்த மண்டபத்தை அமைத்திருப்பவர்களையும் தேர்த்திருவிழா உபயகாரர்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இப் புனிதமான தீர்த்தத்தில் அனைவரும் நீராடி முருகனுடைய அன்பைப் பெற்று அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.**

## அடியவர் குறை போக்குவான்



அருள்வளம் நிறைந்த பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலயத்தில் மிகப்பெரிய தீர்த்தத் தடாகம் அமைக்கப்பட்ட செய்தியறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். பாவங்களைக் கழுவும் சக்தி திருக்கோவில் தீர்த்தங்களுக்கு விசேடமாகவுண்டு. முருகப் பெருமான் சரவணைப் பொய்கையில் ஆறு அழகான குழந்தைகளாக அருங்காட்சி கொடுத்த வரலாற்றைக் கந்தபுராணம் விளக்குகிறது. பல லட்சம் ரூபா செலவில் பக்தர்கள் உருவாக்கியிருக்கும் புனிதமான தீர்த்தக் கேணியில் சகல புண்ணிய தீர்த்தங்களும் சேர்க்கப்பட்டு திருவருளை வளர்க்க வேண்டும். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமைந்தால் கீர்த்தி நிறைவாகக் கிடைக்கும் என்பது ஆன்றோர் சிந்தனை. எனவே பிரான்பற்று முருகன் மேலும் கீர்த்தி தரும் தெய்வமாக விளங்கி அடியவர் குறைபோக்குவான் என்பதில் ஐயமில்லை. நவீன அமைப்பில் மிகவும் குறுகிய காலத்தில் இப்புதிய தீர்த்த் தடாகத்தை உருவாக்கிய திரு.சபாநாதன் குருபரன் அவர்கட்கும் இத்தீர்த்தத் தடாகத்தை உருவாக்க பெரிதும் காரணமாக விளங்கிய சின்னராசா குடும்பத்திற்கும் எனது இனிய வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி அமைகிறேன்.

**"யாவர்க்குமாம் என்றும் இன்னுரை தானே"**

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

## அழகை மெருக...
## சூழலில் முரு...

முருகக் கடவுளின் ...ணை
யில் நனைந்திருப்பவர்களில் இ...
ணில் வாழும் நானும் ஒருவன். அ...
கருணையினால் எல்லா நலன்...
பெற்று நாம் அனைவரும் சிறப்புடன்...
கின்றோம். அவரின் சிறப்பை எடு...
கூற வார்த்தைகளே இல்லை. இ...
பிரான்பற்று பெரியவள... முரு...
அமர்ந்தருளிக் கொண்டிருக்கும் மு...
உரியதாகும். வயலும் வயல் சார்...
யத்தின் அழகை மெருகூட்டி நிற்கி...
தீர்த்த உற்சவம் சிறப்புற ஓர் தீர்...
லாத குறையை இன்று தொடக்கம்...
யில் அமைந்த "சரவணப் பொய்...
என்பதில் எதுவித ஐயமும் இல்...
மானுக்கு மனமுவர்ந்து திருப்பணி...
முண்டியடித்துக் கொண்டிருக்கின்...
யில் சு.சின்னராசா குடும்பத்தி...
கையினை அமைத்து ஆலயத்...
வமான செயல் மிக உன்னதமான...
அவரது குடும்பத்தினருக்கும் கி...
கும். யானும் அவரின் பணிக்கா...
நிற்கின்றேன்.

**பேராசிரியர்(கலாநி...**

## இனி சரவணப் பொ...
## தீர்த்தம்

இலங்கைத் திருநாட்டில் வட...
யில் அருளை அள்ளி வழங்கும் மு...
ஆலயங்களில் பிரான்பற்று பெரிய...
முருகன் ஆலயமும் ஒன்று. ஆ...
தோறும் திருப்பணி வேலைகளால்...
யம் புதுப்பொலிவு பெறுகின்றது...
ஆலயம் மஹோற்சவம் நடை...
காலத்தில் இருந்து ஆலய உட்பி...
உள்ள திருமஞ்சன கிணற்றில் தீர்...
னுக்கு நந்தன வருடம் ஆவணி ...
சரவணப் பொய்கையில் வந்துத்...
மான் சரவணப்பொய்கையில் நீராடி ...
கின்றார். முருகப்பெருமானின் இ...
"சரவணப் பொய்கை" திறப்பு விழா கா...
மகிழ்வடைகின்றோம். இன்றைய நா...
சண்முகனின் பாதங்களை வேண்டி...

**- மருத்துவர் சிதம்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கு பெரியவளவு முருகமூர்த்தி ஆலயம்



# ...கப்பட்ட தீர்த்தத் தடாகப் பிரவேசப் ...ர்த்திருவிழாவும் - 30.08.2012

### ...கூட்டும் ...ருகன்



...ண ...ழ
இம்மண்
அவரின்
...ன்களும்
...டன் வாழ்
எடுத்துக்
...இவையனைத்தும் எமது
...கமூர்த்திப் பதியில்
... முருகப்பெருமானுக்கே
...ார்ந்த சூழல் இவ்வால
...ற்கின்றது. இருப்பினும்
...தீர்த்தப் பொய்கை இல்
...கம் பயன்பெறும் வகை
...கை" தீர்த்து வைக்கும்
...இல்லை. முருகப்பெரு
...ணி செய்பவர்கள் பலர்
...கின்றனர். அவ்வரிசை
...தினர் மேற்படி பொய்
...த்திற்குதவிய தனித்து
...னது. இது அவருக்கும்
...கிடைத்த பெரும் பேறா
...காக அவரை வாழ்த்தி

...நிதி) பொன்.நவரட்ணம்.

### ...ாய்கையில் ...ம்



...வடதிசை
... முருகன்
...ரியவளவு
ஆண்டு
...ால் ஆல
...து. இவ்
...டபெறத் தொடங்கிய
...ட்பிரகார வடதிசையில்
...ீர்த்தம் ஆடிவந்த வேல
...ி பூரணை நல்நாளில்
...த்த சண்முகப்பெரு
...ி அருள்பாலிக்க இருக்
...இரதோற்சவம் அன்று
... காண்பதையிட்டு பெரு
... நாள் சிறப்புற அமைய
...டி வாழ்த்துகின்றோம்.
...தம்பரநாதன் சிவகுமார்.

### தான்தோன்றித் தெய்வமாக காட்சி கொடுத்த முருகன்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

ஈழத்தின் வடபால் அமைந்த யாழ்ப்பாண தீபகற்பத்தின் கண்ணே திருவருள் மிகவமைந்த முருக ஆலயங்களில் ஒன்றாக பண்டத்தரிப்பு பட்டினத்தருகே பிரான் பற்றூர் பெரியவளவு முருக மூர்த்தி ஆலயம் பேரருட் பொலிவோடு அருளாட்சி செய்கின்றது. இங்கு அருளாட்சி புரியும் முருகப் பெருமான், இற்றைக்கு பலநூறு வருடங்களுக்கு முன்பே தான்தோன்றித் தெய்வமாக காட்சி கொடுத்து முன்னவர்களால் வழிபாட்டியற்றப்பட்டு வரலாறானார். இத்துணை பெருஞ்சிறப்பும், பழைமையும் மிக்க முருக மூர்த்தி கடவுளின் தீர்த்த தடாகப் பிரவேசத்திற்காக.

நிகழும் ஆவணிமாதம் பதினான்காம் நாள் சதுர்த்தசித் திதியும் திருவோண நட்சத்திரமும் கூடி வரும் நடேசரபிஷேக நன்நாளில் எம்பெருமானாம் முருகமூர்த்தியானவரின் திருவருள் துறையிலங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரவணப் பொய்கை என்ற திருநாமத்துடன் தீர்த்த தடாகப் பிரவேஷப் பெருவிழா இடம் பெற இறைஅருள் கைகூடி நிற்பதால் அத்தருணம் அடியார்கள் அனைவரும் கலந்து இறை ஆசியை பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**சு.சின்னராசா குடும்பத்தினர்.**

### சந்தனமேனியானே - முருகா

ஆறு தாமரை மலர்களிலே முருகா உன்தன் அவதாரம் - அந்த
ஆறு மலர்கள் பூத்தது சரவணப் பொய்கையிலே
ஆறு மலரும் உன் ஒளியாய் மின்னுகின்ற பிரான்பதியில்
ஞான ஊற்றாய் சுரந்ததோ இங்கோர் சரவணப் பொய்கை

வந்தனம் செய்து தந்தோம் நீராடு - முருகா
சந்தன மேனியனே இங்கு வந்தாளு
எண்கோண மண்டபத்தில் நீ அமர்ந்து - எங்கள்
உள்ளமெல்லாம் குடியிருந்தாய் சரவணனே

பழனியிலே உனக்கு பஞ்சாமிர்தம் - செல்வ
சந்நிதியில் தந்தாய் அமுதசுரபி
செந்தூரிலே நீ கடலாடி - இந்த
பெரும்பதியிலே பொய்கையில் நீராடு.

**நா.ஸ்ரீஸ்கந்தராசா.**

### பாவம் தீர்க்கும் புண்ணிய தீர்த்தம்



இந்து சமுத்திரத்தில் முத்தாய் விளங்கும் இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண நகரில் பிரான்பற்று என்னும் அழகிய எழில்மிகு கிராமத்தில் மகாவல்லி ஹஜாவல்லி சமேதராக எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பெரியவளவு முருகமூர்த்தியின் தேவஸ்தானத்தில் ஆவணி பூரணையை தீர்த்தமாகக் கொண்டு பதினொரு தினங்கள் மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது. இந்த வகையின் தீர்த்தோற்சுநாளில் ஆன்மாக்கள் தீர்த்தோம் என்று உள்ளத்தில் இறைவனை இருத்தி தீர்த்த ஜலத்தில் நீராடி இறை அபிஷேகத் தீர்த்தம் பருகி அகத்தினாலும் புறத்தினாலும் ஏற்பட்ட பாவம் அனைத்தும் தீர்த்தோம் என உணர்கின்றனர். இந்த ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அழகிய சிற்ப வர்ண வேலைகளுடன் காட்சி தருகின்ற தீர்த்தத் தடாகத்திலே எழுந்தருளி தீர்த்தமாடும் முருகப் பெருமானின் அருளாசியைப் பெற எனது நல்லா-சிகள்.

"ஸர்வே ஜனகா சுகினோ பவந்தோ"

**சிவஸ்ரீ இ.உலகேஸ்வரக் குருக்கள், பிரான்பற்று பெரிய வளவு முருகமூர்த்தீ ஆலய குருவும் மஹோற்சவ குருவும்.**

### எமது நீண்டநாள் கனவு நனவாகும் நாள் இன்று



இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் ஈழமணித்திருநாட்டின் தலை நகரம் யாழ்ப்பாணத்தின் வடபால் களனி வயல்சூழ அமைந்திருக்கும் பிரான் பற்றூரில் தான் தோன்றித் தெய்வமென பெரியவளவில் வீற்றிருக்கும் முருகனுக்கு எண்கோண வடிவில் தீர்த்தக் கேணி அமைந்திருப்பது மேலும் சிறப்பைத்தருகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் ஒருங்கே அமைவது அரிது.

எமது ஆலயத்திற்கு தீர்த்தக்கேணி இல்லாத குறையையும் எமது நீண்டநாள் கனவையும் நனவாக்கி உள்ளனர் சின்னராசா குடும்பத்தினர். இலங்கையில் எங்கும் இல்லாததும் அழகுடன் கூடிய சிற்ப வேலைகளுடன் பார்ப்போரைப் பரவசப்படுத்தும் இத்தீர்த்தாபிசேகம் நோய் தீர்க்கும் அருமருந்தாகவும் பழவினைகளை அறுக்கும் பாபநாசத் தீர்த்தம் தருவதாக திகழ வேண்டும்மென்று எல்லாம் வல்ல முருகனை இறைஞ்சி ஆசி கூறுகிறேன்.

**பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை**

### மக்களின் வளர்ச்சியில் ஆலய வளர்ச்சி



வில்வமரத்தின் கீழ் வேலாக அமர்ந்த முருகன், மக்களின் மனங்களில் அமர்ந்து அவர் தமை ஆட்சி செய்து மக்களின் வளர்ச்சிக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பிரான்பற்று பெரியவளவு ஆலயம்பதி முருகப்பெருமானை, பார்ப்பவர்கள் அனைவரையும் கவரும் எண்கோண வடிவ நீரின் நடுவே பஞ்சரத தேர் வடி விலான கமலபீடமுடைய தீர்த்தக் கேணியின் திறப்பு விழா வில் மக்கள் அனைவரும் கலந்து எம் பெருமானின் திரு வருட்கடாட்சம் பெற்று பெரு வாழ்வு வாழ வேண்டு மென வாழ்த்தி வணங்குகின்றேன்.

**திருமதி உ.இராஜேஸ்வரி கணக்காளர், பிரதேச செயலகம், சங்கானை.**

### அட்டகோண அமைப்பில் தீர்த்தக் கேணி



திவ்விய திருவருளுக்குப் பாத்திரமாக விளங்கும் பிரான்பதியின் கண்ணே கோயில் கொண்டு விளங்கும் முருக மூர்த்தி கடவுளின் பேரருள் வளத்திற்கு ஆதாரமாக அமையப் பெற்ற "சரவணப் பொய்கை" அதன் திருநாமத்தால் மட்டுமன்றி அட்டகோண அமைப்பாலும் பேரழகு கண்டுள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற திருக்கோவிற் சிறப்புகளில் இன்று இவ்வாலயம் தீர்த்தச் சிறப்பினை இந்த சரவணப்பொய்கை என்ற தடாகத்தினால் பெற்றுள்ளது. அதுமட்டுமன்றி, "பிரான்பதிகம்" என்ற பாடல் தொகுதியால் இசைத் தமிழ் கண்டு பெரும்புகழ் படைத்த பேராலயமாகவும் திகழ்கின்றது. இத்துணை வளமும் அருளும் திவ்வியமும் நிறைந்த பெருமானை வணங்கி எனது வாழ்த்துச் செய்தியை சமர்ப்பிக்கிறேன்.

**துரை கணேசமூர்த்தி ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி.**

### தடாக வடிவமைப்பாளரின் ஆசிச்செய்தி



அழகொளிரும் முருகன் ஆடல் புரிதற்குகந்ததும் அருளைக் குறிப்பதுமாகிய தீர்த்தத் திருவிழாவன்று எம்பெருமான் வள்ளி, தெய்வானையோடும் எழுந்தருளி ஆடல் புரிதற்கு ஏற்ற எண்கோணத் தடாக மண்டபத்தை அமைப்பதற்கு எனக்குக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தைப் பெருமையாகக் கருதுகிறேன். ஆகவே அவனருள் கூட்ட அமைந்த இந்த மண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு அவனடி வணங்கி அகம் மகிழ்வதில் பெருமையடைகின்றேன்.

**எல்லாம் அவன் செயல்**
**எனதென்று ஒன்றும் இல்லை**
**வல்லவன் முருகன் ஆணை**
**வழியினில் நடப்போம் வாழி.**

**நீர்வாக இயக்குநர் ச.முருகபரன்**
**Blue Stone Construction, மல்லாகம்.**

**பொய்கை நிர்மாண, பிரவேசவிழா அனுசரணையாளர் - நடராசா கனகதாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NORTHERN CENTRAL HOSPITALS (PVT) LTD.

342, PALALY ROAD, JAFFNA

**Employment opportunities**

Applications are invited from candidates, preferably graduates of Allied Health Sciences and those with experience of working in a hospital in similar capacities to work in the cardiothoracic unit to be established in a modern multispecialty hospital in Jaffna for the following posts:

1. Cardiac ICU Nurses 2. Perfusionists
3. Biomedical technicians

Candidates selected for the above posts will be provided specialized training in cardiothoracic units locally and overseas.

Applications are also invited for the following posts:

1. Ambulance driver
2. Nursing officers (Male/ Female)

Applications with full bio- data should reach the undersigned on or before 15 th September 2012 and addressed to:
Director, Human Resources
Northern Central Hospitals
342, Palaly Road, Jaffna, Srilanka. (சி/2985)

## வவுனியாவில் மூக்கைப் பொத்தும் பயணிகள்

வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள மலசல கூடத்தின் கழிவுகள் காலை வேளையில் அகற்றப்படுவதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பயணிகளும் பொது மக்களும் இதனால் மூக்கைப் பொத்தியபடியே தமது போக்குவரத்தை செய்ய வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

நகரசபைக்குச் சொந்தமான இந்த மலசல கூடத்தின் கழிவுகள் காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட வேளையில் கழிவு அகற்றும் இயந்திரத்தின் மூலமாக நகரசபை ஊழியர்களால் அகற்றப்பட்டு வருகின்றன. இதன் போது அருவருப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் பெரும் துர்நாற்றம் வீசுவதால் பஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் வர்த்தகத்தை மேற்கொள்ளும் வர்த்தகர்களும் பஸ் நிலையத்துக்கு வந்து செல்லும் பயணிகளும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நகரசபையினரிடம் தெரிவித்த போதிலும் எவ்வித மாற்று ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாம் மூக்கைப் பொத்தியபடி எவ்வளவு காலம்இந்த அசௌரியத்தை எதிர்நோக்குவது எனவும் பாதிக்கப்படுபவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இரவு வேளையில் இந்தக் கழிவுகளை அகற்றித் தமக்கு நிவாரணம் வழங்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனார்.

(ங-க-402)

**Personal class**

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English personal class, Spo-ken With Grammar கற்க விரும்புபவர்களுக்டகும் (No age limit) வீடுகளுக்கும் வந்து கற்பிக்கப்படும். (O/L மாணவர்களுக்கு paper class உம் நடைபெறும்)

தொடர்பு-
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 0778131457
[பிரபல ஆசிரியர்]

**முன்பள்ளி ஆசிரியர் தேவை**

யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபை நடத்தும் நாவலர்சோலை முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்பிப்ப தற்கு ஆசிரியர் தேவை. க.பொ.த.சாதாரண பரீட்சை யில் கணித பாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். முன் அனுபவம் உள்ளவர் கள் விரும்பத்தக்கது. இத்தகைய தகைமைகள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை 10.09.2012ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும். சம்பளம் நேரில் பேசி முடிவு செய்யப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர், சைவ பரிபாலன சபை,
66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் (22193)(5-6)

**வாடகைக்கு உண்டு**

கே.கே.எஸ். றோட், கொக்குவில் சந்தியில் சகல வசதிகளும் கொண்ட வீடும், புதிய கட்டடக் கடையும் வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களும் வியாபார ஸ்தலங்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு:
077 0059394, 0718141506 (22199)

**காணி விற்பனைக்கு**

ஒட்டுவெளி, மிருசுவில் A9 வீதியிலிருந்து ¼ Km தூரத்தில் 25 பரப்புக் காணி (பிராமணன் வளவு) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
0779481110, 0774087674 (21510)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 * 06 * 1981



சந்நிதி அடியில் 25 * 08 * 1999

*அமரர். திருமகள் கனகசபை*
*திதி: சதுர்த்தசி*

திரு விற்கு இலக்கணமாய் எம் வீட்டை
திளைக்க வைத்த திருமகளே...

பாலனவன் தேரேறி வீதியுலா வரும்
பாங்கினை காண நீ சென்ற வேளை - அவன்
பாதமதில் உறையும் பேறுபெற்று ஆண்டுகள்
பதின்மூன்று ஆனதம்மா.

தினம் தினம் உன் நினைவுகள் வாட்ட
தவியாய் தவிக்கின்றோம் நாமிங்கு ஆயினும் கந்தன்
திருவடியில் நீ நிம்மதி காண்கிறாய் என்ற
திருப்தியுடன் தேற்றுகிறோம் நம்மை நாமே.

நி.மு.
மீசாலை வடக்கு, மீசாலை.
த.மு.
125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர். (22352)

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலியும் 22 ஆவது பிறந்த தினமும்

மண்மகிழ 30 * 08 * 1990



மனம்நெகிழ 15 * 08 * 2008

*செல்வி*
*பத்மஜா கணேசலிங்கம்*

பத்து மாதம் சுமந்து பெற்று பாலூட்டி
பக்குவமாய் வளர்த்தெடுத்து
பள்ளி சென்று நீ பயின்று
பாரினிலே உயர்ந்திடுவாயென
பார்த்திருந்த வேளையிலே நீயும்
பாதியிலே எமை பரிதவிக்க விட்டு
பாதை மாறி சென்றதும் ஏனோ
பாரினிலே மீண்டும் பிறப்பாயென
பாசமுடன் பார்த்திருக்கும் உன் உறவுகள்

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (சி-2986) குடும்பத்தினர்.

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 12 - 06 - 1941



மறைவு 15 - 08 - 2012

அமரர் இராஜேஸ்வரி சுப்பிரமணியம்
(இராசாத்தி)

கடந்த 15.08.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி இராஜேஸ்வரி சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (30.08.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஈஸ்வரி பவனம்,
காளி கோயிலடி,
கோப்பாய் மத்தி. குடும்பத்தினர். (22355)

**PATRICIAN INSTITUTES**

**பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்**

புதிய பயிற்சிகள் ஆரம்பம்

ஆரம்பம் 03.09.2012

**Computer courses**
Advanced in computer programming, Diploma in Microsoft Office, Diploma in Desk Top Publishing, Diploma in Video Editing, Diploma in Type Setting, Diploma in Computerized Accounting, Diploma in Software Engineering, Diploma in Micro media, Diploma in Web Multimedia. Professional Diploma in Graphic Design, Computer Hardware Technology, Internet & E-mail, General Information Technology (GIT), Information & Communication Technology (ICT), Children' s Kids

**Typing courses**
Short Hand Typing (English), Short Hand Typing (Tamil),

**Engineering Courses**
General Motor Mechanism, Motorcycle Mechanism, General Electrician (Wiring & Re-winding), Radio & T.V Repairing, Lathe Machine Operation, Arc Welding, Carpentry (with use of machinery), Refrigeration and Air Conditioning.

மேலதிக விபரங்களுக்கு
Registrar, Patrician Institute, 61,St.Patricks Road, Jaffna. T.P.NO.021 222 6148 (சி/2983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org